பேசும் படம்

ஜனவரி 1955 . . . . 12 அணா

N211,N42;D
N55.13.5

89682

179
1-55

"காலமெனும் மண்மீது அழிச்சுவட்டைக் கண்டு
கடவுள் தந்த உடலிதை பயன்படுத்திக் கொண்டு
ஞாலமிசை நல்லவராய் வாழ்ந்திடவே பண்டு
ஞான முனிவோர்கள் எல்லாம் செய்தார்கள் தொண்டு"

ஜெமினி
ஔவையார்
மீண்டும் உங்களை மகிழ்விக்க
ஜனவரி 14 உ முதல்
சென்னை
வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி
மூன்று தியேட்டர்களிலும் மற்றும் தமிழ்நாடெங்கும்

ஜெயந்தியின்
அடுத்த தயாரிப்பு

கவர்னர்ஸ் கப்

ஸ்டுடியோ:
வாஹினி

தமிழ் & தெலுங்கு

டைரக்ஷன்:
ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி. B. A.

சிகரத்தில் உயர்ந்தது
எவரெஸ்ட்



பட்டணம்பொடியில்
உயர்ந்தது
என்.வி.எஸ்

மாருத உண்மைகள்!

பர்வத சிகரங்களில் உயர்ந்தது எவரெஸ்ட்!
பட்டணம் பொடிகளில் சிறந்தது என். வி. எஸ்.!

அதனுல்தான் அறிவாளிகள் அனைவரும் எப்போதுமே
N. V. S பட்டணம் பொடியையே
உபயோகிக்கிருர்கள்.

N.V.ஷண்முகம் கம்பெனியார்

தந்தி: மூக்குத்தூள்

போன்: 4071

த.பெ.555. வண்ணுரப்பேட்டை, மதருஸ் – 21

அழகிய போட்டோக்களுக்கும்
அருமையான பிளாக்குகளுக்கும்
கிளான் அண்ட் பெயரல்,
போன்: 84167. 30, மவுண்ட் ரோடு, மதராஸ்-2. தந்தி: கிளான்பெயரல்

படம் 13

காட்சி 5

பேசும் படம்

★ ஜனவரி 1955 ★

1. "காற்றினிலே வந்தது..." ... 6
2. ஸ்டியோ விஜயம் ... 8
3. செய்திச் சுருள் ... 14
4. ஏ. பி. நாகராஜன்-சூர்யகலா (மூவர்ணப் படம்) ... 18
5. டி. கே. ராமச்சந்திரன்-ராகினி (மூவர்ணப் படம்) ... 19
6. குசலகுமாரி (வாழ்க்கைச் சித்திரம்) ... 21
7. எதிர்பாராதது (திரைக் கதை-வசனம்) ... 30
8. மேனகா (இரு வர்ணப்பட அநுபந்தம) ... 37
9. வாழ்விலோர் திருநாள் (புது அம்சம்) ... 45
10. வட இந்திய வெள்ளித்திரை ... 51
11. புகழ் தந்த பாத்திரம் (புது அம்சம்) ... 54
12. அவாவுடன் கண்ட ஆவா (ராகினி) ... 58
13. வீரசுந்தரி (இரு வர்ணப்பட அநுபந்தம்) ... 61
14. கண்டேன் கண்டேன் ... 66
15. என் முதல் அனுபவம் (சிவாஜி கணேசன்) ... 74
16. 1954 வ நக்ஷத்திய வெளியீடுகள் ... 75
17. நல்ல தங்கை (படக்காட்சிகள்) ... 81
18. நான் ரஸித்த காட்சி ... 85
19. கேள்வி பதில் ... 89
20. தபால் பெட்டி ... 94
21. 'பேசும் படம்' டைரி ... 96
22. பி. லீலா (பின்னணிக் குயில்) ... 124

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

காற்றினிலே வந்தது செய்தி...

சென்ற மாதம் 5-ம் தேதி காலை ரேடியோ செய்திப் பகுதியில் ஆசிரியர் 'கல்கி' அவர்கள் காலமான செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டோம். காற்றினிலே வந்த அந்தச் செய்தியைக் கேட்ட நம் கண்களில் ஊற்றெனப் பெருகியது கண்ணீர்.

"கல்கி இருக்கிறார். நமக்கு எவ்வித கவலையும் இல்லை" என்று எந்தவித கவலையும் பொறுப்பும் இல்லாதிருந்த தமிழ்நாட்டின் – முக்கியமாக எழுத்தாளர்களின் தலையிலே அத்தனை பொறுப்புக்களையும் சுமத்திவிட்டு அவர் போய்விட்டார். மூச்சுள்ளவரை உழைப்பதில் உறுதி கொண்ட பேனா சக்ரவர்த்தி 'கல்கி' அவர்கள் கடைசி மூச்சுவரை பணிசெய்து மறைவிலே தான் ஓய்வுகண்டார். அவர் வளர்த்த தமிழை வளர்ப்பதும் அவர் செய்த நற்பணிகளைத் தொடர்ந்து செய்ய உறுதி பூணுவதுமே நமக்கு ஆறுதல் தரும்.



அமரர் 'கல்கி'

பிறந்த பொன்னாட்டுக்குப் பெருமை தேடித் தந்த மேதை 'கல்கி' நம்மைப் பிரிந்து விண்ணுலகேகி விட்டார். தலைவனை இழந்த குடும்பம்போலத் தமிழ் அவரை இழந்து தவிக்கிறது. "கல்கி" என்ற வார்த்தைக்கு 'வாழ வைப்பது' என்ற அர்த்தம் உண்டு போலும். அதனால்தான் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அந்தப் புனைப் பெயரை வைத்துக்கொண்டிருக்கவேண்டும். அவர் பிறந்தார்-தமிழ்நாட்டுக்கு - தமிழுக்கு நல்லது பிறக்க ஆரம்பித்தது. அவர் வளர்ந்தார்; தமிழ்நாடு எல்லா வகையிலும் வளர்ந்தது. பண்பாடு வளர்ந்தது; தமிழ் வளர்ந்தது; சமூகம் உயர்ந்தது; கலைகள் வளர்ந்தன; மக்கள் அறிவு வளர்ந்தது; அரசியல் விழிப்பு ஏற்பட்டது. நற்காரியங்கள் அத்தனையும் வளர்ச்சி பெற்றன.

நம் தமிழ் நாட்டில் பல மேதைகள் பிறந்திருக்கிறார்கள். கதை எழுதினார்கள்; தேசப்பணி புரிந்தார்கள்; பாட்டெழுதினார்கள்; பொதுச் சேவையிலீடுபட்டார்கள். தனித்தனியாக ஒவ்வொரு துறையிலும் பணி புரிந்தார்கள். எல்லாவற்றையும் ஒருவராகச் செய்யவில்லை. 'கல்கி' ஒருவர் தான் எல்லாம் ஒருவரேயாகிப் பணி புரியும் பேறு பெற்றார்.

'கல்கி' அவர்களின் சேவை அதிருஷ்டவசமாகச் சினிமா உலகிற்கும் கிடைத்தது. பட உலகின் புகழ் பெருகியதற்கு அவரது "தியாக பூமி" ஒரு காரணமென்றால் அது மிகையாகாது. அரசியல் தத்துவத்தையும் வாழ்க்கை நடப்புகளையும் வெளிப்படுத்திய அக் கதை படமாக்கப்பட்ட போதுதான் பட உலகில் புதிய சகாப்தம் ஆரம்பமாகியது; யாவரது திருஷ்டியும் பட உலகின் மீது பதிந்தது. 'கல்கி'யின் மேதை சுடர் விட்டுப் பிரகாசித்தது 'மீரா' படத்தில்தான். சொற் சுவையும் பொருட் சுவையும் நிறைந்த அவரது பாடல்களும் வசனமும் ஒவ்வொருவர் உள்ளத்தையும் உலுப்பி விட்டன. 'காற்றினிலே வரும் கீதம்' என்ற கீதத்தை யாராவது மறக்க முடியுமா? 'கல்கி' அப் படத்திற்கு அதியற்புதமாக வசனம் அமைத்திருந்தார்.

'கல்கி' அவர்களின் 'பொய்மான் கரடு' கதை படமாக்கப்பட்டது. அவர் வாழ் நாளில் திரையிடப்பட்ட

...ஊற்றெனப் பெருகியது கண்ணீர்



'கல்கி'யின் 'பொய்மான் கரடு'
(பொன் வயல்) ஆரம்ப விழாவின்போது
எடுக்கப்பட்ட படம்

கடைசி படம் 'பொன் வயல்' தான். தற்போது அவரது 'கள்வனின் காதலி' ரேவதி புரொடக்‌ஷன்ஸாரால் படமாக்கப்பட்டு வருகிறது. அவரது மற்ற நவீனங்களும் சரித்திர நாவல்களும் படமாக்கப்பட வேண்டும். சமூகம் என்ற போர்வையிலே வெளியிடப்படும் சிருங்கார ரஸப் படங்களைவிட நவரஸங்களையும் அளவோடு பொருத்தி 'கல்கி' அவர்கள் எழுதியுள்ள "சிவகாமியின் சபதம்" "பார்த்திபன் கனவு" "அலை ஓசை", "மோகினித் தீவு", "பொன்னியின் செல்வன்" போன்ற கதைகளைப் படமாக்க வேண்டும்.

அவருடைய கலை விமர்சனங்களுக்கே எப்பொழுதும் ஒரு அலாதி மதிப்பு. நாடகம், நடனம், சங்கீதம் முதலிய லளித கலைகள் பொது மக்களிடையே பெரு மதிப்பு பெறுவதற்கு அவருடைய விமர்சனங்கள்தான் பெரும் அஸ்திவாரங்களாக அமைந்தன. இம் முறைக்குச் சற்றும் குறையாதபடி அவருடைய சினிமா விமர்சனங்கள் ஒரு படத்தின் தரத்தையும் மதிப்பையும் பல படிகள் உயர்த்தின. 'கல்கி'யின் பேனுவன்மையை நன்கு அறிந்திருந்த அனுபவசாலியான ஸ்ரீ வாஸன் 'ஔவையா'ரை 'கல்கி'க்கென தனிப்பட்ட முறையில் திரையிட்டுக் காண்பித்தார். அடுத்த இரண்டு கல்கி இதழ்களிலும் 'ஔவையார்' விமர்சனம் தொடர்ந்து வெளியிடப்பட்டது. "ஔவையா"ரின் சித்திரமும், 'கல்கி' அட்டையை அலங்கரித்தது.

இதர தயாரிப்பாளர்களும் தங்கள் படங்களுக்காக 'கல்கி'யின் உதவியை நாடியிருக்கிறார்கள். தமது பத்திரிகையின் மூலம் சினிமா விமர்சனங்கள், சினிமாவுக்கு ஆக்கந்தரும் ஆலோசனைகள் முதலியவைகளை அளித்ததும் அன்றி தணிக்கை போர்டின் அங்கத்தினராகவும் இருந்து பெரும் பணியாற்றியிருக்கிறார். தணிக்கை போர்டு அங்கத்தினராக அவர் இருந்த காலத்தில் அவருடைய ஆலோசனைகளுக்கும் சிபார்சுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அனுதாபத்தோடு படத் தயாரிப்பாளர்களின் நிலையை ஆராய்ந்தார். அதே சமயம் பொதுஜன நன்மையையும் அவர் மறக்க மாட்டார்.

கடைசி காலத்தில் அவர் தமது பத்திரிகையில் எழுதி வந்த 'அமரதாரா' என்ற தொடர் கதைகூடத் திரைக்கெனவே எழுதப்பட்டதாக அறிகிறோம். இதிலிருந்து அவரது பலவேறு துறைப் பணிகளிடையே தமிழ்த் திரையுலகிற்கும் அவர் தமது சேவையைத் தொடர்ந்திருக்கிறார் என்றாகிறது. இறுதிவரை தமிழ் நாட்டுக்கென உழைத்த கல்கியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்டூடியோ விஜயம்

என்லார்ஜர்

சென்ற மாதம் ஒரே மழை பொழிந்து தள்ளி விட்டது. அதனால் ஸ்டூடியோக்களுக்கே போக முடியவில்லை. ரஸிகர்களுக்கு ஸ்டூடியோக்களைப் பற்றிய செய்தியைக் கொடுக்க முடியாது போய் விடுமோ என்றுகூடப் பயந்து விட்டேன். நல்லகாலமாக மாத இறுதியில் சில படப்பிடிப்புகளுக்குப் போக முடிந்தது.

அன்ருெரு நாள் ரோஹிணி ஸ்டூடியோவுக்குப் போயிருந்தேன். அங்கே 'சக்குபாய்' படப் பிடிப்பு நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். 'செட்'டிற்குள் நுழையும்போது டைரக்டர் பஞ்சு ரொம்பவும் அன்புடன் வரவேற்ருர். அவரோடு உள்ளே சென்றேன். "இன்று எந்தக் காட்சி படமாக்கப்படுகிறது ?" என்றேன்.

"நிஜ சக்குபாய் ஜலம் மொண்டு திரும்புகிருள். அவளைப் போன்ற வடிவில் நிற்கும் பண்டரிநாதனும் அப்படியே செய்கிருன். யாவரும் திகைக்கின்றனர். நிஜ சக்குபாய் கதறுகிருள். ஆண்டவன் தரிசனம் தந்து உண்மையை விளக்குகிருர். இந்தக் காட்சி படமாக்கப்படவிருக்கிறது" என்ருர். அதற்கு முந்திய தாகச் சுடப்பட்ட காட்சியின் தொடர்ச்சியும் முதலில் படமாக்கப்பட்டது.

வீட்டின் ஹாலில் இருவர் நாற்காலிகளில் உட்கார்ந்திருக்கின்றனர். ஒருவர் நிற்கிருர். அவர்கள் தவிர, பல ஆண்களும் பெண்களும் கீழே உட்

"ஒரு ஸீட்தான்?" 'மிஸ்ஸியம்மா'வில் பஸ் கண்டக்டர்

கார்ந்திருக்கிறார்கள். நிற்பவர்தான் சக்குபாயின் கணவர். அவருக்கு அருகே இருப்பவரிடம் மற்றவர் கலங்கும் கண்களுடன் ஒரு நகை மூட்டையை அவிழ்த்துக் காட்டுகிறார். அதைப் பார்த்து சக்குபாயின் கணவர் 'ஹா'...என்று ஆச்சரியப்பட்டு, "அம்மா! இதெல்லாம் சக்குவின் நகைகளே!" என்கிறார். "பாண்டுரங்கா! இதென்ன சோதனை?" என்கிறார் மற்றவர். சக்குவைப்பற்றி அம்மூவரும் அனுதாபப்படும் இக்காட்சியைத் தொடர்ந்துதான் டைரக்டர் பஞ்சு சொன்ன காட்சி படமாக்கப்பட்டது. பண்டரிபாய் நிஜ சக்குபாயாகவும், மைனாவதி சக்கு வேஷதாரியாகவும் தோன்றுகிறார்கள். பண்டரிபாயின் மூத்த சகோதரரும் இப்படத்தில் பிரதான பாகத்தில் நடிக்கிறார். பண்டரிபாயின் சொந்தக் கம்பெனியான பாண்டுரங்கா பிக்சர்ஸார் தயாரிக்கும் இந்த கன்னட 'சக்குபாய்' படத்தை கிருஷ்ணன்–பஞ்சு இருவரும் டைரக்ட் செய்கின்றனர். படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.

'நள்ளிரவில் நடந்தது' படத்தில் கண்ணப்பா இப்படித் தோன்றுகிறார்

பக்ஷிராஜா ஸ்டுடியோவில் 'ஆஜாத்' ஹிந்திப்படப் பிடிப்பின்போது கலைஞர்களுடன் புரொட்யூஸர்–டைரக்டர் எஸ். எம். எஸ் நாயுடு

'எல்லாம் இன்ப மயம்' படத்தில் தோன்றுகிறார் 'பொட்டை' கிருஷ்ணமூர்த்தி

"எப்போது வரும்?" என்று காத்திருந்த அந்த பஸ் ஆடி அசைந்து ஸ்டாண்டில் வந்து நின்றது.

பஸ்ஸ்டாண்டிலே, அந்தப் பஸ்ஸின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்த அந்த இருவரது முகங்களிலும் ஆனந்த ரேகை படர்ந்தது.

அவர்களிலே ஒருவன் வாலிபத்தின் ஆரம்பப் படியிலே நின்றிருந்தான். அவனுடன் அங்கு பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்த மற்றொரு மங்கைக்கு பதினெட்டு வயதுதான் இருக்கும். பார்க்கப்போனால் இருவரும் ஒருக்கால் தம்பதிகளாக இருக்கக் கூடுமோ என்ற எண்ணம் எனக்கு எழுந்தது.

பஸ்ஸிலே ஏற இருவரும் முயன்றனர். கண்டக்டர் கண்டிப்பான பேர் வழி! சர்க்கார் விதி முறைகளுக்குக் கட்டுப்படுபவன்; அல்லது அப்படி நடிப்பவன்!

"இதோ பாருங்க, ஒருத்தருக்குத் தான் பஸ்ஸிலே இடமிருக்கு. யார் வேணும்னாலும் ஏறிக்கலாம்" என்று ஆணித்தரமாகச் சொன்னான் அந்த கண்டக்டர்.

தர்மசங்கடமான நிலையில் நின்று கொண்டிருந்த அந்த இருவரும் ஒருவரை யொருவர் உற்றுப் பார்த்துக் கொண்டனர். பின்னர் சேர்ந்தாற் போல் பஸ் கண்டக்டரைப் பார்த்தனர்!

அவர்களது பார்வை நாங்கள் தனித்தனியே பிரயாணம் 'செய்ய முடியாது' என்பதை பளிச்சென்று படம் காட்டுவதைப்போல் எடுத்துக் காண்பித்த போதிலும், கண்டக்டரின் கண்களுக்கு அது தெரியவில்லை. கடைசியில் அந்தப் பஸ் அவர்களை ஏற்றிக் கொள்ளாமலேயே சென்று விட்டது! அது எழுப்பிய புகை மண்டலத்தைப் போல அந்த இருவரது மனமும் புகைந்து கொண்டிருந்தது.

'மிஸ்ஸியம்மா'வில் இந்த ரஸமான சிறு காட்சி வருகிறது. இதற்காக வாஹினி ஸ்டூடியோவை அடுத்த 'சந்தமாமா பிரசுரங்கள்' காரியாலயத்தில் ஒரு பஸ் ஸ்டாப்பையும் ஏற்படுத்தி ஒரு தற்காலிக 'ஸ்டாண்'டையும் விஜயா புரொடக்ஷன்ஸார் நிர்மாணித்திருந்தார்கள்.

பஸ்ஸில் இடம் கிடைக்காமற்போய் நமது அனுதாபத்தைப் பெறும் பிரயாணிகளாக ஆர். கணேசனும், சாவித்திரியும் நடித்தார்கள். ஜெமினி கணேசனும் சாவித்திரியும் இந்தக் கட்டத்திலெல்லாம் சக்கைப்போடு போட்டிருக்கிறார்கள்.

விஜயாவின் 'மிஸ்ஸியம்மா' ஒரு ஹாஸ்யச் சித்திரம். பிரஸாத் டைரக்ட் செய்து வரும் இப்படத்தை பொங்கற் பரிசாக ரஸிகர்களுக்கு அளிக்க விஜயா புரொடக்ஷன்ஸார் முடிவு செய்திருக்கின்றனர்.

'மிஸ்ஸியம்மா'வில் ஜெமினி கணேசன், சாவித்திரி இருவரையும் தவிர, ஜமுனா, கே. சாரங்கபாணி, நம்பியார், ஏ. கருணாநிதி மற்றும் பலரும் நடித்து வருகிறார்கள்

ரேவதியில் 'நள்ளிரவில் நடந்தது' ஒரு நாள்! அன்று நானும் தற்செயலாக அங்கு இருந்தேன்.

ஒரு பெரிய ஹாலில் அச்சம்பவம் நடைபெற்றது. அங்கிருந்த ஒரு இரட்டைக் கட்டிலில் இரண்டு பேர் படுத்துக்கொண்டிருந்தார்கள்.

இருவரது உடலும் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தன.

'ஏன், எதற்காக இவர்கள் இப்படி பயப்பட்டு நடுங்க வேண்டும்?' என்றறிய என்மனம் ஆவல் கொண்டது.

மேலும் நெருங்கிப் பார்த்தேன். நான் கண்ட காட்சி என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டது!

அங்கே கட்டிலில் டி. ஆர். ராமச்சந்திரன் படுத்திருந்தார். அவருக்கு அருகே நடிகர் தங்கவேலு இருந்தார். இருவரும் எதற்காக பயந்து நடுங்கிச் சாகவேண்டும் என்ற விஷயம்தான் எனக்குப் புதிராக இருந்தது!

அப்போது தங்கவேலு, ராமச்சந்திரனிடம் யார் பெயரையோ சொல்லி "அவரை விசாரிக்கவும் என்று எழுது" என்று திக்கித் திக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார். ராமச்சந்திரன் தட்டுத் தடுமாறி எழுதிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்திலே "ஹஹ்ஹஹ்ஹ்ஹா" என்ற கோரமான சிரிப்பொலி அந்த ஹாலிலே திடீரென எழுந்தது. மயான அமைதி நிலவிக் கொண்டிருந்த அந்த இடத்தில் திடீரென எழுந்த இந்தச் சிரிப்பொலி பயங்கரமாக எதிரொலித்தது.

அதே சமயம் சிரிப்பொலி வந்த இடத்தை நான் திரும்பிப் பார்த்தேன்.

நெடிதுயர்ந்த ஒரு பயங்கர உருவம் கையைப் பயங்கரமாக ஆட்டியபடி மெல்ல நடந்து ராமச்சந்திரனையும் தங்கவேலுவையும் நோக்கிச் சென்றது.

"ஐயோ பிசாசு !" என்று ராமச்சந்திரனும், தங்கவேலுவும் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டனர்.

சிரிப்பை எழுப்பிய அக்கரிய உருவம் சிரித்துக் கொண்டே பக்கத்து செட்டில் திரும்பி மறைந்து விட்டது!

ஒருவழியாக இச்சம்பவம் முடிவடைந்தபின் ராமச்சந்திரனும், தங்கவேலும் வெளியே வந்தார்கள்.

"உங்களைப் பயமுறுத்திய அந்தப் பயங்கர உருவம் எது? எதற்காக அப்படிச் செய்கிறது ?" என்று கேட்டேன்.

"நான்தான் அந்தப் பிசாசு !" என்று தன் முகத்திலிருந்த முகமூடியை எடுத்துவிட்டு பதில் சொன்ன நபரைக் கவனித்தேன். என். என். கண்ணப்பா நின்றிருந்தார் சிரித்துக் கொண்டு.

"இவ்வளவும் நள்ளிரவில் நடந்த ஒரு சம்பவத்திற்குத்தான். படத்தின் தலைப்புதான் இதைச் சொல்லி விடுகிறதே !" என்று தொடர்ந்து விளக்கமும் கொடுத்தார் கண்ணப்பா.

டி. ஆர். ராமச்சந்திரனும் தங்கவேலுவும், 'நள்ளிரவில் நடந்தது' படப்பிடிப்பின் இடைவேளையில்

முடிவடையும் தறுவாயிலிருக்கும் சில நல்ல படங்களில் எம். ஏ. வி.யின் 'பெண்ணரசி' யும் ஒன்று. கோவை சென்டிரலில் சோமு வின் டைரக்ஷனில் உருவாகி வருகிறது இப்படம்.



இதன் கதை - வசனகர்த்தாவான ஏ. பி. நாகராஜனுடன், நம்பியார், ஏ. கருணாநிதி, சூர்யகலா, ரத்னம், சுலோசனா முதலியவர்களும் நடிக்கிறார்கள். கண்ணாம்பா பிரதான கதாபாத்திரமான பெண்ணரசியாக நடிக்கிறார்.

செய்திச் சுருள்

'கஸ்தூரியின் மேனகா'

மதராஸ் பிக்சர்ஸாருக்காக வி. ஸி. சுப்பராமன் தயாரித்து டைரக்ட் செய்திருக்கும் கஸ்தூரி பிலம்ஸின் 'மேனகா' புத்தாண்டின் முதல் வெளியீடாக தமிழ் நாடெங்கும் வெளிவருகிறது. வடுவூராரின் தலைசிறந்த நவீனங்களில் ஒன்ருன 'மேனகா' இரண்டாவது தடவையாக தற்போது தயாராகி யிருக்கிறது. லலிதா, ராகினி, கே. ஆர். ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், சாரங்கபாணி முதலியோர் நடிக்கும் இப் படம் பிலம்செண்டரில் தயாரானது.

'மிஸ்ஸியம்மா' வருகிருள்

தமிழர் திருநாளான பொங்கல் தினத்தன்று, தமிழ் ரஸிகர்களை களிப் புக்கடலில் ஆழ்த்த மிஸ்ஸியம்மா வரப்போகிருள். விஜயாவின் இப் படம் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும நகைச்சுவை சித்திரமாகும். ஜெமினி கணேசன், சாவித்திரி இருவரும் இதில் பிரதான பாகங்களில் நடிக்கிருர்கள். வேலை கிடைப்பதற்காக திருமணம் நடந்தேறியதுபோல் கதாநாயகனும், கதாநாயகியும்போலி நாடகம் நடத்த, அதனுல் ஏற்படும் பல விசித்திர நிகழ்ச்சிகளை படக் கதை சித்தரிக்கிறது. பிரஸாத் படத்தை டைரக்ட் செய்திருக்கிருர்.

'மதியும் மமதையும்' கதாநாயகி ராஜேஸ்வரி தற்போது முல்லை வனம், சாந்த சக்குபாய், தோழன் ஆகிய படங்களில் நடித்து வருகிருர்.

தயாராகும் 'தமிழ்க்குமரி'

மு. கருணநிதி எழுதியுள்ள 'ஒரே முத்தம்' கதையை, 'தமிழ்க்குமரி' என்ற பெயரில் திரைப்படமாக வெளியிட மாடர்ன் தியேட்டர்ஸில ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ராம்னுத் படத்தை டைரக்ட் செய்வார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

'விப்ர நாராயண' விஜயம்

பானுமதி தயாரித்து, நடித்திருக்கும் 'விப்ரநாராயண' தெலுங்குப்படம் ஆந்திர நாட்டில் அமோக வெற்றி பெற்றுள்ளது. இதே படத்தை தமிழிலும் தயாரித்து வெளியிட பானுமதி திட்டமிட்டுள்ளார். இதற்கான ஆக்க வேலைகள் தற்போது பரணி ஸ்டுடியோவில் மும்முரமாக நடை பெற்று வருகின்றன.

வள்ளியின் செல்வன்

ஜெமினி ஸ்டுடியோவில், யுனைடெட் பிலம் ஆர்ட்ஸ் தயாரித்து வரும் தமிழ்ப் படத்திற்கு 'வள்ளியின் செலவன்' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. இப் படத்தில் சுந்தரிபாய் தனக்கு முற்றிலும் மாறுபட்ட சோக பாகத்தை ஏற்று திறம்பட நடித்திருக்கிருராம். டி. எஸ். துரைராஜ், லலிதா, ஜெமினி கணேசன் மற்றும் பலரும் 'வள்ளியின் செல்வ'னில் நடித்து வருகிருர்கள். ப்ப்ரவரி வெளியீடான இப் படத்தை கொத்தமங்கலம் சுப்பு டைரக்ட் செய்து வருகிருர்.

திரையில் 'ஒருநாள் திருடன்'

ஏ. எல். பிலம்ஸார் தயாரிக்கப் போகும் தமிழ்ப் படத்திற்கு 'ஒருநாள்

திருடன்' என்ற விசித்திர பெயரை வைத்துள்ளார்கள். திருவேங்கடம் இப் படத்தை டைரக்ட் செய்வார் என்று தெரிகிறது. எம். ஜி. ராமச்சந்திரன் மற்றும் பல பிரபல நடிகர்கள் இப் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார்கள்.

தமிழில் 'நடிகமணி'

ஜெயராஜ் புரொடக்ஷன்ஸார் 'நடிகமணி' என்ற படத்தை பிலிம் சென்டர் ஸ்டுடியோவில் தமிழில் தயாரித்து வருகிறார்கள். 'நடசேகரா' என்ற அவர்களது கன்னடப்படத்தின் தமிழ்ப்பதிப்பு இது. கன்னடப் படத்தில் நடித்த கல்யாண் குமார், வித்யாவதி இருவரும் தமிழ்ப்படத்தின் பிரதம பாகத்தில் நடித்து வருகிறார்கள். வி. வி. ராஜு படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

நாடகமே உலகம்

டி. ஆர். ராமச்சந்திரன். எஸ். வரலக்ஷ்மி, பிரண்ட் ராமசாமி, முத்துலக்ஷ்மி முதலியோர் நடித்து வரும் 'நாடகமே உலகம்' படம் நியூடோனில் மும்முரமாக தயாராகி வருகிறது. பராசக்தி பிக்சர்ஸின் இப்படத்தை எஸ். டி. எஸ். யோகியார் டைரக்ட் செய்து வருகிறார். 'உலகம் ஒரு நாடக மேடை' என்ற ஷேக்ஸ்பியரின் வர்ணனையை 'நாடகமே உலகம்' படக் கதை சித்தரிக்கிறது.

மாடர்னின் 'கதாநாயகி'

பத்மினி, எம். என். ராஜம், டி. ஆர். ராமச்சந்திரன், தங்கவேலு டி. கே. ராமச்சந்திரன் முதலியோர் நடித்து வரும் மாடர்னின் ஹாஸ்யப் படத்திற்கு 'கதாநாயகி' என்று பெயர் தரப்பட்டிருக்கிறது. ராம்னுத் டைரக்ஷனில் தயாராகும் 'கதாநாயகி' இம் மாத இறுதிக்குள் வெள்ளித்திரையில் காட்சி தருவாள,

வரப்போகும் 'நல்ல பிள்ளை'

வட இந்திய நடிகர் பகவான் தயாரித்த 'அல்பேலா' என்ற ஹிந்தி

வள்ளியும் செல்வனும்-யுபாவின் 'வள்ளியின் செல்வன்' படத்தில்



புபாவின் 'வள்ளியின் செல்வன்' படத்தில் இச்சிறுவர்களைப் பார்ககலாம்

படத்தை, ஈஸ்டர்ன் ஆர்ட் புரொடஷன்ஸார் தமிழில் 'டப்' செய்திருக்கிருர்கள். 'நல்ல பிள்ளை' என்று இப்படத்திற்கு பெயரும் வைத்திருக்கிருர்கள். பிப்ரவரி மாதத்திலே இப்படம் தமிழ் நாடெங்கும் திரையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

நாகூரின் 'குடும்ப விளக்கு'

நியூடோனில் தயாராகி வரும் நாகூரின் 'குடும்ப விளக்கு' ஒரு உயரிய சமூகசித்திரமாகும். 'சந்தேஹி' என்ற பெயரில் தயாராகி வந்த படத்திற்குத் தான் நாகூர் இப்புதுப் பெயரை அளித்துள்ளார். எம். வி. ராஜம்மா, ஜமுனா, நரசிம்மபாரதி முதலியோர் நடிக்கும் இப்படத்தில் கிருஷ்ணன் – மதுரம் ஜோடியும் சமீபத்தில் ஒப்பந்தமாகி யுள்ளனர்.

உலகம் பலவிதம்

நேஷனல் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான 'உலகம் பலவிதம்' படம் பிப்ரவரியில் திரையிடப் படும் என்று தெரிகிறது. லலிதா, சிவாஜி கணேசன், டி. கே. ராமச்சந்திரன், டி. ஆர். ராமச்சந்திரன் முதலிய நக்ஷத்திரங்கள் மின்னும் இப்படத்தை பீம்சிங் டைரக்ட் செய்து வருகிருர். படம் நியூடோனில் தயாராகி வருகிறது.

பார்வர்டின் 'நல்லதங்கை'

நடிகர் எஸ். ஏ. நடராஜன் தயாரித்து, டைரக்ட் செய்து வரும் 'நல்ல தங்கை' இம்மாத இறுதிக்குள் திரையிடப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாதுரிதேவி, ராஜசுலோசனா, வி. ஆர். ராஜகுமாரி, பாலய்யா, நம்பியார் மற்றும் பலர் நடிக்கும் இப்படம் ஒரு சமூக சித்திர மாகும்.

வெளியூர்க்காரர்களும் மற்றவர்களும் தங்குவதற்கு,

பலவித நவீன வசதிகளுடன் கூடியது.

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

"பேலஸ் லாட்ஜ்"

95, ஆற்காட் ரோட், கோடம்பாக்கம்

மதராஸ் பிக்சர்ஸ்
செந்தாமரையில்
லலிதா

★ எம். ஏ. வி.யின் 'பெண்ணரசி'யில்
ஏ. பி. நாகராஜனும் சூர்யகலாவும்.

'மேனகா' என்று நினைத்து, முக மூடியை நீக்கியதும், காணப் படுகிறவள் நூர் ஜஹான். டி. கே. ராமச்சந்திரன் – ராகினி.



விஜயாவின் மிஸ்ஸியம்மாவில் ஜெமினி கணேஷ் - சாவித்திரி
தோன்றும் ஒரு ரஸமான கட்டம்

குசல குமாரி

ஜெமினியின் 'ஔவையார்' படம் திரையிடப்பட்டதும் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதத்தில் அதன் சிறப்பைப் பாராட்டினார்கள். காட்சியமைப்பு, இசை, நடிப்பு என்று பல அம்சங்களைப் பாராட்டியவர்கள் ஒரு விஷயத்தை மட்டும் ரொம்பவும் விசேஷமாகக் குறிப்பிட்டார்கள். கன்னி ஔவையாக நடித்தவரின் அழகு முகத்தில் தெய்வீகக் களை இருக்கிறது என்றுதான் யாவரும் ஒருமுகமாகக் குறிப்பிட்டார்கள்.

அந்தப் பாத்திரத்திற்காக குசல குமாரியைத் தேர்ந்தெடுத்த ஜெமினி ஸ்தாபனத்தைப் பாராட்டாதவரில்லை.

சிறுமி ஔவை விநாயக பக்தை. அவள் விருப்பத்துக்கு மாறாக பெற்றோர் திருமண ஏற்பாடுகள் செய்கின்றனர். மணப்பெண் ஔவையை அலங்கார பூஷிதையாக அழகுக்கு அழகு செய்து விட்டிருக்கிறார்கள் தோழிகள். அப்போது ஔவை மண வாழ்வை வெறுத்து தனக்கு முதுமைப் பருவம் தந்தருள வேண்டி விநாயகப் பெருமானிடம் ஓடுகிறாள்.

வாழ்க்கைச் சித்திரம்

உட்கார்ந்து கொண்டேயிருந்து திடீரென ஒரு தீர்மானத்துடன் எழுந்து, முன்பக்கம் பின்னித் தொங்கவிடப்பட்டிருந்த கூந்தலை அலக்ஷியமாகத் தூக்கி பின்பக்கம் போட்டுவிட்டு, விடுவிடென்று போகும் வைராக்கியம் மிகுந்த ஔவையாக நடித்த குசலகுமாரியின் நடிப்பு நம்மைப் பிரமிக்கச் செய்து விட்டது.

இந்த குசலகுமாரி 'பராசக்தி' படம் மூலம் ரஸிகர்களுக்கு நன்கு அறிமுகமானார். ஆனால், குசலகுமாரி பட உலகில் பல நாளைய நக்ஷத்திரம் என்பது பலருக்குத் தெரியாது. அவர் பால பருவத்திலேயே சினிமா உலகில் நுழையக் காரணமாயிருந்தவர் படகிறது. சங்கீதத்திலே புகழ் பெற்று விளங்கிய தஞ்சை குஜலாம்பாளின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள். சங்கீதம், நடனம், நடிப்பு மூன்றிலும் அவர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். அதனால்தான் அந்தப் பரம்பரையினர் பட உலகில் பிரவேசித்து மிகப் பிராபல்யத்துடன் விளங்கி வருகிறார்கள்.

குஜலாம்பாளுக்கு பத்து குழந்தைகள் பிறந்தனர். ஐந்து பெண்களும் ஐந்து பிள்ளைகளும் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும், காலக்ஷேபம் செய்துகொண்டும்பிறந்திருக்க வேண்டும்! ஆமாம், கலை அவர்களது பரம்பரைச் சொத்து. பெண்களில் மூத்தவர் சரஸ்வதி அம்மாள்; கடைக்குட்டி எஸ். பி. எல். தனலக்ஷ்மி. சரஸ்வதி

உலகில் புகழோடு விளங்கிய எஸ். பி. எல். தனலக்ஷ்மியாகும்.

தஞ்சை ஜில்லா எத்தனையோ துறைகளில் புகழ் பெற்றிருக்கிறது. சங்கீதம், நடனம், சினிமா, கல்வி, அரசியல், பத்திரிகை என்று பல துறைகளில் மணியான நபர்களைத் தந்திருக்



அம்மாளின் குமாரிதான் நடிகை தமயந்தி. சரஸ்வதி அம்மாள் – தனலக்ஷ்மி இவர்களின் மற்ெருரு சகோதரியின் புதல்விதான் பிரபல நக்ஷத்திரம் டி. ஆர். ராஜகுமாரி. இயற்கையிலேயே நல்ல களை பொருந்திய அழகான முகம் தமயந்தியினுடையது. அவரது அழகும் திறமையும் பட உலகில் பரிபூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை. தமயந்தி அழகு பொம்மையாக மட்டும் இருந்து விடாமல் காலக்ஷேபம், வாய்ப்பாட்டு, வீணை, பரத நாட்டியம் முதலிய கலைகளில் நன்கு பயிற்சி பெற்ருர். இந்தக் கலைகளுடன் மட்டுமே திருப்தியடைந்திருந்த அவர் பட உலகில் நடிக்க வேண்டுமென்று பிரமாதமான விருப்பம் கொண்டிருக்கவில்லை. அவரது சித்தியான எஸ். பி. எல். தனலக்ஷ்மி 1935-ம் வருஷத்தில் 'பார்வதி கல்யாணம்' படத்தில் நடிப்பதற்காக சென்னை வந்தபோது அவரும் ஷூட்டிங்கைப் பார்க்கவும் சென்னையைக் குஷாலாகச் சுற்றிப் பார்க்கவும்தான் வந்தார். ஆனல் அவரது களை பொருந்திய அழகிய முகத்தையும் அதில் காணப்பட்ட பாவங்களையும் கண்டு அப்படத்திலேயே ரதிதேவியின் பாத்திரத்தை ஏற்கச் செய்து விட்டனர் முதலாளிகள். அவர் மேக்-அப் போட்டுக் கொண்டு வந்ததும் ரதி மாதிரியே இருப்பதாக எல்லோரும் கூறினர்கள்!

தன் மற்ற கலைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு தமயந்தி படங்களில் நடிக்க முற்பட்டார். வி. வி. சடகோபன், கே. ஆர். செல்லம், சூர்யகுமாரி முதலியோருடன் தமயந்தியும் 'அதிர்ஷ்டம்' படத்தில் நடித்தார். மயூரா பிலிம்ஸாரின் அப் படம் சுமாரான வெற்றியையே



கொடுத்தது. அதனால் தமயந்திக்கு அதிகமாகப் புகழ் கிடைக்கவில்லை. தொடர்ந்து அஸந்தாஸின் 'மணிமேகலை,'யிலும் 'தேச பக்தி,' 'காலேஜ் குமாரி,' 'கங்காவதாரம்' படங்களிலும் தமயந்தி நடித்தார். இந்தப் படங்களில் தமயந்தியை ரஸிகர்கள் ஓரளவு அறிந்தனர். பி. யு. சின்னப்பாவுடன் தமயந்தி 'விகட யோகி'யில் முக்கிய பாகத்தில் நடித்தார். அதே படத்தில் தான் டி. ஆர். ராஜகுமாரி கதாநாயகியாக நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நவநாகரீக நங்கையாகத் தோன்றி தமயந்தி அப்படத்திலே சக்கை போடு போட்டிருந்தார்.

கலைகளில் புகழ் பெற்ற குடும்பத்தில் பிறந்து பட உலகிலும் புகுந்து விட்ட தமயந்திக்கு 1937-ம் வருஷம் டிசம்பர் மாதம் 6-ம் தேதி பிறந்த குழந்தைதான் இன்று நக்ஷத்திர ஸ்தானத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கும் வானம்பாடி குசலகுமாரி. குசலகுமாரி ஜனனத்தின் போது அழுதார். அது தேவகானமாகப்பட்டது மற்றோருக்கு! கையையும் காலையும் ஆட்டி உதைத்ததில் நடனத்தின் நளினம் இருந்ததாம்! இப்படி கலை ரத்தத்திலே ஊறிப் பிறந்த குசலகுமாரி திறமையுடன் விளங்குவதில் வியப்பில்லை அல்லவா?

நல்ல வசதியுள்ள குடும்பம். பெண் குழந்தையாகப் பிறந்திருக்கிறது. குழந்தையை மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்தார் தமயந்தி. குழந்தை 'ஆ' என்று வாயைத் திறக்கும். 'ஆனை' கேட்கிறது என்று நினைத்து யானையையே வாங்கிக் கொடுக்கத் தயாராகி விடுவார் தமயந்தி! மற்றவர்கள் சொன்ன பிறகுதான், தன் குழந்தை சாப்பாட்டுக்காக 'ஆ'வென்று வாயைத் திறந்து காட்டுகிறது என்ற நினைவுக்கு வருவார்! இப்படியெல்லாம் குழந்தையின் விருப்பப்படியெல்லாம் செய்து வந்த தமயந்தி குசலியின் ஆறாவது வயதிலேயே அவரது நடன சிக்ஷைக்கு ஏற்பாடு செய்து விட்டார். பிரபல நடன ஆசிரியர் வழுவூர் ராமய்யா பிள்ளை குசலியின் நடன ஆசிரியராகஅமர்ந்து அவரை ஆட்டி வைத்தார்.

குழந்தை குசலி கலைகளில் மட்டும் புகழ் பெற்றிருந்தால் போதுமா? கலை



களுக்காக ஊதியம் பெறும் போது இடது கை பெருவிரலை மையில் அழுத்தி காகிதத்தில் பதிய வைப்பதா? அல்லது ஒப்பந்த பாரங்களையோ தன்னைப்பற்றி வந்திருக்கும் செய்திகளையோ மற்றவரை விட்டுப் படிக்கச் சொல்லிக் கேட்பதா? ஆகவே கலைகளுடன் மகளுக்குக் கல்வியும் புகட்ட வேண்டி தியாகராயநகர் வித்யோதயா பெண்கள் பள்ளியில் குசலியை சேர்த்து விட்டார்.

குசலிக்குப் பள்ளிப் படிப்பில் நிறைய ஆர்வம் இருந்தது. தான் பள்ளியில் படித்ததை வீடு திரும்பியதும் தாயிடம் கூறி மகிழ்வார். நான்காம் வகுப்பு வரை வித்யோதயாவில் படித்தார் குசலி. பிறகு பள்ளிக்குச் சென்று வருவது சிரமமாக இருக்கவே வீட்டிலேயே சிறிது காலம் ஆசிரியரை வைத்துப் படித்து வந்தார். என்ன இருந்தாலும் பள்ளியில் போய் படிப்பதற்குச் சமம் ஆகாது என்பதாலோ என்னவோ மீண்டும் ஹோலி ஏஞ்சல்ஸ் கான்வென்டில் குசலியை சேர்த்தார் தமயந்தி. அங்கே மூன்றும் ஸ்டான்டர்டில் சேர்ந்த குசலி நான்காம் ஸ்டான்டர்டில் தேறினதும் பள்ளிப்படிப்புக்கு நிரந்தரமாகப் புள்ளி வைக்க நேரிட்டது.

அப்போது குசலிக்கு தேக அசௌகரியம் ஏற்பட்டு உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது. பள்ளியும் வேண்டாம், படிப்பும் வேண்டாம் என்று நிறுத்தி விட்டார் தாயார். ஆனால், உடல் நலிவால் குழந்தை அவதியுறுவதைப் பார்த்து அப்படி தீர்மானித்து விட்டால் அது நிலைக்குமா? குசலியின் உடல் நிலை சகஜமானதும் வீட்டிலேயே கல்விக்கு ஏற்பாடு செய்து விட்டார் தமயந்தி. நடனப் பயிற்சி நின்று விட்டது. வீட்டில் கல்வியறிவை விருத்தி செய்து கொண்டிருந்த குசலிக்கு நடனம் பயில முடியாமற் போனதில் அளவு கடந்த ஏக்கமும் இருந்தது. இதை யறிந்த தாயார் மகளின் உடலைத் தேற்றி ராமய்யா பிள்ளையிடம் நடன சிக்ஷைக்கு ஏற்பாடு செய்தார்.

தன் மகள் ஒரு நக்ஷத்திரமாகி விட வேண்டுமென்று ஆசை கொண்டிருந்த தமயந்தி, குசலி பள்ளி நாடகங்களிலும் நடனங்களிலும் பங்கெடுத்துக் கொண்டபோதெல்லாம் உற்சாகமூட்டிக் கொண்டிருந்தார். அத்துடன்

இன்றி படத்தில் நடிக்கவும் ஏற்பாடு செய்தார். அதன் பலனாக ஜுபிடர் பிக்சர்ஸ் தயாரித்த "மஹாமாயா" படத்தில் மாயாவின் புத்திரியாக நடித்தார். பி. கண்ணாம்பா-காலஞ்சென்ற பி. யு. சின்னப்பா இருவரும் பிரதம பாகத்தில் நடித்த அப்படத்தில் குசலியின் நடிப்பு நன்ருக இருந்தது. அப்போது குசலிக்கு சுமார் ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். அதன் பின் கிருஷ்ண பிக்சர்ஸின் 'பிரபாவதி', பாலாஜியின் 'லைலா மஜ்னு' இரு படங்களிலும் சிறுமி குசலி நடித்தார். பால லைலாவாக குசலி அழகு பிம்பமாகத் தோன்றி காண்போரைத் தன் பால் விழியால் மயக்கி விட்டார். அவருடன் பால கயஸாக ஸி. ஆர். ராஜகுமாரி தோன்றினர். மகாலிங்கம் - எம். வி. ராஜம்மா இருவரும் பிரதம பாகத்தில் நடித்த அப்படம்தான் குசலியை ரசிகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது. பிரபாவதியில் குசலியின் சின்னப் பாட்டி எஸ். பி. எல். தனலக்ஷ்மியும் சித்தி டி. ஆர். ராஜகுமாரியும் பிரதம பாகத்தில் நடித்தனர். இதனிடையே குசலி நடனத்தில் நன்கு பயிற்சி பெற்றிருந்ததால் படங்களில் நடனமாடும் சந்தர்ப்பங்கள் கிடைக்க ஆரம்பித்தன. கிருஷ்ண பிக்சர்ஸின் 'கிருஷ்ண பக்தி'யில் முதன்முதலாக நடனமாடினர் குசலி. அதிலே டி. ஆர். ராஜகுமாரியும் பி. யு. சின்னப்பாவும் பிரதம பாகத்தில் நடித்தனர். நக்ஷத்திர கும்பல் நிறைந்த அந்தப் படத்தில் குசலியின் நடனம் பிரபலமாகவில்லை.

ரசிகர்களுக்கு குசலியை நன்கு அறிமுகம் செய்து வைத்த படம் எனெஸ்கே பிலிம்ஸின் 'மணமகள்' தான். டி. ஏ. மதுரம் பாடும் 'நல்ல பெண்மணி' என்ற பாட்டுக்கு அபிநயம் பிடித்த குசலகுமாரியின் அழகும் முகபாவங்களும் ரஸிகர்கள் மனதில் பதிந்தன. அடுத்து வந்த 'பராசக்தி' படம் ரஸிகர்களின் உள்ளங்களை உலுப்பி விட்டது. கருணாநிதியின் கனல் தெறிக்கும் வசனமும், சிவாஜி கணேசனின் சிறந்த நடிப்பும், ஜயராமனின் பாடல்களும் அந்தப் படத்தின் வெற்றிக்குக் காரணமாயமைந்ததைப் போல் குசலியின் நடனமும் ஒரு காரணமாயமைந்தது. பருவ மங்கையாகி கட்டமைந்த உடலும் அழகு முகமும் கொண்டிருந்த பாவை குசலியின் நடனம் மிகவும் நன்ருக இருந்தது. எம். எல். வஸந்தகுமாரியின் அற்புதமான இசைக்கு அருமையாக அபிநயம் பிடித்தார் குசலகுமாரி. 'வாழ்க வாழ்கவே' என்ற ராகமாலிகையும் அதற்கு குசலகுமாரி அபிநயம் பிடித்ததும் மறக்க முடியுமா என்ன?

குசலகுமாரிக்கு பட உலகில் கிராக்கி ஏற்பட ஆரம்பித்து விட்டது. அடுத்தபடியாக 'மருமகள்' படத்தில் அவர் நடனமாடினர். மருமகளுக்குப் பின் குசலகுமாரி ஆர். ஆர். பிக்சர்ஸின் 'வாழப்பிறந்தவ'ளில் நடனமாடினர். சித்தி டி. ஆர். ராஜகுமாரியைப் பிரதம பாகத்தில் கொண்ட

அப்படத்தை குசலியின் மாமா ராமண்ணு டைரக்ட் செய்தார்.

குசலகுமாரியின் தோற்றம், பருவம், திறமை இவற்றைக் கவனித்து வந்தது ஜெமினி ஸ்தாபனம். ஜெமினியின் மகத்தான கலைச்சித்திரமான "ஔவையார்" எந்த விதத்திலும் குறைபாடற்றிருக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்கள் விரும்பியதால் எல்லா நடிகர்களுக்கான தேர்தலை ரொம்பவும் கவனத்துடன் நடத்தினுர்கள். சிலர் சாதாரணமாக அழகாக இருப்பார்கள். நகைகளை அணிவித்தால் குறத்தி மாதிரி ஆகிவிடுவார்கள்! சிலருக்குப் பொட்டிட்டால் அழகாயிராது! சிலருக்கு அழகிருக்கும்: வேஷம் பொருந்தும்: பாவம் இருக்காது. ஔவை சிறந்த பண்டிதை; இளம் மேதை. அழகும் அறிவும் கொண்ட அந்தச் சகல கலாவல்லி விநாயக பக்தை. வாழ்வின் இன்ப துன்பங்களை வெறுத்து, மக்களுக்குப் பணியாற்றத் துடிக்கும் அவள், அதற்கு இடைஞ்சலாக உள்ள அழகும் இளமையும் ஒழிந்து முதுமைப் பருவம் வேண்டுமென்று முறையிடுகிருள். இந்தப் பாத்திரத்திலே பருவமுலாம் பூசப்பட்ட அழகி குசலி தோன்றினுர். நெற்றியிலே வெண்ணீரணிந்து குடமெடுத்துக் குளத்திற்குச் செல்லும் சிறுமி ஔவையின் முகத்திலே தெய்வீகக்களை இருந்தது. அந்த அழகு முகத்தால் நமக்கு வேறு எந்தவித ஆசாபாசங்களும் ஏற்படவில்லை. மணக்கோலத்திலிருந்து கிளம்பி இளமையைத் தவிர்க்க வரம் வேண்டும் ஔவையின் முகத்திலே காணப்பட்ட வைராக்கியம் நம் மனதை உருக வைத்து விட்டது.

'ஔவையார்' ஒரு மகத்தான படம். ஜெமினியின் அந்த மாசற்ற படம் குசலகுமாரிக்கு மாசற்ற புகழைக் கொடுத்தது. உடனடியாக அப்போது தயாராகி வந்த "ராஜாபேதா" என்ற தெலுங்குப் படத்தில் குசலகுமாரி நடனமாடி, நடிக்கும் பாத்திரமேற்றுர். ஆந்திராவில் மகத்தான வெற்றியளித்த அப்படத்தின் மூலம் குசலகுமாரிக்கு ஆந்திர மக்களிடையே மகத்தான வரவேற்பு கிடைத்தது. மீண்டும் ஆர். ஆர். பிக்சர்ஸார் 'கூண்டுக்கிளி' படத்தைத் தயாரித்தபோது அதிலே சொக்கி என்ற ஏழைச் சிறுமியின் பாத்திரமேற்று நடித்தார் குசலகுமாரி. அவர் அதில் நடனமும் ஆடினுர். அவரது நடிப்பு கச்சிதமாக இருந்தாலும் மேக்-அப் மோசமாக இருந்தது. சிவாஜி கணேசனுக்கு அவரை ஜோடி சேர்த்தது பொருத்தமாக இல்லை.

ஔவையாரில் குசலகுமாரியின் நடிப்பைக் கண்ட மெர்குரி பிலிம்ஸார் தங்களது முதல் படமான 'போன மச்சான் திரும்பி வந்தா'னில் அவரைக் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்தனர். ஸ்ரீராம் கதாநாயகனாக நடித்த இப்படத்தில் 'பிரண்ட்' ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், அங்கமுத்து, தங்கவேலு, லக்ஷ்மிகாந்தம் முதலியோர் நடித்தனர். குசலகுமாரி கதாநாயகி சந்திராவாக கச்சிதமாக நடித்தார். சென்ற வருஷ தீபாவளி வெளியீடுகளான 'ரத்தக் கண்ணீர்,' 'நண்பன்' படங்களில் குசலகுமாரியின் நடனம் இருக்கிறது. ராஜுபேதா தவிர, 'காளஹஸ்தி மஹாத்யம்' தெலுங்கு படத்திலும் குசலி நடனமாடி யிருக்கிறார். தற்போது குசலகுமாரி, ரேவதி புரொடக்ஷன்ஸின் 'கள்வனின் காதலி' படத்தில் அபிராமியாக நடித்து வருகிறார். கிருஷ்ணா பிக்சர்ஸின் 'காவேரி'யில் நடனமாடியிருக்கிறார்.

குசலகுமாரிக்கு நடிப்பில் எவ்வளவு ஆர்வம் இருந்ததோ அதை விடப் பன்மடங்கு ஆர்வம் நடனத்தில் இருந்தது. ஆகவே மிகவும் சிரத்தையுடன் ராமய்யா பிள்ளையிடம் சிக்ஷை பெற்று வந்தார். குசலியின் நடனத் திறமையையும் ஆர்வத்தையும் கண்டு குருவே பிரமித்துப் போய் விட்டார். மேடையில் ஆடும் அளவுக்குத் தயாராகி விட்ட குசலகுமாரியின் நடன அரங்கேற்றத்தை விமரிசையாகக் கொண்டாட நினைத்தார் தமயந்தி. ஆனால், அதற்குள்ளேயே குசலியின் புகழ் பரவிவிட்டது போல் நடனத் திறமை பற்றியும் பரவி விட்டதால் அவர் அரங்கேற்றம் என்று தனியாக ஏதும் செய்ய முடியவில்லை.

குசலகுமாரி முதன்முதலாகச் செய்த மேடை நடனக் கச்சேரியை அரங்கேற்றம் என்று குறிப்பிடுவதானால் சென்ற வருஷம் ஜூன் மாதம் 21-ம் தேதியன்று திருப்பூரில் ஒரு திருமணத்தில் நடந்த நடனக் கச்சேரியைக் குறிப்பிடலாம். தொடர்ந்து ஸ்ரீரங்கம், சென்னை, திருச்சி, செட்டிநாடு, முக்கூடல், சேலம் முதலிய இடங்களிலும் ஆந்திரத்திலும் நடனக் கச்சேரிகள் செய்திருக்கிறார் குசலகுமாரி. சிவாஜி கணேசனின் சகோதரியின் திருமணத்தன்று குசலகுமாரியின் நடனம் நடைபெற்றபோது அதற்கு மகத்தான பாராட்டு கிடைத்தது. விரைவில் குசலகுமாரி நடன உலகின் சிகர ஸ்தானத்தை அடைவார் என்பது உறுதி.

குசலகுமாரிக்கு தற்போது பதினேழு வயது முடிந்து பதினெட்டாவது வயது ஆரம்பமாகி யிருக்கிறது. அவருக்குப் பிறகு பதினேழு வருஷங்கள் கழித்து சென்ற வருஷம் கமலசேகரன் பிறந்திருக்கிறான். இது நாள் வரை மகன் பிறக்காததாலோ என்னவோ குசலகுமாரியை ஒரு ஆண் பிள்ளைக்கும் சமமாகப் பாவித்து "குசலப்பா" என்று செல்லமாக அழைக்கிறார் தமயந்தி. கமலசேகருடனும் வேணியுடனும் விளையாடுவதிலேயே குசலப்பாவின் பாதி பொழுது போய்விடுகிறது! வேணி என்ற கிருஷ்ணவேணி குசலியின் ஆருயிர்த்

தோழி. அந்த வீட்டில் வேணி இட்டதுதான் சட்டம்! வாய்க்கு வாய் 'வேணி!' என்றுதான் கூப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். குசலிக்கோ, தமயந்திக்கோ ஏதாவது சந்தேகம் வந்து விட்டால் வேணிதான் தீர்த்து வைக்கிறார்! வேணியையும் தன் மகளாகவே பாவிக்கிறார் தமயந்தி.

குசலகுமாரிக்கு கார் ஓட்டவும் சைகிள் விடவும் தெரியும். பாட்மின்டன், கேரம், ரிங் டென்னிஸ் முதலிய விளையாட்டுக்கள் விளையாடுவார். புத்தகங்களைப் படிப்பதில் அவருக்கு அலாதி பிரியமுண்டு. கலகலவென்று சிரித்துப் பேசும் குசலி கள்ளங்கபடற்றவர். தாயைத் தெய்வமாகப் போற்றும் அவரது விருப்பம் எதையும் பூர்த்தி செய்ய தாய் தயங்கினதில்லை. அடக்கமான சுபாவம், அர்த்த புஷ்டியான பேச்சு இவைகளுடன் சரளமான தன்மையும் கொண்டவர் குசலகுமாரி. அவருக்கு தமிழ், ஆங்கிலம், ஹிந்தி பாஷைகள் நன்றாகத் தெரியும். அவைகளில் சரளமாக எழுதவும் படிக்கவும் செய்வார் அவர்.

குசலகுமாரிக்குக் கட்சி வேற்றுமை என்றாலே பிடிக்காது. ஏதோ ஒரு தொழிலில் பிரவேசித்தோம். அதிலே நாம் சிலருக்குக் கடமைப்படுகிறோம். அவர்களிடமிருந்து பெறும் ஊதியத்திற்குத் திருப்திகரமாக நடித்தால் அத்துடன் தீர்ந்து விடுகிறது. அப்போது கலை தானாகவே வளரும். அதிலே கட்சி வேற்றுமை என்றொரு பாகுபாடு ஏற்பட்டால் ஐக்கியம் குறைந்து சக்தி சிதறி விடும். விரோத மனப்பான்மை எழும். கலையுலகம் எல்லாருக்கும் இடம் தருகிறது. அதன் மூலம் ஏதாவது நன்மை செய்ய முடியுமானால் செய்யலாம். இல்லாவிட்டால் எட்ட நின்று விடலாம் என்கிறார் அவர். 'கட்சி என்று ஒன்று வரவேண்டிய அவசியம் இல்லவே இல்லை. அது கலைக்குள் நுழைந்து விட்டது என்பதை என்னால் நம்ப முடியவில்லை' என்று அவர் கூறுவதிலிருந்தே அவரது வெள்ளை உள்ளம் நன்கு தெரிகிறது. கலைக் குடும்பத்திலுதித்துப் பரம்பரையாகப் பணியாற்றி வருபவர்களுக்கு இந்த வேற்றுமைகள் பிடிக்குமா என்ன? கட்சி பணம் தருகிறதா கலை தருகிறதா என்று அவர் கூறுவதை யாரும் வரவேற்கவே செய்வார்கள்.



குசலகுமாரி அழகும் இளமையும் திறமையும் கொண்டவர். இம்மூன்றும் அவரை விரைவில் முன்னணி நக்ஷத்திரமாக்கி விடும் என்பதில் சந்தேகமில்லை.

—எஸ். வி. ஸம்பத்குமார்.

சரவணபவா & யூனிட்டி

எதிர்பாராதது

கதை-வசனம்

அறிமுகம்

மதுரையிலுள்ள தயாபரர் (நாகய்யா) ஒரு பெரிய செல்வந்தர்; தயாளு. அவர் ஒரு முருக பக்தர். மனைவியை இழந்த அவருக்குத் தன் ஒரே மகன் சுந்தரின்மேல் உயிர். சுந்தர் (சிவாஜி கணேசன்) ஏகபுத்திரன். சென்னையில் சுமதியின் வீட்டில் தங்கி கல்லூரியில் படித்து வருகிறான். அவனுக்கு சுமதியிடம் அளவற்ற காதல்—சுமதி (பத்மினி) தன் கிழத் தந்தையுடன் சென்னையில் வசித்து வருகிறாள். உள்ளத் தூய்மை கொண்ட அந்த அழகுப் பிம்பம் ஒரு சீரிய தமிழ்ப் பெண்—அவளது கிழத் தந்தை (துரைசாமி) தன் மகன் கோபு வீட்டை விட்டுப் போய்விட்ட வருத்தம் தாளாவிடினும் மகளுக்காக வாழ்ந்து வருகிறவர்.—கோபு (சஹஸ்ரநாமம்) சுமதியின் அண்ணன். நாகரீக மனைவி நளினியின் பேச்சைக் கேட்டு வீட்டை விட்டு வெளியேறி பெங்களூரில் டாக்டர் தொழில் நடத்துகிறான். நளினி (எஸ். வரலக்ஷ்மி) நாகரீகப்பித்து கொண்டவள். அவளால் அக்குடும்பத்தின் அமைதி குலைகிறது—கந்தசாமி (பிரண்ட் ராமசாமி) கோபுவிடம் கம்பவுண்டராக இருக்கிறான். அந்தக் குடும்பத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாகி அவன். ஆஷா (பேபி சரஸ்வதி) ஒரு காட்டு மலர். ஆனால் அச்சிறுமி காட்டுக்குணம் படைத்தவளல்ல. அவளது அன்பினால் மட்டுமே வாழ ஆசைகொண்டான் சுந்தர்—மற்றும் பலர்.

காட்சி 1

அம்மன் தரிசனம்!

சுந்தர் நண்பர்களுடன் டேபிள் டென்னிஸ் விளையாடுகிறான். அவன்

அந்த ஆட்டத்தில் சங்கர் என்ற நண்பனை ஜெயித்து விடுகிருன்.

சுந் : கேம்...

சங் : குட்...இன்னொரு செட்; என்ன சுந்தர்!

சுந் : சே சே! மணி ஆறரை ஆயிடுச்சு, நான் போகணும்.

ஒருவன் : சங்கர்! நீ தடுக்காதே! அவன் அம்மனைத் தரிசிக்கப் பாரும்பா.

பாலு : அடி சக்கை! பி. ஏ. பஸ்ட் கிளாஸ் வாங்கறதுக்கு தினம் கோவிலுக்கு வேறே போருனு?

ஒரு : உம்...நீ ஒண்ணு! அவன் தெய்வம் அவன் இருக்கிற வீட்டிலேயே இருக்குதே. அதனுடைய கடாட்சமே போதுமே, அவன் பஸ்ட் கிளாஸ் வாங்க!

சுந் : டேய் பிட் நோட்டீஸ்! கொஞ்சம் அதோட நிறுத்திக்கோ. கிராப்பெல்லாம் பறந்து போயிடும்... ஜாக்கிரதை!

சங் : ஏண்டா, அவன் சொல்லித்தான் தெரியணுமா? நானே பார்த்திருக்கேண்டா, உன் வீட்டு அப்ஸரஸை!

சுந் : டேய் நிறுத்துடா! ஒண்ணும் தெரியாத நல்ல பெண்ணுக்கு நீங்க

எல்லாம் சேர்ந்து கெட்டபேரு ரிஜிஸ்டர் பண்ணிடுவிங்க போலிருக்கே.

சங் : சே சே! கோவிச்சுக்கிறியே பிரதர்! சும்மா தமாஷுக்குச் சொன்ன.

சுங் : இடியட்...

கிளம்பிப் போகிருன். அப்போது பாலு கிண்டலாகப் பாடுகிருன். சுந்தர் ஓடிவருகிருன்

சுங் : டேய்...... டேய் ... டேய்நிறுத்துடா! என்னடா, ரொம்ப வேகமாகப் போயிகிட்டே இருக்கியே. எப்பா, நீ இங்கே இருக்கவேண்டியவன் இல்லேடா.

பாலு : வேற எங்கேடா இருக்கணும்?

சுங் : வண்ணன் வீட்டிலே கட்டிக் கிடக்க வேண்டியவன்...கழுதை...

அவன் சுமதியின் வீட்டுக்குப் போகிருன். அப்போது அவள் சக்தி படத்தின் முன் பாடிப் பூஜை செய்கிருள். அவள் தகப்பனர் 'சுமதி சுமதி' என்று கூப்பிடுகிருர். அவள் ஹாலுக்கு வருகிருள்.

சும : என்னப்பா?

கிழ : என்னம்மா செய்துகிட்டிருக்கே?

சும : விளக்கேத்தினேம்பா!

கிழவர் வரட்டுச்சிரிப்பு சிரிக்கிருர்.

சும : ஏன் அப்பா சிரிக்கிறீங்க?

கிழ : ஒண்ணுமில்லேயம்மா! இருட்டிக்கிட்டிருககிற நம் மனசிலே ஆண்டவன் விளக்கேத்தி வைக்க மாட்டேங்குருன், அதெ நினேச்சுச் சிரிச்சேன்.

சும : ஏம்பா, எப்ப பார்த்தாலும் எதையாவது நினேச்சி வீணு கவலேப் பட்டுக்கிட்டிருக்கீங்க? அண்ணுவுக்குக் கடிதம் எழுதட்டுமா?



கதை–வசனம் ஸ்ரீதர்

கையில் மட்டையுடன் சுந்தரம் வருகிருன்.

கிழ : வாப்பா சுந்தர், உட்காரு! என்ன தம்பி... .. விளையாடிட்டு வர்றியா ?

சுங் : ஆமாம் சார்.

கிழ : நாங்க படிக்கறப் போ தம்பி, சடுகுடுதான் ஆடுவோம். இப்பல்லாம் சுதேசி போய் எதிலேயும் விதேசி வந்துடுச்சு. இந்த மட்டையைக் கையிலே பிடிச்சுகிட்டா அது ஒரு தனி மதிப்பு.

சுங் : ஹ...ஹ...எனக்குக் கொஞ்சம் ஆடத் தெரியும்சார்!

அவர் கையிலிருந்த புத்தகத்திலிருந்து அவர் மகன் கோபுவின் போட்டோ விழுகிறது. அவன் யார் என்று விசாரிக்கிருன் சுந்தர். தன் மகன் கோபு என்றும் அவன் தன் மனைவி நளினியின் பேச்சைக் கேட்டு வீட்டை விட்டே வெளியேறி பெங்களூரில் டாக்டர் தொழிலில் நடத்துவதாகவும் கூறுகிருர்.

காட்சி 2

சந்திப்பு

கிழவருக்கு அடிக்கடி மாரடைப்பு வந்து விடும். அன்று அப்படி நேரிடும் போது சுமதி துடிக்கிருள்.

சும : அப்பா...அப்பா...அப்பா... சுந்தர் மாடிக்குப் போகும்போது சுமதி ஓடிப்போய் அழைக்கிருள்.

சும : உம்...அப்பா...

சுங் : என்ன நடந்தது?

சும : ஐயோ ஒண்ணுமே புரியல்லேயே, திடீர்னு...

சுந் : தண்ணி கொண்டா, போ!

கிழவருக்கு மூர்ச்சை தெளிவிக்கிருன் சுந்தர்.

கிழ : என்னம்மா, பயந்துட்டியா?

சுந் : உங்க பொண்ணு பயப்படலிங்க. அது துடிதுடிச்ச துடிப்பைப் பார்த்து நான்தான் அப்படியே அசந்து போயி நின்னுட்டேன்.

வோ விஷயம்இருக்கு.

சும : விஷயம் இருந்தா பேசறது தானே!

சுந் : ஊஹூம்...நானே பேசலாம்னுதான் இருந்தேன். ஆனு நீ விரும்புவியோ...மாட்டியோன்னு ..சில சமயங்களிலே உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். பேசவே தோணமாட்டேங்குது...நான் பார்க்குமிடமெல்லாம் உன் பால் வடியும்

கிழ : என்னவோ தம்பி, நீ இங்கேயிருக்கிறது எங்களுக்கு எவ்வளவோ உதவி.

சுந் : இது என்னங்க பெரிய உதவி? ஒருத்தர் கஷ்டப்படறபோது உதவி செய்வததான் மனிதத்தன்மை!

கிழ : தம்பி! நான் உன் எதிரிலேயே புகழக் கூடாது. உன்னைப்போல மரியாதை, நல்ல குணம், பெருந்தன்மை இருக்கிற ஒரு பிள்ளையைப் பார்க்கிறது இந்தக் காலத்திலே ரொம்ப அபூர்வம். நீ எப்பவும் இப்படியே இருக்கணும்.

சுந் : எல்லாம் உங்க ஆசிர்வாதம் சார்!

மறுநாள் காலை சுந்தர் பல் துலக்கும் போது சுமதி குடத்துடன் வருகிருள். அவன் ஜாடையாகத் தடுக்கவே 'என்னப்பா வேணும்?' என்று கேட்கிருள். அவள் தகப்பனர் வருவதாக நினைத்து ஒதுங்குகிருன் சுந்தர். அவள் போய் விடுகிருள். தான் ஏமாற்றப்பட்டதறிந்து அவன் தொடருகிருன்.

சுந்: பலே குறும்புக்காரியா இருக்கியே. உனக்கு ஏமாத்தக் கூடத்தெரியுமா?

சும: சாமர்த்தியம் எல்லோருக்கும் பொதுதானே?

சுந் : அடடே! உனக்குப் பேசக்கூடத் தெரியுமா?

சும : நான் என்ன, ஊமையா?

சுந் : இத்தனை நாளு பேசாமடந்தையா இருந்தியே!

சும : பேசறதுக்கு என்ன இருக்கு?

சுந்: என்ன இருக்கா? மனசு இருந்தா எவ்வள

வதனம். கேட்கும் ஒலியெல்லாம் உன் சுந்தரச் சிரிப்பு. என்னைத் தடுமாறச் செய்கிறது சுமதி.

அவள் கையைத் தொடுகிருன். மறைவிலிருந்து அவள் தகப்பனுர் இதைக் கவனிக்கிருர்.

சும : எதிலேயும் கண்யம்வேணும். போய் விடுகிருள்; கிழவர் வருகிருர்.

கிழ : என்ன தம்பி, சிலையாட்டம் நின்னுட்டே ?

சுந் : (சமாளித்தபடி) ஹா...ஒண்ணுமில்லே.. என்னமோ யோசனை பண்ணிகிட்டே இருந்துட்டேன்.

கிழ : ஏன், ஊர் நினைவு, அப்பா வைப்பத்தி ஞாபகம் எல்லாம் வந்திடுச்சா?

சுந் : உம்...ஆமாம்...நேத்துதான் லெட்டர் வந்தது.

கிழ : என்னன்னு ? 'உனக்குப் பொண் பாத்து வச்சிருக்கேன். உடனே வந்து கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டுப் போய் படிக்கவேண்டியது' அப்படீன்னு?

சுந் : நோ...நோ...என்னைக் கேக்காமே அப்பா எந்த ஏற்பாடும் செய்ய மாட்டார்சார்.

இதைக் கேட்ட கிழவருக்கும் மறைவிலிருந்து ஒட்டுக்கேட்ட சுமதிக்கும் அலாதி திருப்தி, மகிழ்ச்சி !

காட்சி 3

வரன்களும் உபதேசமும்

தயாபரரும் வேலையாள் கிட்டுவும் இருக்கும்போது கல்யாணத் தரகன் போட்டோக்களுடன் வருகிருன்.

தயா : பையன் பரிட்சை முடிஞ்சப்புறம்தான் நான் இதைப்பத்தி அவனைக் கேட்க முடியும்.

தர : அது சரிங்க, இந்தப் போட்டோக்களைப் பாருங்க. பிடிச்சிருந்தா அப்புறம் தம்பியைக் கேட்டுக்கிட்டு ஏற்பாடு பண்ணிடலாம்.

தயா : உம் சரி! உங்க மனசை ஏன் கெடுக்கணும்? காண்பியுங்க.

தர : (போட்டோவை காண்பித்து) வைரக்கடை வைத்தியநாத முதலியார் மக...ஒரே பொண்ணு!

கிட்டு : அப்ப வைரமாவே நம்ம வீட்டுக்கு வரும். என்னங்க, அது நேராவே நிக்கல்லே!

தர : டான்ஸ் ஆட்ற போஸுப்பா.

நல்லா நாட்டியம் ஆடும் ரொம்ப கப்பெல்லாம் வாங்கியிருக்கு!

கிட் : ஏற்கெனவே வீட்லே கப்பு, டம்ப்ளர் எல்லாம் இருக்குதுங்க !

தயா : நீ சும்மா இரு கிட்டு...நாட்டியம் ஒரு கலை...கட்டுப்பாடு இல்லாத

வங்கதான் கலேக்கு அடிமையாக முடியும். பண்பாடு மாருத தமிழ் நாட்டுக் குடும்பப் பெண்கள் கலேயை தாங்கள் ரசிக்கணுமே தவிர, மத்த வங்க தங்களேப்பாத்து ரசிக்கும்படி நடக்கக்கூடாது.

தர: இதைப் பாருங்க. டி. எஸ். பி. மக. நல்ல பாடகி!

கிட்: வீட்டுக்காரியம் எதையும் கவனிக்காமெ அம்மா பாட ஆரம்

பிச்சுட்டா அப்புறம் எங்கதம்பி தாளம் போட வேண்டியதுதான்!

தயா: நல்லாச் சொன்னே கிட்டு. ...இதோ பாருங்க. சாதாரண படிப்பும் போதுமான அறிவும் சுமாரான அழகும் கணவனே தெய்வமா மதிக்கிற குணமும் அடக்கமும் உள்ள ஒரு கௌரவமானகுடும்பத்துப்பொண்ணு இருந்தாத்தான் என்னுடைய மருமகளாக வரமுடியும். என்ன கிட்டு?

கிட்: இவ்வளவு சுருக்கமாகவும் விளக்கமாகவும் யாராலேயும் கூற முடியாது எஜமான்!

தர: அப்போ இன்ஞெரு முறை வந்து சந்திக்கிறேன்.

போய் விடுகிருன்.

காட்சி 4

தோட்டக்காதல்!

சுமதிக்கு சுந்தரிடம் காதல். அவனே ஜாடையாக தோட்டத்திற்கு அழைக்க



அங்கேபோய் "சிற்பி செதுக்காத பொற்சிலேயே" என்று பிரேம கீதம் பாடுகிருள். மலரைநோக்கி வண்டு பறந்து வருகிறது! அவள் பாடி முடித்ததும் கைதட்டிப் பாராட்டுகிருன் சுந்தர்.

சும: தாங்க்யூ சார்!...

சுந்: சுமதி! உன் பாட்டிலே நான் அப்படியே மெய்மறந்து...

சும: தூங்கிட்டீங்களா!

சுந்: இல்லே சுமதி, நீ பாடியது வெறும் பாட்டல்ல. என் இதய நரம்புகளே ஒவ்வொன்ருக மீட்டி தெய்வீகமான பிரேம கீதம் பாடினே...

சும: அடடே, வர்ணனே பண்ணக்கூடத் தெரியுமா?

சுந்: இதென்ன பிரமாதம்! இன்னும் கேளு. அந்தரத்திலே அரங்கம் நிர்மாணித்து...அ...அ

சும: 'அ'. .னுவிலேயே வரணும்னு தேடறீங்களா?

சுந்: ஆமா. .இரு இரு... ஆழ்கடலின் நீலத்தைச் சுவராக நிறுத்தி... தவழ்ந்து செல்லும் காற்றை த...த... தரையாக்கி, வண்ணமலர் இதழ்களே வகையாக அதில் பரப்பி, அந்த இனிய மாளிகையில் இதய ராணியான உன்னேடு இரவும் பகலும் இன்பத்தின் எல்லேயில் மிதக்கத் துடிக்கிறேன் சுமதி!

சும: ஒன்ஸ்மோர்... ஒன்ஸ் மோர்...

சுந்: நான் என்ன சொன்னேன்னு

எனக்கே புரியல்லே, ஒன்ஸ்மோ ராம்லே ஒன்ஸ்மோர்.

சும : பூ...இவ்வளவுதானு !

சுந் : பின்னே, வார்த்தைகள் அழகா இருந்தா கிளாப்ஸ்கள் தானு கவே கிடைச்சுடும்.

சுமதி போகிருள். அவன் தொடரு கிருன். அவள் தகப்பனுர் பார்க்கிருர்.

சுந் : சும..சுமதி. .சுமதி. .சிரிச்சு சிரிச்சு என்னேச் சித்ரவதை செய்ய றியே தவிர, கனிவா ஒரு வார்த்தை பேச மாட்டேங்கறியே !

சும : என்ன பேசறது?

சுந் : ஹா! காதல் ததும்பும் படியா ஏதாவது பேசேன்.

சும : காதலா! அப்படின்னு ?

சுந் : போச்சு ! பாராட்டுதல் இல் லாத நாடகம் மாதிரி ஒரே 'டௌனு' போச்சு. சுமதி ! அந்த பவித்ரமான வார்த்தைக்கு உனக்கு அர்த்தமே தெரியாதா?

சும : ஊஹூம் !

சுந் : பின்னே எதுக்காக என் னேடே இவ்வளவு அன்பா பழகினே?

சும : கல்யாணம் பண்ணிக்கிற துக்காக...

சுந் : வாட் ! என்ன !! உண்மை யாகவா!! ஓ காட் ! என் ஹார்ட் நின்னுடும் போலேயிருக்கே ! ஹே பரந்தாமா!...

சுமதி அப்பாவைப் பார்த்து விட்டு ஓடி விடுகிருள்! சுந்தர் கண்ணே மூடிக் கொண்டு பொழிகிருன் !

சுந் : ...தயாநிதி, கருணுநிதி ! என்னே உன்னுடைய தயவு ! என்னே உன் கருணே. .அப்பா...... என்னே உன் கருணே...என்னே உன் மாட்சி...

கிழ : (கிட்டே வந்து) என்ன தம்பி இது ?

சுந் : (திடுக்கிட்டு விழித்து) ஹா... ஒண்ணுமில்லே. எங்க காலேஜிலே டிராமா...அதுக்காக ஒத்திகை .அவ் வளவுதான்.

கிழ : ஹ...ஹ... ..ஹ.... .இதுக்கு ரொம்ப நாளா ஒத்திகை பண்றியா?

சுந் : இல்லே. .இப்பத்தான் கொஞ்ச நாளா...ஏன் சார் ?

கிழ : இல்லே...ரொம்ப நல்லா நடிக்கிறியே. அதுக்காகத்தான் கேட் டேன்!

சுந் : எல்லாம் உங்க ஆசிர்வாதம் தான் சார்.

கிழ : என் ஆசீர்வாதம் உனக்கு எப்பவும் என்னிக்கும் இருக்கும் தம்பி, பயப்படாதே !

சுந் : தாங்க்ஸ் ..

காட்சி 5

புயலும் அமைதியும்...

கோபு குடியனுகவும் சூதாட்டக்கார னுகவும் மாறிக் கடனளியாகிருன். நளினி நயவஞ்சகனெருவனின் சதி யின் முடிவால் நல்லபடி திருந்து கிருள். கம்பவுண்டர் கந்தசாமி அந்த வீட்டின் கௌரவத்தைக் காப்பாற்றப் போய் வீட்டை விட்டே துரத்தப்படு கிருன். நளினியை ஒருவன் பலவந் தம் செய்யும் போது கோபு, கந்தசாமி, டாக்ஸி டிரைவர் ஆகியோர் பிரவே சித்து அவனே நையப் புடைக்கின்ற னர். கோபுவின் உள்ளம் தவறை உணறுகிறது. நளினியையும் அவன் உணருகிருன்.

கனிந்த காதலும்...பிரிவும் !

சுமதியும் சுந்தரும் மணப்பதற்கு சுமதியின் தந்தை சம்மதம் தெரி வித்து ஆசி கூறுகிருர். ராமரும் சீதை யும் போல வாழ ஆசை கொள்ளும் சுமதி, ஊருக்குக் கிளம்பும் 'ட்யூப்ளி கேட்' ராமராகிய சுந்தரைப் பிரிய மனமில்லாது தவிக்கிருள். "ஊர் சென்று திரும்பி அப்பாவுடன் பெண் கேட்க வருகிறேன். நல்ல 'மனுஷ ருங்க ஆண்டவனே நம்பற வரையிலே நீயும் என்னே நம்பலாம்" என்று உறுதி கூறிப் போகிருன் சுந்தர்.

ஊர் திரும்பும் மகனே மகிழ்வுடன் வரவேற்கிருர் தயாபரர். சுந்தர் பரீட் சையில் முதல் வகுப்பில் தேறி விடு கிருன்.

(109-ம் பக்கம் பார்க்க)

கஸ்தூரி பிலிம்ஸ்

மேனகா

காட்சிகள்



வடுவூராரின் சிறந்த துப்பறியும் கதையான 'மேனகா' இரண்டாம் முறையாகத் திரைக்கு வருகிறது.



பிரபல ஹாஸ்ய நடிகர்களான சிவதாணு, பிரண்ட் ராமசாமி, கருப்பய்யா ஆகியோர் ஹாஸ்ய ரஸத்தை அள்ளி அள்ளி வழங்குகின்றனர்.







லலிதா, ராகினி, கே. ஆர். ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன் முதலியோர் இதில் அற்புதமாக நடித்திருக்கிருர்கள்.

கஸ்தூரி பிலிம்
ஸைச் சேர்ந்த வி.
ஸி சுப்பராமன், மத
ராஸ் பிக்சர்ஸாருக்
காகத் தயாரித்து
டைரக்ட் செய்துள்ள
படம் மேனகா.





வாழ்விலோர் திருநாள்

வாழக்கையிலே இன்பமும் துன்பமும் கலந்து வருவது சகஜம். சில சமயம் இவற்றின் சிகரங்களுக்கே போய்விடும் சந்தர்ப்பங்கள் வரலாம் இன்பத்தின் சிகரத்தை நாம் அடையும் அந்த நாள் நம் 'வாழ்விலே ஓர் திருநாள்' ஆக அமைந்து விடுகிறது. நம் நக்ஷத்திரங்களின் வாழ்வில் அப்படிப்பட்ட 'திருநாளை' தொகுத்து இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

ஆறு வருடங்களுக்கு முன்! அப்போது சென்னை நுங்கம்பாக்கில் நான் வசித்துக் கொண்டிருந்தேன். ஜெமினி கணேசன் என் வீட்டுக்கு அன்று வந்தார். ஸ்ரீ வாஸன் அவர்கள் என்னை அழைத்து வரச் சொன்னதாகச் சொன்னார். எனக்கு விஷயத்தைக் கேட்டதுமே ஒரே ஆச்சர்யமாகி விட்டது. கூடவே ஒரு சந்தேகமும் என் மனதில் எழுந்தது. 'நாம் ஜெமினி தயாரிப்புகளில் இன்று வரை நடித்ததில்லை. ஆர். பால சுப்ரமண்யம்தான் நடித்து வருகிறார். ஆர். பாலசுப்ரமண்யத்தை அழைப்பதற்குப் பதில், கணேசன் நம் வீட்டிற்கு வந்து விட்டாரோ?' என்று நினைத்தேன். என் சந்தேகத்தை வெளிப்படையாக கணேசனிடம் சொன்னேன். அவர் 'உங்களைத்தான் அழைத்து வரச் சொன்னார்' என்று கூறவே, நான் அவருடன் புறப்பட்டுச் சென்றேன். ஸ்ரீ வாஸன் அவர்களது பக்கத்து அறையில் உட்கார வைத்துவிட்டு ஸ்டுடியோவுக்குள் சென்றார் கணேசன். கால் மணி நேரம் கழிந்திருக்கும். உடனே அங்கொருவர் வந்தார். 'யார் நீங்கள்?, யாரைப் பார்க்க வேண்டும்?' என்று என்னை கேட்டார். நான் அவருக்குப் பதில் சொன்னேன். அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் மற்றொருவர் வந்தார். அதே கேள்விகளைக் கேட்டார். நான் பதில் சொல்லி அவரை அனுப்பினேன். அவர் சென்றதும் உடனே அந்த அறையிலிருந்தவரிடம் 'எனக்கு ஒரு மூலையில் இடம் கொடுங்கள். நான் உட்கார்ந்து கொள்ளுகிறேன்' என்று சொல்லிவிட்டு, அறையின் மூலையிலிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். மேலும் சிறிது நேரம் சென்றிருக்கும். ஜெமினி கணேசனையும் காணவில்லை. அந்தச் சமயத்தில் என் அறைக் கதவுகளைத் திறந்து கொண்டு ஒருவர் வந்தார். நான் அன்றுவரை ஸ்ரீமான் வாஸன் அவர்களை நேரில் கண்டது கிடையாது. ஆகவே அவர் எப்படி இருப்பார் என்று ஊகித்துக் கொள்ளவும் முடியவில்லை. ஆனால், அறைக் கதவுகளை திறந்து கொண்டு உள்ளே பிரவேசித்த பின் நடை உடை பாவனை எல்லாம் நொடியில் அவர் யார் என்பதை எனக்கு விளக்கி விட்டன. ஆமாம், வந்தவர் ஸ்ரீ வாஸன் அவர்களேதான்!

'வாருங்கள்!' என்று என்னை அன்புடன் தன் பிரத்யேக அறைக்கு அழைத்துச் சென்றார். நீண்ட நாள் பழகியவர்போல் என் அருகே வந்து அமர்ந்து கொண்டார். அப்போது நான் நடித்திருந்த 'வேலைக்காரி' படம் திரையிடப்பட்டிருந்தது. வேலைக்காரியில் என் நடிப்பு நன்றாக இருந்ததாக அவர் சொன்னார். அதைக் கேட்டு நான் பூரித்துப் போனேன்! பின்னர் 'அபூர்வ சகோதரர்கள் படத்தில் நான் நடிக்க வேண்டும். அது சிறு பாகமானாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று சொன்னார். நடிப்புக்காக நான் எதிர்பார்க்கும் தொகையையும் கேட்டார் அவர். நான் நடிக்க ஒப்புக்கொண்டேன்; தொகை விஷயத்தை படத்தில் என் நடிப்பின் தரம் கண்டு அவரையே நிர்ணயித்து விடும்படிக் கேட்டுக்கொண்டேன். அபூர்வ சகோதரர்களில் பூபதி கோட்டை அதிபதியாக பின்னர் நான் நடித்தேன். அதற்காக ஸ்ரீமான் வாஸன் அவர்கள் கொடுத்த தொகை நான் எதிர்பார்த்ததை விட அதிகம் என்ப

தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீமான் வாஸன் அவர்களை நான் முதன் முதலாகச் சந்தித்த சம்பவம் என் நெஞ்சைவிட்டு என்றென்றும் அகலாதது மட்டுமல்ல; என் நெஞ்சிலே மகிழ்ச்சியை நிரப்பிய சம்பவமும் அதுதான்.

டி. பாலசுப்ரமண்யம்.

எனது முதல் படமும், அருணா பில்ம்ஸாரின் முதல் தயாரிப்புமான 'ராஜாம்பாள்' படத்தில் நான் நடித்துக் கொண்டிருந்தேன். படத்திலே நடிக்க சந்தர்ப்பம் கிடைத்ததுஎனக்கு பெருமகிழ்ச்சி யூட்டியது; அதைத் தொடர்ந்து இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கும் சம்பவம் எனக்கு நடந்தது. என் மனைவி சீதாவின் கரங்களைப் பற்றிய சுபநாள்தான் அது! என் வாழ்க்கையிலே நான் மிக்க மகிழ்ச்சியில் திளைத்திருந்தது எனது திருமணத் தன்றுதான்!

மனோஹர்.

1951-ம் ஆண்டு, ஜுலை மாதம். தேதி அன்று இருபத்தைந்து. திருப்பரங்குன்றத்திலே என் திருமணம் நடந்தேறியது. அன்புக் கணவரின் இன்பக் கரங்களைப் பற்றிய அந்த நாளில் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இன்றும் நாளையும் என் இதயத்திலே மகிழ்ச்சியைச் சுரக்க வைக்கிறது அச்சம்பவம்தான்.

எம். என். ராஜம்.

ஜெமினி ஸ்டுடியோவில் அப்பொழுது'அபூர்வ சகோதரர்கள்' படம் தயாராகிக் கொண்டிருந்தது. ஒருநாள் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா, இந்திரா அலெக்ஸாண்டர், புஷ்பவல்லி, சூர்யப்ரபா மற்றும் வட இந்தியாவைச் சேர்ந்த பலரும் ஸ்டுடியோவில் சேர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் கோஷ்டியில் ஜெமினி அதிபர் ஸ்ரீ வாஸன் அவர்களும் இருந்தார். பேச்சுவாக்கில் அவர் திடீரென்று, "படங்களில் நடிப்புக்காகச் சிரிப்பதில் லக்ஷ்மி பிரபா தான் சிறந்தவர். தத்ரூபமாகச் சிரிக்கிறார்" என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் எனக்கு ஒரே வெட்கமாகி விட்டது. கூடவே பெருமையாகவும் இருந்தது. என்னை மகிழ்ச்சியால் இறுமாப்படையச் செய்த தினம் அது தான்.

லக்ஷ்மிபிரபா.

சில வருஷங்களுக்கு முன் நர்கீஸ் சென்னை வந்தபோது, அவரைஎங்கள் வீட்டிற்கு அழைத்திருந்தேன். அவர் பால் எனக்குள்ள மிகுதியான அன்பையும் வெளியிட்டேன். "உன் அன்பையும் வரவேற்பையும் நான் மறக்க மாட்டேன். உன்னை என் அன்புச் சகோதரியாகவே என்றென்றும் பாவிப்பேன்" என்று சொன்னார் நர்கீஸ். என் அபிமான நடிகையான நர்கீஸ், எங்கள் வீடுவந்து, என்னை சகோதரியாக ஏற்றுக்கொண்ட தினத்தில் நான் அடைந்த குதூகலத்திற்கு அளவே கிடையாது !

ராகினி.

அகில இந்திய மகாநாடு ஒன்று முன்பு ஒரு சமயம் சென்னையில் நடைபெற்றது. அந்த மகாநாட்டின் முடிவில் எங்கள் நடனக் கச்சேரி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மகாநாட்டில் இந்தியப் பிரதமர் நேருஜி அவர்களும் கலந்து கொண்டார்கள். அங்கு நாங்கள் நடனமாடினோம்! உலகின் மாபெரும் தலைவர்களுள் ஒருவரும், தன்னிகரில்லா இந்தியத் தலைவருமான ஜவஹர்லால் நேருவின் முன்பு நாங்கள் முதன் முதலாக நடனமாடினோம். பயம் ஒருபுறம், பெருமை மற்றொருபுறம். நடன முடிவில் நேருஜி எங்கள் இருவரையும் அழைத்து, எங்கள் நடனத்தைப் பாராட்டினார். அவர் அருகே அமர்ந்து அவரது பாராட்டு மொழிகளைக்கேட்ட அந்த நாளை நினைத்துக்கொண்டு இன்றும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைப்பதுண்டு.

லலிதா,

'பாட்டுக்கள் இல்லாமல் ஒரு தமிழ்ப் படம் தயாரிக்க வேண்டும். அதுதான் எனது நீண்ட நாள் விருப்பம்' என்று, என்னிடம் பேட்டிகண்ட சினிமா சஞ்சிகை ஆசிரியர் ஒருவருக்கு பதில் தெரிவித்தேன். 1951-ல் இச்சம்பவம் நடந்தது. பின்னர் இரண்டு ஆண்டுகள் கழித்து 'அந்த நாள்' படம் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டது. பாட்டுக்களோ, நடனமோ இல்லாத அந்தப் படத்தை ஏவி.எம்.முக்காக நான் தயாரித்தேன். அதே சமயம் மேற்படி சினிமா சஞ்சிகை ஆசிரியரிடம் நான் தெரிவித்த எனது விருப்பமும் பூர்த்தி பெற்றதைக் குறித்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். தென்னிந்தியாவிலேயே ஆடல் பாடலின்றி உருவான

முதல் படம் இதுதான் என்று நினைக்கிறேன். என் எண்ணம் ஈடேறும் வகையில் அமைந்த 'அந்த நாள்' படப்பிடிப்பின் இறுதி நாள்தான் என் வாழ்க்கையிலேயே மிக்க சந்தோஷகரமான நாள்.

எஸ். பாலசந்தர்.

இந்தியப் பிரதமர் நேருஜீ எழுதியுள்ள 'உலக சரித்திரம்' என்ற புத்தகத்தில் மாபெரும் ஆசிய வீரன் ஸெங்கிஸ்கானைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆசியாவின் மீது படையெடுத்து, இந்நாட்டு மக்களின் செல்வங்களையெல்லாம் சூறையாடிச் சென்றவர்கள் மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால், அவர்களைப் பழிக்குப்பழி வாங்கிய முதல் ஆசிய வீரன் நம் ஸெங்கிஸ்கான். அவன் ஆசியாவிலிருந்து அங்கு படை எடுத்துச் சென்றான். ஆசியா அன்று பலம் பொருந்தி விளங்கியது. அன்று போல் இன்றும் நம் ஆசியா பலம் பெற்று வருகிறது. இதனால் நாம் அவர்கள் மீது படையெடுக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. தற்காப்புக்குத் தயாராகி விட்டோம் என்றுதான் பொருள். இதை உணர்த்தும் வகையில் 'இந்தியா விரைவிலேயே உலகின் ஐந்தாவது வல்லரசாகத் திகழப் போகிறது' என்று நேருஜீ சமீபத்தில் தெரிவித்தார். இச்செய்தியைப் பத்திரிகைகளில் படித்த நான், அன்று அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

எம். என். நம்பியார்.

விஜயா புரொடக்ஷன்ஸார் முதன் முதலாகத் தயாரித்த 'சௌகார்' தெலுங்குப் படத்தில், நான் முதன் முதலாக கதாநாயகி வேஷத்தில் தோன்றினேன். எனது முதல் படமும் அதுதான். அந்தப் படத்தின் முதல் நாள் படப்பிடிப்பன்று நான் எவ்வளவு சந்தோஷமாக இருந்தேன் தெரியுமா? அந்த நாளுக்கு இணையான நாள் இதுவரை எனக்கு வந்ததே கிடையாது.

சௌகார் ஜானகி.

ஏவி. எம். தயாரித்த 'வாழ்க்கை' படத்தை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். அந்தப் படத்தில் பிரதம பாகமொன்றைத் தாங்கி நான் நடிப்பதாக இருந்தேன். ஆனால் திடீரென்று எனக்கு பதிலாக வேறொருவர் அதற்கு அமர்த்தப்பட்

பட்டார். இச்சம்பவம் எனக்கு மிக்க மன வருத்தத்தை அளித்தது. எனக்கு ஏற்பட்ட சோகத்திற்கு அளவே கிடையாது. உடனே தென்கன்னட ஜில்லாவில் உள்ள தர்மஸ்தலம் என்ற கிராமத்தில் இருக்கும் ஸ்ரீ ஹெக்டே என்ற மகானின் நினைவு எனக்கு வந்தது. அவர் எங்கள் குலகுரு போன்றவர். திரிகால ஞானி அவர். ஏவி. எம். படத்தில் நான் சந்தர்ப்பம் பெருத விவரத்தை எழுதி, எனக்கு மீண்டும் அங்கு நடிக்க சந்தர்ப்பம் கிடைக்குமா என்று கேட்டிருந்தேன். உடனே ஸ்ரீ ஹெக்டே பதில் எழுதினார். 'வருத்தம் வேண்டாம்! வெற்றி நிச்சயம் உண்டு' என்று எழுதியிருந்தார் அவர். அதே போல், ஏவி. எம். பின்னர் எடுத்த ஹிந்தி வாழ்க்கை (பஹார்) படத்தில், எனக்கு நல்ல பாத்திரம் கிடைத்தது. எனக்கு மிக்க சந்தோஷத்தை அளித்த நாள் "நான் வெற்றி பெறுவேன்" என்று ஸ்ரீ ஹெக்டேயிடமிருந்து பதில் வந்த அந்த நாள்!

பண்டரிபாய்.

என் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு முழுமுதற்காரணமாக இருந்த திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் லக்ஷ்மீகாந்தன் கொலை வழக்கிலிருந்து விடுபட்டு, விடுதலை பெற்ற அந்த நாள்—அப்பப்பா, நான் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்து என்னையே மறந்திருந்த நாள் அதுதான்.

எஸ். வி. சஹஸ்ரநாமம்.

நான் சிறிதும் எதிர்பார்க்கவேயில்லை. இன்றும் நாளையும் கூட எனக்கு இவ்விஷயத்தை நினைத்தால் மகிழ்ச்சியில் என்னை மறந்து விடும் நிலையை அடைந்து விடுகிறேன். ஆம், அன்று நான் யார் முகத்தில் விழித்தேனோ! வாஹினி பி. என். ரெட்டி அவர்கள் என்னை தன் படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். வாஹினியின் படமொன்றில் நடிக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு நீண்ட நாட்களாகவே உண்டு. என் 'இன்பக் கனவு' நினைவான அந்நாள் என் வாழ்க்கையிலேயே ஓர் திருநாளாகும்.

ஜமுனா.

ஏவி. எம். 'நாம் இருவர்' படம்தான் நான் நடித்த முதல் படம். அப்போது ஏவி. எம். ஸ்டூடியோ காரைக்குடியில் இருந்தது. படம் எடுத்தவுடன் அன்

ருடம் அவற்றைச் சென்னைக்கு அனுப்பி, அவற்றை கழுவி அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னையிலிருந்து படம் கழுவி வந்தவுடன் அவற்றை உடனே திரையிட்டு பார்ப்பார்கள். என் முதல் நாள் படப்பிடிப்பு நடந்து ஐந்து நாட்கள் இருக்கும். சென்னையிலிருந்து நான் படத்தில் நடித்த காட்சி, கழுவி வந்திருந்தது. தியேட்டரில் அதைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தனர். திரு. மேனா அவர்கள், டைரக்டர்கள் ப. நீலகண்டன், எம். வி. ராமன் மற்றும் பலரும் தியேட்டரில் இருந்தார்கள். எனக்கு நான் நடித்த காட்சி எப்படி அமைந்திருக்கிறது என்று பார்க்க மிக்க ஆவலாக இருந்தது. தியேட்டர் காபினுக்குள் ஆபரேடரின் துணை கொண்டு சென்று, ஒளிந்து நின்று அக்காட்சியைப் பார்த்தேன். என் நடிப்பு பற்றி மற்றவர்கள் தரமாக அமைந்திருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு தியேட்டர் காபினில் ஒளிந்திருந்து படத்தைப் பார்க்க அனுமதித்த கோவிந்தராஜ் என்ற அந்த ஆபரேடர் தற்போது சென்னை ஸன் தியேட்டரில் பிரதம ஆபரேடராக இருக்கிறார். ஒளிந்திருந்து 'என் திறமை' யைக்கண்ட அந்த தினத்தில் என் மகிழ்ச்சி கட்டுக்கடங்காததாக இருந்தது.

டி. கே. ராமச்சந்திரன்.

வட இந்தியாவிலுள்ள 'சாரநாத்' பௌத்தர்களின் பிரசித்தி பெற்ற யாத்திரை ஸ்தலம். புத்தர் பற்றிய பல நினைவுச் சின்னங்களும், சரித்திரப்பிரசித்தி பெற்ற ஓவியங்களும் அங்கிருக்கின்றன. சுமார் ஏழு வருடங்களுக்குமுன் நான்-படவுலகில் பிரவேசிப்பதற்கு முன்பாக—என் குடும்பத்தாருடன் அங்கு சென்றிருந்தேன். கங்கை நதியைக் கடந்து அங்கு செல்ல வேண்டும். நாங்கள் ஒரு படகில் ஏறிக்கொண்டு கங்கையைக் கடக்க ஆரம்பித்தோம். அலைமோதி வரும் அந்தப் புண்ணிய நதியில், ரமணீயமான இயற்கைக் காட்சிகளை அநுபவித்தபடி படகில் செல்வதற்கு என்ன ஆனந்தமாக இருந்தது தெரியுமா? அதுதான் என் வாழ்விலே இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்த நாளாகும்.

டி. கிருஷ்ணகுமாரி.

நாடக உலகிலிருந்து, பலவாறு சிரமப்பட்டு படவுலகில் புகுந்தேன். நாடக உலகிலிருந்து திரையுலகில் புகுந்த நாள் என் வாழ்க்கைப் பாதையையே திருப்பி அமைத்து விட்டது. அதுமட்டுமல்ல, அந்தப் பொன்னான நாள் என் வாழ்விலேயே அதிக மகிழ்ச்சியை அள்ளித் தெளித்தது.

டி. ஆர். ராமச்சந்திரன்.

எனது முதல் படம் கன்னடத்தில் தயாரான 'சம்சார நௌகா'. அப்படம் முடிவடைந்ததும் நான் அதைப் பார்த்தேன். 'என்னால் கூட இவ்வளவு நன்றாக நடிக்க முடியுமா? நான் படத்தில் காட்சியளிக்கும் அளவுக்கு அழகாயிருக்கிறேனா?' என்று எண்ணி எண்ணி வியப்படைந்தேன் நான். என் வாழ்க்கையிலேயே மிக்க சந்தோஷகரமான நாள் அந்த நாள்தான்.

எம். வி. ராஜம்மா.

1944-ம் வருஷம் சென்னை பி. ஆர். அண்டு சன்ஸ் முன்பு இருந்த பஸ் ஸ்டாண்டில் நின்றிருந்தேன் நான். சென்னையிலே மேற்கொண்டு எங்கே தங்குவது, என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடிக்கொண்டிருந்தேன் நான். அடுத்தவேளை சாப்பாட்டைப் பற்றிக்கூட என்னால் நினைக்க முடியவில்லை. அந்த நிலையில் நான் நின்றிருந்தேன் அங்கு. காலம் பறந்தது. பத்து ஆண்டுகள் ஓடின. நான் அதே பி.ஆர். அண்டு சன்ஸ் அருகே என் நண்பருடன் ஒரு 'டாக்ஸி'யில் வந்துகொண்டிருந்தேன். அந்த இடத்தைப் பார்த்ததுமே எனக்குப் புல்லரித்தது! என் மனதிலே பலவித கிளர்ச்சிகள்! நண்பரை அனுப்பிவிட்டு, டாக்ஸியிலிருந்து நான் இறங்கி அங்கு நின்று கொண்டேன். சுற்று முற்றும் பார்த்தேன். பஸ் ஸ்டாண்ட், பி. ஆர். அண்டு சன்ஸ், டிராம் பாதை எல்லாம் பத்து ஆண்டுகளுக்கு முன் எப்படிக் காக்ஷி தந்தனவோ அப்படியே இருந்தன. ஆனால் நான்? என்னிடையே பெருத்த மாறுதல்! நான் ஒரு நடிகன். வறுமையில் போராடிய நான் ஓரளவு இன்று வசதியுடனிருக்கிறேன். அன்றும் இன்றும் என் நிலையை பி. ஆர். அண்டு சன்ஸ் பஸ் ஸ்டாப்பில் எண்ணிப் பார்த்த அந்த நாள்தான் என்வாழ்விலே நான் மிக்க மகிழ்ச்சியை அனுபவித்த நாளாகும்.

ஏ. கருணாநிதி.

வட இந்திய வெள்ளித்திரை

ஜெமினியின் ஹிந்திப் படம்

பஹூத் தின் ஹூவேயைத் திரையிட்டு வெற்றி கண்ட ஜெமினி பிக்சர்ஸார் தற்போது 'இன்ஸானியத்' என்ற ஹிந்திப் படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். ஷெரீடனின் 'பிஸாரோ' என்ற ஆங்கிலக் கதையைத் தழுவிய இப் படத்தை கே. ஜெ. மஹாதேவன் டைரக்ட் செய்யப்போகிறார். மனித சமுதாயத்தின் உயர்வுக்கு வழிகாட்டும் இந்தக் கதை மிகவும் உணர்ச்சி வசமானதாக இருக்குமாம். வட இந்திய, தென்னிந்திய பிரபல நக்ஷத்திரங்கள் 'இன்ஸானியத்'தில் நடிப்பார்கள்.

பக்ஷிராஜாவின் 'ஆஜாத்'

பக்ஷிராஜாவின் ஹிந்திப் படமான 'ஆஜாத்' பாதிக்கு மேல் வளர்ந்தாகிவிட்டது. எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு முதற்பகுதி தயாரிப்பு முடிந்ததும் பம்பாய் சென்று பாடல்கள் மெட்டமைக்கப் பட்டு, பதிவாக்கப்படும் விஷயத்தைக் கவனித்தார். ஸி. ராமச்சந்திரா மிகுந்த சிரத்தையுடன் சங்கீத டைரக்ஷனைக் கவனித்திருக்கிறார். சுமார் ஏழெட்டு பாடல்களை ராமச்சந்திரா மெட்டமைத்து அதை லதாமங்கேஷ்கரும் பாடுகிறார் என்றால் அதன் தரத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? காதல், வீரம், சோகம், பாடல் முதலிய எல்லா அம்சங்களிலும் உயர்ந்ததாக உள்ள இப்படத்தில் திலீப்குமாரும், மீனாகுமாரியும் பிரதமபாகத்தில் நடித்து வருகின்றனர். பிரான், ஓம் பிரகாஷ், அசலாஸச் தேவ், பத்ரி பிரஸாத், எஸ். நஸீர், முராத், ஷம்மி, ரந்திர். ராஜ் மெஹ்ரா முதலியோர் பக்கபலமாக இருந்து படத்தைச் சோபிக்கச் செய்கின்றனர். ராஜேந்திர கிருஷ்ணா வசனம்—பாடல்களின் பொறுப் பேற்றிருக்கிறார். எஸ். எம். எஸ். நாயுடு இந்தப் படத்தை ஒரு மகத்தான படமாகத் திரையிட வேண்டி இரவும் பகலும் பாடுபட்டு வருகிறார். இந்தப் படத்தின் சகல உரிமைகளும் ராஜ்ஸ்ரீ பிக்சர்ஸாரைச் சேர்ந்தது.

'ஷ்ரீ 420' ஹிந்திப் படத்தில் ராஜ்கபூர்

தாகு கி லட்கி

ஹரீஷ் புரொடக்ஷன்ஸாரின் 'தாகு கி லட்கி' ஹிந்திப் படம் சென்ஸாராகி "பெரியோர்களுக்கு மட்டும்" என்ற பெருமை

யுடன் வெளியேறியது. தென்னிந்தியாவில் இப்படம் விரைவில் வெளிவரப்போகிறது. இவ்விதழ் வரும்போது அப்படம் வெளியாகி விட்டிருக்கக்கூடும். ஷேக் முக்தார், கீதாபலி இருவரையும் பிரதம பாகத்தில் கொண்ட இப்படத்தில் அர்ஜுன், சிவராஜ், முக்ரி, ரவிகாந்த், கக்கூ முதலியோரும் தோன்றுகின்றனர். ஹேமந்த குமாரின் சங்கீத டைரக்ஷன் இதில் பிரமாதமாக இருக்கிறது.

பூலோக அப்ஸரஸ்!

சன்ரைஸ் பிக்சர்ஸாரின் 'அப்ஸரா' முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. பத்மினி அப்ஸரஸாகத் தோன்றும் இப்படத்தை வி. எம். வியாஸ் டைரக்ட் செய்து வருகிறார். பணத்தை பணமென்று பாராமல் செலவு செய்து பிரம்மாண்டமான ஸெட்டுகளைப் போட்டுப் படம் பிடித்து வருகிறார்கள். நிருபாராய், பிரதிப்குமார், யசோதரா கட்ஜு, மாருதி முதலியோர் நடிக்கும் அப்ஸராவில் பத்மினியின் அற்புதமான நடனங்களும் நிறைய இருக்கின்றனவாம். சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி போல பத்மினியும் நிருபாராயும் தோன்றி நடிக்கும் இப்படம், உரிமைபெற்றுள்ள ராஜ்ஸ்ரீ பிக்சர்ஸாருக்கு மகத்தான வெற்றியைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

'ஷ்ரீ-420' ஹிந்திப் படத்தில் நர்கிஸ்

பகவானின் ஹல்லா குல்லா

அல்பேலா, ஜமேலா, ரங்கிலா போன்ற வெற்றிப் படங்களைத் தயாரித்த பகவான் ஆர்ட் புரொடக்ஷன்ஸாரின் சமீபத்திய வெளியீடான ஹல்லா குல்லா வடநாட்டில் பிரமாத வெற்றியுடன் ஓடுகிறது. ஹாஸ்யம், கானம் இரண்டும் பிரமாதமாக இருக்கின்றன. பகவானின் டைரக்ஷனில் தயாராகியுள்ள ஹல்லா குல்லாவின் தென்னிந்திய உரிமையை ஏவி. எம். லிமிடெட் ஸ்தாபனம் பெற்றிருக்கிறது. வட இந்திய ரசிகர்களையும் ஹல்லா குல்லா கவர்ந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீ சைதன்யரின் தென்னிந்திய விஜயம்

உள்ளத்தில் நேர்மையைக் கொண்டவர்கள் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. உள்ளத் தூய்மை கொண்டிருப்பவன்தான் ஆண்டவனின் கருணைக்குப் பாத்திரமாக முடியும் என்பதை பல மஹான்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படம் பிடித்தால் நாட்டுக்கு நல்லது என்று பலரும் கூறுகிறார்கள். அதைச் செயலில் காட்டி பல நாட்களாகவே நிரூபித்து வருகிறார் விஜய பட். தயாரிப்பாளர், டைரக்டர் என்ற வகையில் மிகச் சிறந்த மேதையான விஜய பட் பரத்மிலாப், ராம் ராஜ்யா, பைஜு பாவ்ரா முதலிய மகோன்னத சிருஷ்டிகளைத் தொடர்ந்து ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் சரிதத்தைப் படமாக்கியிருக்கிறார். பக்திமார்க்கப் படங்களில் லயித்து நடிக்கும் பாரத் பூஷண் சைதன்யராக நடித்திருக்கிறார். அவருடன் துர்க்கா கோட்டே, அமிதா முதலியோர் நடித்திருக்கின்றனர். விஜயபட் டைரக்ஷனில் தயாராகி

‘கண்கள் பேசும் இக்காட்சியில் வாய்க்கு வேலை ஏது?’
‘மிலாப்’ படத்தில் தேவ் ஆனந்தும் கீதாபலியும்

சரித்திர வரலாற்று நிகழ்ச்சிகளைப் படமாக்க, அவரது நண்பரும் பிரபல தயாரிப்பாளருமான நிரஞ்சன்பால்ஏற்பாடு செய்து வருகிறாராம். இதற்காக சவர்க்கார் தான் எழுதிய அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதியை நிரஞ்சன் பாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாராம். லண்டனில் படிக்கும் போதே இருவரும் நண்பர்களென்பதும் பல வருஷங்களுக்குப் பின் இருவரும் சந்திக்கிறார்களென்பதும் குறிப்பிடத்தக்கது.

யுள்ள ‘ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு’ ஹிந்திப் படத்தின் தென்னிந்திய விநியோக உரிமையை ஏவி. எம். லிமிடெட் ஸ்தாபனம் பெற்றுத் திரையிட்டிருக்கிறது. சமீபத்தில் வெளியான இப்படம், நாஸ்திகத்திற்குச் சரியான சவுக்கடி தருவதாகும்.

தாயாராக நர்கீஸ்!

மெஹபூப் புரொடக்ஷன்ஸார் அடுத்தபடியாக கேவா கலரில் தயாரிக்கப் போகும் ‘மதர் இந்தியா’ என்ற ஹிந்திப் படத்தில் ஒரு ஆதர்ஸ தாயின் பாத்திரத்தை நர்கீஸ் ஏற்று நடிப்பாராம். அந்தத் தாயின் பொல்லாத பிள்ளையாக திலீப்குமார் நடிக்கிறார். நர்கிஸும் திலீப்குமாரும் ஜோடியாகத் தோன்றாது உணர்ச்சியூட்டும் குணசித்ர பாத்திரங்களை ஏற்று நடிப்பது இப்படத்தில்தான். இம்மாதத்தில் இப்படத்தின்படப்பிடிப்பு வேலைகள் ஆரம்பமாகி விடும்.

சுதந்திரப் படம்

பிரபல அரசியல் தலைவர்களில் ஒருவரான வீரசவர்க்கார் எழுதிய இந்திய சுதந்திரப் போர் (1857) என்ற

படமெடுத்த பாம்பு!

‘ஜோருகா பாய்’ ஹிந்திப் படத்தின் வெளிப்புறக்காட்சி படமாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. நடிகை ஷீலா ரமணி ஒரு பாட்டுக்கு வாயசைத்துக் கொண்டிருந்தவர் திடீரென்று வாயைத் திறந்தபடி நின்று விட்டார். டைரக்டர் சேதன் ஆனந்தும் மற்றோரும் திடுக்கிட்டுப் பார்த்தபோது அங்கே பிரம்மாண்டமானதொரு பாம்பு காமிராவின் பார்வையில் காணப்பட்டது. முக்கால்வாசி பாட்டுக்கு வாயசைத்த ஷீலா ரமணியால் மேலே அசைக்கவே முடியாது போய் விட்டது. தன் கடமையை முடித்துக் கொண்ட பாம்பு எல்லோருக்கும் ‘டிமிக்கி’ கொடுத்து விட்டுப் போயே விட்டது!

சென்னையில் ‘பஹலி ஜலக்’

வைஜயந்திமாலா பிரதம பாகத்தில் நடித்துள்ள ஜகத் பிக்சர்ஸின் ‘பஹலி ஜலக்’ சென்னை ஸ்டார் டாக்கீஸில் பொங்கற்பரிசாக திரையிடப்படவிருக்கிறது. எம். வி. ராமன் டைரக்ட் செய்த இப்படம் ஒரு சிறந்த பொழுது போக்குச் சித்திரமாகும்.

புகழ் தந்த பாத்திரம்

யார் யார் எந்தெந்த பாத்திரத்தில் நடித்தபின் புகழ்பெற்றார்கள் என்பதைக் குறிக்கிறது இக்கட்டுரைத் தொடர்.

'அஞ்சலை' லலிதா

அஞ்சலை !

அவள் அழகு பிம்பம்; நேர்மை மிக்க தமிழ்ப் பெண்; வாலைக்குமரி. அவள் ஒரு பிச்சைக்காரி. அவளுக்கென்று யாரும் கிடையாது. அவள் தாய் இருக்கிறாள்; மாமன் இருக்கிறான். ஆனால் அவர்கள் மனித உருவிலே நடமாடும் பேய்கள். சேற்றிலே செந்தாமரை முளைப்பதுபோல, முள்ளின் நடுவில் மலரும் ரோஜா போல அவள் அவர்கள் குடும்பத்தில் பிறந்தாள். ஆனாலும் ஸ்புடமிட்ட தங்கம் போல நேர்மை என்னும் ஆபரணத்துடன் பிரகாசித்தாள் அவள்.

'அஞ்சலை' லலிதா

அவள் உள்ளத்திலே ஒருவனுக்கு இடம் கிடைத்தது. ஆம், உமாகாந்த் அவர்கள் வீட்டில் குடியேறியபோது அவள் உள்ளத்திலும் குடியேறினான். அவனுக்கு தன் சகமாணவி லக்ஷ்மியிடம் அளவற்ற காதல். இதை யறிந்தபோது அஞ்சலையினால் அந்தக் கொடுமையைத் தாங்க முடியவில்லை. அவன் அவளை வெறுத்தாலும் அவளால் அவனை வெறுக்க முடியவில்லை. அவனுக்குப் பணிசெய்தே தன் காலத்தை ஓட்ட விரும்பினாள் அந்த உத்தம யுவதி.

தேசபக்தனான உமாகாந்தின் மேல் போலீஸாரின் குண்டு பாயும்போது, அவனுக்காக வாழ்ந்த அஞ்சலை அவனுக்காகவே வீழ்ந்துவிடத் துணிந்து, குறுக்கே பாய்ந்து, அதைத் தன் மார்பிலேற்றுக் கீழே சாய்கிறாள். மற்றொரு குண்டு கையில்பாயவே உமாகாந்த்தும் கீழே விழுகிறான். அப்போதுதான் அவன் அவளைப் புரிந்து கொள்ளுகிறான். 'அஞ்சலா! நீ எங்கே இங்கு வந்தாய்?' என்று பதறிக் கேட்கிறான் உமகாந்த். 'உமாகாந்த்! உன் மனப் புண்ணைத் தீர்க்க நீ இங்கு வந்தாய். அதற்காகவே நானும் இங்கே வந்தேன். நீ என்னை விரும்புவதாக ஒரு வார்த்தை சொல். அதுவே எனக்குப் போதும்' என்று அன்புப் பிச்சை கேட்கிறாள் பேதை அஞ்சலை. திடுக்கிடுகிறான் உமாகாந்த். தான் வெறுத்தவள் தனக்காக உயிரையே கொடுத்துவிட்டாள் என்பதை அறியும்போது அவன் துடிக்கிறான். 'அஞ்சலா ! நீ மறக்க முடியாத மாணிக்கம். என் மனக்கோயிலில் நீ நிரந்தரமான இடம் பெற்று விட்டாய்' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறுகிறான். அப்போதுதான் முதன் முறையாக அவள் சிரிக்கிறாள். அவள் ஆசை

நிறைவேறி விட்டது. அவன் உள்ளத்தில் இடம் பெற்ருள்; உலகத்திலிருந்து விடுதலையும் பெற்ருள்.

'ஏழை படும் பாடு' படத்தைப் பார்த்தவர்களின் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்ட அஞ்சலை பாத்திரத்தில் தோன்றி அத்துடன் இழைந்து ஜீவனளித்து விட்டார் லலிதா. அஞ்சலை என்ற பாத்திரம் லலிதாவுக்கு மகத்தான புகழை அள்ளிக்கொடுத்தது. அவர் வெற்றிப் பாதையிலே முன்னேறக் காரணமாயிருந்தது அஞ்சலை பாத்திரம் என்பதை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாதல்லவா?

'தமிழ் வாத்தியார்' சாரங்கபாணி

'சபாபதி' ராமச்சந்திரன்

சபாபதி ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளை; மகா அசடு. படிப்பு வராது; பழகத்தெரியாது. அந்த அசட்டுப் பிள்ளைக்குத் தாய் பாஷையான தமிழில்கூட நன்ருக எழுத பேச, வராது! தமிழ்ப்பாடம் கற்று (!) அவன் வியாசம் எழுதுகிருன். "இத்தனை பக்கங்களுக்குள் எழுதியாக வேண்டும்" என்று கட்டளை போடுகிருர் ஆசிரியர். முதல் பக்கத்தில் ரயில் கிளம்புகிறது, 'குப்...குப்...' என்று. அத்துடன்தானு! "குப் குப்..." என்று மெதுவாக ஆரம்பித்து 'குப்குப்குப்குப்...' என்று வேகமாக ஓட ஆரம்பிக்கிறது. வியாசமல்ல, ரயில் வண்டிதான்! தகப்பனுருக்குக் கோபம் தாங்க முடியவில்லை. பையன் 'குப்குப்'பை நிறுத்திவிட்டு "கடகடகடகடகட..." என்று ஆரம்பிக்கிருன். "இது என்னடா இது?" என்று கேட்டுத் தலையிலே கையை வைத்துக்கொள்ளுகிருர் தந்தை. "ரயில் வண்டி பாலத்திலே போகிறது" என்று பதில் வருகிறது! அவன் மனைவியின் மூலம் புத்திசாலியாகிருன். இந்த சபாபதி பாத்திரத்தில் தோன்றி சுபாவமாக நடித்து ரஸிகர்களைச் சிரிக்கச் செய்த பிறகுதான் டி. ஆர். ராமச்சந்திரன் தமிழ்நாட்டின் சிறந்த ஹாஸ்ய நடிகர்களில் ஒருவராக இடம் பெற்ருர். சபாபதி பாத்திரம் அவருக்காகச் சிருஷ்டிக்கப்பட்டது போலிருந்தது, இல்லையா?

'சபாபதி' ராமச்சந்திரன்

'தமிழ் வாத்தியார்' சாரங்கபாணி

மெலிந்த உடல்; தளர்ந்த நடை; அக்குளில் ஒரு ஓட்டைக் குடை; கிழிந்த கோட்டு; இந்திரன் கண் போன்ற வேஷ்டி; குழி விழுந்த கண்கள்; மூக்கின் நுனியிலே விழுந்துவிடுவது போல் தொங்கும் மூக்குக் கண்ணடி; காலில் கந்தல் பாதரக்ஷைகள்; கோட்டின் கிழியாத பைக்குள் ஒரு பொடி மட்டை...இதுதான் தமிழ் வாத்தியார் கந்தசாமி பிள்ளையின் வர்ணனை! அவர் செய்த தீவினையோ என்னவோ சபாபதிக்கு தமிழ் சொல்லிக் கொடுக்கும் பொறுப்பு அவர் தலையில் விழுந்தது!

சபாபதி தகப்பனரிடம் தான் வியாசம் எழுதியதைப் படித்துக் காட்டுகிருன். 'குப் குப்' என்று அவன் சொல்லும்போது தமிழ் வாத்தியாரின் உடல் 'குப்'பென்று வியர்த்துக் கொட்டுகிறது! 'குப் குப'பென்று உள்ளம் புகைகிறது. 'கட...கட' என்று பாலத்தின் மேல் சபாபதியின்(!) ரயில் ஓடும்போது அவர் தலை மீதுதான் ஓடுகிறது போலிருந்தது. சபாபதியின் தகப்பனர் அவன் வியாசம் எழுதிய காகிதத்தை, அவன் எத்தனை 'குப் குப்...' "கட கட" சொன்னனே அவ்வளவு சுக்குநூருகக் கிழித்து தமிழ் வாத்தியாரின் தலையில் போட்டு விட்டுப் போகும்போது சிலையாய் நிற்கும் தமிழ் வாத்தியாரிடம் நமக்கு அளவு கடந்த அனுதாபம் ஏற்படுகிறது. ஒரு அசல் தமிழ் வாத்தியாராக மாறி, அவர்களின் நிலையை அப்படியே பிரதிபலித்துக் காட்டிய கே. சாரங்கபாணி ஒரு ஹாஸ்ய மேதை - குணசித்திர நடிகர் என்பதை அந்தப் பாத்திரமே அறிவித்தது. வாழ்க தமிழ் வாத்தியார்கள்!

'பாவுரமா' பானுமதி

'பாவுரமா' பானுமதி

இளமை கொழிக்கும் வாளிப்பான தேக அமைப்பு; கண்டவர் காமுறும் கட்டழகு; கயல் விழி; துடி இடை; முத்துப் பல் வரிசை; எலுமிச்சை நிறம். அவள் புன்னகை செய்தால் பொன் நகைகளை காணிக்கையாக்கக் காத்திருக்கும் பக்த கோடிகள்(!) ஏராளம். அவள் ஒரு கிராமத்து மங்கை. பணம் அவளை படாடோப சுந்தரியாக்கி அவள் குணத்தையே மாற்றி விட்டது. கிராமத்துச் 'சுப்புலு'வான அவள் நாகரீக நடனக்காரி 'சுஜாதா'வாகி விடுகிருள். அன்புத் தம்பதிகளைப் பிரிக்க அவள் வீசும் வலையிலே அக்குடும்ப நாயகன் மட்டுமென்ன, நாமும்தான் விழுந்து விடுகிருேம். "ஓ....ஹொ......ஹொ...... ஹோ...பாவுரமா" என்று சுஜாதா கையிலே புருவுடன் பாடிய பாட்டும் அப்போது அவளது தோற்றமும் நம்மை என்னென்னவோ செய்து விட்டன! பலவித ரஸங்களைப் பிரதிபலிக்கும் அந்தப் பாத்திரத்திலே பானுமதி தோன்றிய பிறகுதான் தென்னிந்தியாவின் மூலை முடுக்கிலெல்லாம் - தென்னுட்டவர் உள்ள இடங்களிலெல்லாம் - அவரது புகழ் ஓங்கி வளர்ந்தது. 'பாவுரமா' பானுமதி என்று கூடப் பலர் கூறுவதை நாம் கேட்டிருக்கிருேம் அல்லவா? ★

T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி
தபால் பெட்டி 1151. மதராஸ்-21.

அவாவுடன் கண்ட 'ஆவா'

ராகினி

என்றெல்லாம் சொல்லியிருந்தார்கள். எனவே ஆவலுடன் அங்கு விரைந்து வந்தவர்களுக்கு "ஆவாவுக்கு உடல்நிலை சரியில்லை. ஆகவே அவர் விமானத்திலிருந்து இறங்க மாட்டார்' என்ற செய்தி எப்படியிருந்திருக்கும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம்.

ஆனால் என் மனதினுள்ளே ஒரு விசித்திர எண்ணம் தோன்றியது.

'நான் ஒரு நடிகை. ஆவாவும் ஒரு நடிகைதான். நடிகையைச் சந்திக்க மற்றொரு நடிகைக்கு உரிமையிருக்கிறது' என்ற தைரியத்தில் விமானத்தினுள் புகுந்தேன்!

சிங்கப்பூரிலிருந்து வந்த அந்தப் பிரம்மாண்டமான விமானம், ஒய்யாரமாக மீனம்பாக்கம் தரையைத் தொட்டது. விமான நிலையத்தில் கூடியிருந்த நூற்றுக்கணக்கானவர்களிடையே ஒரு திடீர் பரபரப்பும் உற்சாகமும் ஏற்பட்டன.

நானும் ஒரு ஒதுக்குப் புறமான இடத்தில் நின்று கொண்டு விமானத்தின் வாயிலையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். யார் யாரோ இறங்கினார்கள்! ஆனால் நானும், என்னைப் போல் அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கானவர்களும் ஆவலுடன் எதிர்பாத்த 'ஆவா' மட்டும் இறங்கவில்லை!

ஆம், அவர்தான் பிரபல அமெரிக்க நடிகையான ஆவா கார்ட்னர்.

"முதலில் ஆவா 'இறங்குவார்! பத்திரிகைப் பிரதிநிதிகளைப் பார்ப்பார்"

நான் விமானத்தினுள் சென்றதும், விமான அதிகாரி ஒருவர் என்னிடம் வந்து அன்புடன் விசாரித்தார். நான் விஷயத்தை அவரிடம் சொன்னேன்.

"ஆவா களைத்துப் போய் படுத்திருக்கிறார். ஒரு நிமிஷம் இருங்கள். அவரிடம் சொல்லி விட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஆவாவிடம் சென்றார்.

மறுகணம் அங்கிருந்த மெல்லிய திரை விலகியது! அங்கிருந்து அன்புடன் என்னை அழைத்தது ஒரு உருவம். ஆம்! ஆவா கார்ட்னரேதான்!

நான் அவர் அருகே சென்றேன். கழுத்துவரை வெள்ளை போர்வையொன்றினால் போர்த்துக் கொண்டு படுத்திருந்தார் ஆவா. லிப்ஸ்டிக் ஒன்றைத் தவிர அவரிடம் வேறு விசேஷ அலங்காரம் காணப்படவில்லை.

நான் அவர் அருகே சென்றதும் என்னை பார்த்து புன்முறுவல் செய்தார். தன்னருகே இருந்த ஆசனத்தில் உட்காரும்படிச் சொன்னார். நான் உட்கார்ந்ததும் அன்புடன் என்னிடம் "நீங்கள் யார்?" என்று விசாரித்தார்.

"திருவாங்கூர் சகோதரிகளில் நானும் ஒருவள். நானும் என் சகோதரிகளும் படங்களில் நடித்து வருகிறோம்" என்று பதில் தந்தேன்.

"மிக்க சந்தோஷம்! இந்திய நடிகைகளாகிய நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள்!" என்றார் ஆவா. அதைக் கேட்க எனக்குப் பெருமையாக இருந்தது. பின்னர் நாங்கள் இருவரும் கைகுலுக்கி அன்பைப் பறிமாறிக் கொண்டோம்.

எங்கள் அறிமுகத்துக்குப் பின் சம்பாஷணைகளும் தொடர்ந்தன.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?"

ராகினி

"சிங்கப்பூரிலிருந்து. அங்கு நான் நடித்த ஒரு படத்தின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டேன்!" என்றார்.

"தற்சமயம் எங்கு போகிறீர்கள்?"

"ரோம் நகரத்துக்கு?"

இதற்கிடையே அவர் தொண்டை கரகரத்தது. உடனே என்னிடம் "தயவு செய்து குடிக்க ஏதேனும் பானம் தருகிறீர்களா?" என்று எதிரே சுட்டிக் காண்பித்தார். அங்கே பல வகை பான வகைகள் வைக்கப்பட்டிருந்தன. நான் எழுந்துசென்று அங்கிருந்து ஒரு ஆரஞ்சு கிரஷ்ஷை எடுத்துக் கொடுத்தேன்.

அதைவாங்கிப் பருகிய அவர் எனது உதவிக்கு நன்றி தெரிவித்தார்.

"இந்திய நாட்டுக்கு நீங்கள் வந்தது பற்றி எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான்!" என்றேன் நான்.

"ஓ! அப்படியானால் நீங்கள் எப்போது எங்கள் நாட்டிற்கு வரப்போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"இங்குள்ள எங்கள் படவேலைகளை முடித்துக் கொண்ட பின் ஒரு நடன கோஷ்டியுடன் நிச்சயம் உங்கள் நாட்டிற்கு வரப்போகிறோம்" என்று அவரது அழைப்புக்குப் பதில் சொன்னேன் நான்.

ஆவாவுக்கு நான் அணிந்திருந்த வைர நெக்லஸ் ரொம்பவும் பிடித்துவிட்டது.. "வெகு அழகாக இருக்கிறது இந்த ஆபரணம்" என்று விமர்சனம் செய்தார் அவர்.

அவருடன் பேசப் பேச எனக்கு உற்சாகம் அதிகமாகி வந்தது. பின்னர் நான் கொண்டு வந்திருந்த ஒரு சந்தனப் பேழையை அவருக்கு என் அன்புப் பரிசாகக் கொடுத்தேன். அவரும் அதை ஆவலுடன் ஏற்றுக் கொண்டார். கூடவே நான் எடுத்துச் சென்ற அவரது வர்ணப் படத்தில் கையெழுத்தும் போட்டுக் கொடுத்தார் ஆவா.

நான் ஆவாவுடன் சுமார் பத்து நிமிஷங்கள் உரையாடினேன். முடிவில் அவருக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துவிட்டு விமானத்திலிருந்து இறங்கினேன். ★



நந்தாராம், நம்பியார், ரேவதி மூவரும் தோன்றும் ஸன்ரைஸ் புரொடக்ஷன்ஸ் 'நல்லவன்' இம்மாதம் வெளிவர விருக்கிறது.

ஸ்ரீ சுந்தரி பிக்சர்ஸ்
வீரசுந்தரி
காட்சிகள்

பல வருஷங்களுககுபபின் வருகிறது ஒரு ஸ்டன்ட் படம். ஸ்ரீசுந்தரி பிக்சர்ஸார் இதன் தயாரிப்பாளர்கள். சில பகுதிகள் வாஹினியில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.



கே. பி. ஜே. சுந்தராம்பாள் வீர சுந்தரியாகவும் மற்றும் பல வித பாத்திரங்களிலும் தோன்றி நடிக்கிருர்.



கே. பி. ஜானகி ராமன் கதாநாயகனாக நடிக்கும் 'வீர சுந்தரி' ரசிகர்களின் பொழுது போக்குப் படமாக அமையுமாம்.

240 வியாதிகளுக்குக் கைகண்டது

ஆர். எஸ். பதி மருந்து

(ரிஜிஸ்டர்டு)

இது வீட்டிலிருந்தால் ஒரு டாக்டர் இருப்பது போலாகும்

தலைவலி, ஜலதோஷம், ஜன்னி, வாய்வுக் குத்து, கை கால் வலி முதலிய அநேக வியாதிகளை குணமாக்கும்.

எச்சரிக்கை **போலி மருந்துகளை** வாங்கி **ஏமாருதீர்கள். எங்கள் ஆறுமுக முத்திரையையும், டாக்டர் போட்டோவையும் கவனித்துப் பார்த்து வாங்குங்கள்.**

ஆர். எஸ். பதி அண்டு கோ

(REGD)

214-215, மேலமாசி வீதி, மதுரை.

சிலோன் ஏஜெண்ட்: M. C. A. ஹூதா அண்டு கோ, 20, டாம் தெரு, கொழும்பு.

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!



(ஒரு அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம் மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்பட செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லை யென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: **THE BENGAL MESMERISM HOUSE,**
(P. P. M.) NAKODAR, (P. B.)

கண்டேன் கண்டேன்

ரயிலில் நாகராஜன்

9-6-54-ம் தேதியன்று என் நண்பரை வழியனுப்ப நானும், நண்பர் தசரதனும் திண்டுக்கல் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றிருந்தோம். கோவை செல்லும் எக்ஸ்பிரஸ் அன்று மிகத் தாமதமாகவே வந்தது. அங்கிருந்த பெஞ்சில் உட்கார்ந்து நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் அருகில் ஒருவர் 'பேசும் படம்' படித்துக்கொண்டிருந்தார். யார் அவர் என்று கவனித்துப் பார்த்தோம். 'நால்வர்' நாகராஜன்தான் அவர்! பின்னர் அவரிடம் சாவகாசமாக சினிமா விஷயங்கள் பற்றிப் பேசினோம். "11-6-54ல் மாங்கல்யம் திண்டுக்கல் சென்ட்ரலில் திரையிடப்படுகிறது. தாங்கள் ஆரம்ப தினத்தன்று வந்தால் மிக்க நன்றாகயிருக்கும்" என்று நாங்கள் கூறினோம். அன்றைய தினம்தான் 'பெண்ணரசி'யின் படப்பிடிப்பு ஆரம்பமாகிறதென்றும் திண்டுக்கல் ரஸிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய இயலாமைக்கு வருத்தப்படுவதாகவும் பதில் தந்தார். நாகர்கோயிலில் தமிழரசு மகாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு திரும்புவதாக நாகராஜன் தெரிவித்தார். சாந்தமான குணமும், சகஜமாகப் பழகும் தன்மையும், ஆடம்பரமில்லாத வாழ்க்கையும், ரஸிகர்களிடம் அபிமானம் நிறைந்தவருமான நாகராஜனைக் கண்டோம்; கலந்து பேசினோம்,

பி. சுப்பராயலு,
திண்டுக்கல்.

நடிகரின் உபதேசம்!

ஒரு சமயம் நான் ஜெமினி ஸ்தாபனத்திற்கு ஒரு மனு போட்டிருந்தேன். அதில் எனக்கு நடிக்க சந்தர்ப்பமளிக்குமாறு கேட்டிருந்தேன். எனக்கு உடனே பதிலும் வந்தது. என்னை 'நடிகர் தேர்தல் இலாக்கா'வுக்கு அழைத்துச் சென்று உட்காரச் சொன்னார்கள். நான் அவ்விடத்திற்குப் போகும்போது காலை 11 மணி இருக்கும். பிற்பகல் மூன்று மணி இருக்கும். கணேசன் அவர்கள் ஒரு சைக்கிளில் வந்து இறங்கினார். அவர் அப்போது அணிந்திருந்தது ஒரு ஷர்ட்டும் பேண்டும்தான். அவர் வந்தவுடன் அறிமுகம் செய்து கொண்டேன். அவர் எனக்கு நிதானமாக அறிவுரைகள் கூற ஆரம்பித்து விட்டார். சினிமாவில் சேருவதற்கான தகுதிகளையும், நடிப்பைத் தொழிலாகக் கொண்டால் உள்ள அவஸ்தைகளையும் கூறினார். அவர் கூறியதெல்லாம் சரி என எனக்குத் தோன்றியதால் நான் வீடு திரும்பினேன். அவர் எனக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் கூறத் தவறவில்லை.

ஜி. ராமரத்னம்,
சென்னை-4.

அவர்தான் இவர்!

சுமார் மூன்று வருடங்களுக்கு முன் வியாபார நிமித்தமாக தேனீ சென்ற நானும் என் சிறிய தகப்பனாரும் பஸ் கிடைக்காததால் பெரிய குளத்தில் தங்க நேரிட்டது. பொழுதுபோக்குக்காக அப்போது ரஹீம் டாக்கீஸில் சக்தி நாடக சபையார் நடத்தி வந்த 'என் தங்கை' நாடகத்தைக் காணச் சென்றிருந்தோம். அங்கு என் சிறிய தகப்பனாரின் மைத்துனர் பழனியப்பன் அவர்களைச் சந்தித்தோம். அவருக்கும் சிவாஜி கணேசன், மற்றுமுள்ள சக்தி நாடக சபா நடிகர்களுக்கும் நல்ல பழக்கமுண்டு. சக்தி நாடக சபா பெரிய குளத்தில் முகாமிடும் போதெல்லாம் பகலில் எனது மாமா ஊரான பெரியாதானம்பட்டிக்கு வந்து விடுவார்களாம் சிவாஜி கணேசனும், சக நடிகர்களும். எல்லோருமாக கோம்பைக் காட்டுக்கு வேட்டையாடச் செல்வார்களாம். அன்று நாடகம் முடிந்தவுடன் நாங்கள் மூவரும் கொட்டகையின் வாயிலைக் கூட தாண்டியிருக்க மாட்டோம். அதற்குள் சிவாஜி கணேசன் 'மேக்-அப்'பைக்

தினசரி பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்து
மகிழ்ந்து வரும் நாடகம்

நவாப் T. S. ராஜமாணிக்கத்தின்

மதுரை தேவி பால விநோத சங்கீத சபையாரால்

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

ஸ்ரீ முருகன் திரு அவதாரம்

என்னும்

குமார விஜயம்

தினசரி மாலை 6-30 மணிக்கும் பிரதி சனிக்கிழமை
இரவு 9-30 மணிக்கும் நாடகம் நடைபெறும்

நீங்களும் காணத் தவறாதீர்கள்

சினிமா வர்த்தக விளம்பரங்கள்

பேனர்கள், கட் அவுட், போஸ்டர், தியேட்டர்
& வான் டெகரேஷன் முதலிய சகல வகை
விளம்பர சாதனங்களையும் அற்புதமாகச் செய்து
தருகிறோம்.

ஆர். மாதவன்

ARTCENTRE

CINE & COMMERCIAL DESIGNERS

6, பெல்ஸ் ரோடு, சென்னை - 5.

கலைத்துவிட்டு எங்களுடன் வந்து கலந்து கொண்டார். நாங்கள் நால் வருமாக நடிகர்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீட்டிற்குச் சென்ருேம். சிறிது நேரத்தில் கே. எம். நம்பிராஜன் மற்றும் சில நடிகர்களும் வந்தனர். சிறிது நேரம் நாடகங்களைப் பற்றிப்பேசிக்கொண்டிருந்தனர். பின்னர் சீட்டாட உட்கார்ந்தனர். என்னையும் விளையாட அழைத்தார்கள். எனக்கு விளையாடத் தெரியாததால் மறுத்து விட்டேன். மணியும் நான்கு அடித்தது. எங்களுக்கு 4-30 மணிக்கு பஸ் உண்டு. ; ஆகவே விடைபெற்றுக் கொண்டு எழுந்தோம். சிவாஜி கணேசன், நம்பிராஜன் மற்றும் இரு நடிகர்களும் எங்களுடன் பஸ் நிலையம்வரை வந்து வழியனுப்பினர். அன்று சாதாரண நடிகராக இருந்த கணேசன் தான் இன்று புகழ் வாய்ந்த சினிமா நக்ஷத்திரமாக மின்னுகிருர் என எண்ணும் போது, சிவாஜி கணேசனிடம் அன்று ஒரு நாள் பேசியிருக்கிருேம் என்று நான் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு!

ஒ. ச. மு. ச. நடராசன்,
நிலக்கோட்டை.

சுகுமார மகாலிங்கம் !

சித்திரைப் பொருட்காட்சியில் 'ஸ்ரீ வள்ளி' நாடகத்தை நடித்துக் காட்டுவதற்காக மகாலிங்கம் மதுரை ஷெனய் நகரில் உள்ள அவர் பங்களாவில் முகாமிட்டிருந்தார். அவரைப் பார்க்கும் ஆவலில் உந்தப்பட்டு அவர் பங்களாவை நோக்கி நடந்தேன். வழியெல்லாம் அவரைப்பற்றி பலவித எண்ணங்கள்! 'லக்ஷருபாய் நக்ஷத்திரமாகிய மகாலிங்கத்தைச் சந்திக்க முடியுமா சாதாரணமாக? அப்படியே சந்தித்தாலும் அவருடன் சகஜமாகப் பேச முடியுமா?' என்றெல்லாம் எண்ணியவாறே அவர் பங்களாவை அடைந்தேன். என் கையில் 'ஸ்ரீ வள்ளி' நாடக புத்தகம் இருந்தது. பங்களாவின் உள்ளே, மகாலிங்கம் ஒரு முண்டா பனியனும், வேஷ்டியும் அணிந்து காக்ஷிதந்தார். அவரைச் சுற்றிலும் பலர் சூழ்ந்திருந்தார்கள். அவருக்கு நான் வணக்கம் செலுத்தினேன். பதிலுக்கு அவர் "நமஸ்காரம்' என்ருர். பின்னர் அவரது ஆட்டோகிராப்பை வாங்கிக்கொண்ட பிறகு, "உங்கள் சின்னதுரை ஏன் தோல்வியடைந்தது?" என்று கேட்டேன். அதற்கு அவர் "ஜனங்களின் மனப்பான்மை எனக்குப் புரியவில்லை..." என்ருர். அடுத்தபடியாக என்கூட வந்த பையனைச் சுட்டிக்காட்டி "இவனை உங்கள் கம்பெனியில் சேர்த்துக் கொள்ளுங்களேன்!" என்றேன். அதற்கு அவர். "என் கம்பெனி சாதாரணமான கம்பெனி. ஏவி. எம். போன்ற கம்பெனிகளில் முயற்சித்துப் பாருங்கள்" என்ருர். இன்னும் பல விஷயங்கள் நாங்கள் பேசினேம். மகாலிங்கம் ஒரு நல்ல நடிகர்-பாடகர்-முதலாளி !

சம்பத்குமார்,
மதுரை.

வில்லனு இவர் ?

தூத்துக்குடி போவதற்காக மணியாச்சி ஜங்ஷனில் அன்று நான் நின்று கொண்டிருந்தேன். அப்போது திருநெல்வேலியிலிருந்து வண்டி வந்து நின்றது. எனக்குத் தெரிந்தவர்கள் யாரேனும் அதில் இருக்கிருர்களா என்று பார்த்துக்கொண்டே போனேன். இரண்டாவது வகுப்பு பெட்டியிலிருந்து ஒருவர் இறங்கி சாப்பாட்டிற்காக ஹோட்டல் சிப்பந்தியைக் கூப்பிட்டார். அவர் கைக் குட்டையால் தலையைக் கட்டிக் கொண்டிருந்தார். அவரை எங்கோ பார்த்த நினைவு வந்தது. ஆனல், எங்கே எனத் தெரியவில்லை. அவரை அணுகி "தங்களை எங்கோ பார்த்த ஞாபகம் வருகிறதே!" என்றேன். அவர் சிரித்துக் கொண்டே, "நான் சினிமா ஆக்டர் டி. கே. ராமச் "சந்திரன்" என்ருர் எனக்கு உடனே அளவிலா ஆனந்தம் உண்டாயிற்று. 'படங்களில் வில்லாதிவில்லனுக வந்து கதற அடிக்கிருர் இவர். எவ்வளவு சுபாவியாக இருக்கிருர்' என்று வியந்தேன். அவருடன் பேசியதில் ஆனந்தம் கொண்டேன்.

—வி. பாண்டியராஜு,
இளையரசனேந்தல்.

ஔவையார் தரிசனம்

சென்ற ஆண்டு ஜெமினியின் 'ஔவையார்' படத்தைப் பார்த்தவுடன் கே. பி. சுந்தராம்பாளை நேரில் காணவேண்டும் என்ற ஆவல் என்

இதயத்தில் உதித்து மிகத் தீவிரம் அடைந்தது. நான் போன வருடம் செப்டம்பர் மாதத்தில் என் ஆவலைத் தெரிவித்து அவருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். சில நாட்களுக்கெல்லாம் கொடுமுடியிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் தமிழக இளைஞர்கள் அனைவருக்கும் 'இசைத் தென்றல்' வாழ்த்துக் கூறியிருந்தார். பின்னர் சில தினங்கள் கழித்து, தன் இல்லத்துக்கே வரும்படி என்னை அன்புடன் அழைத்து திரு. மலைக் கொழுந்து (கே. பி. எஸ். அவர்களின் தாய் மாமன்) எனக்கு எழுதினர். 1953-அக்டோபர் மாதம் நான் கொடுமுடிக்குப் போனேன். அங்கே கே. பி. எஸ். அவர்களும், ஏனையோரும் என்னை மிக்க அன்புடன் வரவேற்றனர். அமைதியும் தெய்வீகமும் சூழ்ந்த கொடுமுடி கிராமத்தில் கே. பி. எஸ். அவர்கள் 'ஸ்ரீ முருகன் நிலயம்' என்ற தனது இல்லத்தில் இருக்கிருர். அவர் என்னுடன் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார். அடிக்கொரு முறை 'முருகா, ஸத்குருநாதா' என்று அவர் வாய் சொல்லிக்கொண்டே இருந்தது. தூய வெண் ஆடை உடுத்து, திருநீறு பூசி, முகத்தில் புன்னகை தவழ, ஒரு முனிவராகவே அவர் எனக்குத் தோன்றினர். அப்போது என் இல்லத்திற்கு வரும்படியும் அவரை அழைத்தேன். அதற்கு அவர் சிரித்தபடி "அவசியம் வருகிறேன்" என்று பதிலளித்தார். திருச்சிக்கு வந்தபோது என் இல்லத்திற்கு வருகை தந்தார். அப்பப்பா! அப்போது என் வீட்டை முற்றுகையிட்ட ரசிகர்கள் கூட்டம் ரஸ்தாவில் போக்குவரத்தையே நிற்கச் செய்து விட்டது. அங்கு கூடியிருந்த குழந்தைகளுடன் "ஔவையார் சொன்னபடி நீங்கள் நடக்கணும் தெரிந்ததா?" என்று கேட்டதும் "ஆகா, அப்படியே பாட்டி" என்று அக்குழந்தைகள் கோஷம் போட்டன. இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இன்றும் கே. பி. எஸ். அவர்கள் அடிக்கடி என்னை விசாரித்து கடிதங்கள் எழுதுகிருர்.

வே. ரங்கராஜன்,
தென்னூர்.

நடிகருக்காகப் பாடினேன்!

மாலை மணி ஐந்து இருக்கும், அப்போது ஜுபிடரின் கைதி தயாராகிக் கொண்டிருந்த சமயம். கோவை உட்

இலவசம் !

ஹேர் ஆயில் நெ. 501 நரை மயிர் கறுக்கவும், ரோமம் உதிர்வதைத் தடுக்கவும் உதவுகிறது.

ஒரு புட்டி விலை ரூ. 1-15-0
3 புட்டிகள் விலை ரூ. 5-0-0

எங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் எங்கள் கம்பெனி ஹேர் ஆயிலை உபயோகிப்பவர்களுக்கு அழகான கைக்கெடிகாரம் ஒன்றும் தங்க மோதிரம் ஒன்றும் இனமாகத் தருகிறோம். ஒரே சமயத்தில் மூன்று புட்டிகள் வாங்குபவர்களுக்கு 6 கைக்கடிகாரங்களும் 6 மோதிரங்களும் இலவசமாகத் தருகிறோம். திருப்திகரமாயிராவிடில் பணம் திரும்பப் பெறலாம்.

AMRIT PHARMACY
(P. P. M.) NAKODAR

லண்ட்ஸில்தான் நடிக, நடிகையர் தங்குவர் என்று கேள்விப்பட்டு அங்கு சென்றேன். ஒய்யாரமாக சிகரெட் புகை மண்டலத்திடையே பாலசந்தர் அமர்ந்திருந்தார். நான் அவரது அறைக்கு முன்பாக நின்று தயங்கினேன். அதிருஷ்டவசமாக அவரே என்னைப் பார்த்து அழைத்தார். உள்ளே போனேன். என்னை ஒரு மாணவன் என்று அறிந்து கொணடு உள்ளம் நிறைந்த உவகையோடு என்னிடம் பேசினார். அப்போது 'கைதி' படம் ரத்தம் என்ற பெயரில் தயாராகி வந்தது. "கூடிய விரைவில் அது திரையிடப்படும்" என்றார். இருவரும் காபி அருந்தினோம். "எனக்கு ஸ்டுடியோவுக்கு நேரமாகிவிட்டது"என்றார். பின்பு என்னையும் அழைத்துக் கொண்டு ஸ்டுடியோவுக்குச் சென்றார். மற்றவர்களுக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தார். இரவு எட்டு மணியாகி விட்டதால் நான் அவரிடம் விடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அங்கிருந்த எனது நண்பர் "இவர் நன்றாகப் பாடுவார்" என்றார். பாலசந்தரும் என்னை விடாப்பிடியாகப் பாடச் சொன்னார் ! நானும் பாடினேன் !

என்னேயீஸ்வா,
திருச்சி.

ஆடும் அழகி !

எங்கள் ஊர் வி. கே. டவுன் ஹாலில் குமாரி கமலாவின் நடனம் நடைபெற்றது நான் கமலாவை நேரில் பார்க்க வேண்டும் என்று ஆவல் கொண்டேன். ஆகவே அவரது நடன நிகழ்ச்சிக்குச் சென்றேன். நடனம் முடிந்ததும் 'மேக்-அப்' அறைக்கு சென்றேன். ஜரிகை போட்ட பட்டுப் பாவாடை ஆரஞ்சு வர்ண வாயில் தாவணி, கால்களில் அழகிய செருப்புகள், கையில் ஒரு 'லேடீஸ் வாட்ச்' ஆகிய அலங்காரங்களுடன் கமலா ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவரது தாயார் ஒரு பெட்டியைப் பூட்டிக் கொண்டிருந்தார். கமலா எங்களைப் பார்த்ததுமே புன்னகை புரிந்தார். சந்தோஷத்தால் திகைத்து நின்ற நான் கமலாவிடம் என்ன பேசுவது? 'உங்களுடைய நடனம் நன்றாக இருந்தது' என்றாள் என் சகோதரி கஸ்தூரி. 'தாங்ஸ்' என கமலா பதில் தெரிவித்தார். 'கமலா, இங்கே எந்த ஹோட்டலில் இருக்கிறீர்கள்? என நான் வினவினேன். "என்னவோ பெயர் தெரியவில்லை. மாமா...மா... அந்த ஹோட்டல் பெயர் என்ன? என்று மாமாவை அழைத்தார். கமலாவின் தாயாரிடம் பேசிக் கொண்டிருந்த அவர் இதைக் கவனிக்காததால், பதிலும் கூறவில்லை. அடுத்தபடி "சென்னைக்கு எப்போது புறபடுகிறீர்கள்?" என்றேன். நாளை முதல் வண்டியில்" என்றார் கமலா வேறு ஒன்றும் எனக்கு அப்போது கேட்கத் தோன்றவில்லை. 'உங்களிடம் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி சந்தோஷம்' என்று கமலாவிடமும், அவரது தாயருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு, விடைபெற்றுக் கொண்டேன். வீட்டுக்கு திரும்புகையில் 'ஆட்டோகிராப்' புத்தகம் கொண்டு வரவில்லையே என்று வருந்தினாள் என் தங்கை.

குமாரி ஆர். தாரா,
திருவனந்தபுரம்.

வைரத்தைக்கொண்டு வைரம்!

நடிக ரத்னம் தங்கவேலு புதுவையில் நடந்த நாடக மொன்றினால் எங்கள் வீட்டாருக்கு அறிமுகமானவர். என் தங்கையின் நாட்டிய மொன்றுக்கு புகழ்பெற்ற சினிமா நடிகை தலைமை வகிக்க வேண்டும் என்ற ஆவலின் தூண்டுதலால் புதுவையிலிருந்து மதராஸிற்குச் சென்றோம். நடிகர் என்ற கர்வமில்லாமல் சகஜமான முறையில் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார். எவ்வாறு படத்தில் நடித்து மக்களை தங்கள் கவலையை மறந்து சிரிக்க வைக்கிறாரோ, அவ்வாறே நேரிலும் விகடமாகப் பேசி எங்களை ஆனந்த சாகரத்தில் மூழ்க வைத்தார். நாங்கள் வந்த விஷயத்தை அவரிடம் கூறினோம். அதற்கு யாதொரு தடையும் கூறாமல் அன்றுமாலை எங்களை ஸ்ரீமதி பண்டரிபாய் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். நாங்கள் சென்றதுமே அவரைச் சந்தித்தோம். வீட்டில் அவரைப் பார்க்கும்போது சினிமா நடிகை என்ற எண்ணமே எழாது. நாங்கள் வந்த நோக்கத்தினை தங்கவேலு அவரிடம் அறிவித்தார். உடனே எங்களுக்கு சாதகமான பதிலைக் கூறினார். சொல்வேறு செயல் வேறு என்றில்லாமல் கொடுத்த வாக்கையும் நிறைவேற்றி விட்டார் பண்டரிபாய்.

ஆர். மைனா,
புதுவை.

விருந்துடன்...

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற என் நாட்டியக் கச்சேரியின் மூலம் ஸ்ரீமான் கே. சாரங்கபாணியின் அறிமுகம் கிடைத்தது. என் நடன ஆசிரியர் திருவாளப்புத்தூர் கே. சாமி நாதப்பிள்ளை கே. சாரங்கபாணி அவர்கள்வீட்டிற்குஎன்னைஅழைத்துப் சென்றார். அவரும் அவர்கள் குடும்பத்தாரும் என்பால் அன்பு கொண்டார்கள். அவர் என்னை ஆசீர்வதித்து என் நாட்டியத்தை ரஸித்தார். அன்று அவர்கள் வீட்டில் எங்களுக்கு விருந்து நடந்தது.

ஆர். லக்ஷ்மி,
புதுச்சேரி.

நீபா ஹேர் ஆயில்

புத்தாண்டின் ஆரம்பத்தில் வெளிவரவிருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸ் 'கதாநாயகி' ஒரு ஹாஸ்யப்படமாக இருக்கும். டி.கே. கோவிந்தனின் வசனங்கள் இதில் அதி அற்புதமாக அமைந்திருக்கின்றன. கே. ராமுநத் டைரக்‌ஷனில் தயாராகும் 'கதாநாயகி'யில் கதாநாயகியாக 'அழகி' பத்மினி

நடிக்கிறார். டி.ஆர். ராமச்சந்திரன், தங்கவேலு, ஏ. கருணாநிதி, டி.கே. ராமச்சந்திரன், எம். என் ராஜம் மற்றும் பலர் இதில் நடித்துள்ளார்கள். ஒரு பத்திரிகை காரியாலயத்தையும் நாடக மன்றத்தையும் பின்னணியில் கொண்டு சுழல்கிறது படக்கதை.

என் முதல் அனுபவம்

சிவாஜி கணேசன்

என் முதல் அனுபவத்தைப் பற்றி நினைக்கும்போது எனக்குச் சிரிப்புத் தான் வருகிறது. அப்போது நான் 'ஒடிந்து விழுவது' போல்— ஒத்தை நாடி ஆசாமியாக இருந்தேன்! அதை நினைத்து நான் சிரிக்கவில்லை!

சக்தி நாடக சபையில் அப்போது நான் ஒரு நடிகன். எனது நடிப்பில் ஏதோ உயர்வு இருந்திருக்க வேண்டும். நாடகக் கம்பெனி திருச்சியில் நடந்து வந்தபோது எனக்கு நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் அவர்களிடமிருந்து அழைப்பு வந்தது. ஏவி. எம். ஸ்டுடியோவில் முதன் முதலாக 1951-ல் நுழைந்தேன்.

சபையில் கூட்டமில்லாவிடில் எனக்குத் திருப்தியுடன் நடிக்க வராது. அப்போது ஏவி.; எம். ஸ்டுடியோவில் பெருமாள், காமிராமேன் மாருதிராவ், சௌண்டு ஜீவா, டைரக்டர்கள் கிருஷ்ணன்–பஞ்சு, ஸ்டில் நாகராஜராவ் போன்ற மிகச் சிலரே இருந்தனர். ஆகவே முதலில் எனக்கு ஒரே கூச்சமாக இருந்தது.

டெஸ்ட் மேக்-அப் போடப்பட்டது. மூவி காமிராவை நான் அதற்கு முன், பார்த்ததுகூடக் கிடையாது. பெருமாள் அவர்களும் டைரக்டர்களும் என்னிடம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார்கள். அது என் பாக்கியம்தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். 'என் தங்கை' நாடகத்தில் செல்வம் பாத்திரத்தில் நான் நடித்து வந்தேன். குடிகாரனாக நடிக்கும் கட்டங்களில் நிறைய 'அப்ளாஸ்' விழுவதுண்டு. அதனால் அந்த கட்டத்தையே முதலில் படமாக்கினார்கள். முதல் ஓரிரு நிமிஷங்கள் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. போகப்போக என்னையறியாமல் ஒரு அசாதாரண உணர்ச்சி ஏற்பட்டு என்பாட்டில் பொழிந்து தள்ளிக் கொண்டிருந்தேன்.

பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ஒருமுகமாகப் பாராட்டினார்கள். என் திறமையில் எல்லோருக்குமே நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் உடம்பில் சதை பிடிக்கவில்லையே என்று யோசித்தார்கள். நாகராஜராவ் வந்து 'ஸ்டில்' எடுத்தார். நடிப்பதுகூடசகஜமாக இருந்தது. ஆனால் ஸ்டில் காமிராவுக்குப் 'போஸ்' கொடுக்கும் போது 'அந்தக் காலத்து அடக்கமான மணப் பெண்ணை'ப் போல நடந்து கொண்டேன்!

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். எனது நாடக நடிப்பை கண்டு பெருமாள் அவர்கள் சென்னைக்கு வரவழைத்தார்கள். பலவித எதிர்ப்புக்குப் பிறகும் நிச்சயமாக என்னைக் கதாநாயகனாகக் கொண்டுதான் 'பராசக்தி'யைத் தயாரிப்பது என்ற உறுதியுடன் கடைசி வரை இருந்தார். அந்த உறுதி ஒன்றுதான் என்னை ஒரு நடிகனாக அறிமுகப் படுத்தி அவருக்கும் மகத்தான வெற்றியைக் கொடுத்தது என்றால் மிகையாகாது. ★

1954
வருஷத்திய வெளியீடுகள்

சந்திரஹாரம் (தமிழ், தெலுங்கு)

தயாரிப்பு : விஜயா புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : கே. காமேஸ்வரராவ்
நடிகர்கள் : ஸ்ரீரஞ்சனி, சாவித்திரி, என். டி. ராமராவ், ரங்காராவ், ரேலங்கி முதலியோர்

ராஜி என் கண்மணி (தமிழ்)
ராஜி நா ப்ராணு (தெலுங்கு)

தயாரிப்பு : ஜெமினி
ஸ்டுடியோ : ஜெமினி
டைரக்ஷன் : கே. ஜெ. மகாதேவன்
நடிகர்கள் : ஸ்ரீரஞ்சனி, வசுந்தரா, கே. ஆர். செல்லம், டி. ஆர். ராமச்சந்திரன், ஸ்ரீராம், ரங்கராவ், சந்திரபாபு முதலியோர்

பொன்வயல் (தமிழ்)
பங்காரு பூமி (தெலுங்கு)

தயாரிப்பு : ஜெயந்தி புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : ஏ. டி. கிருஷ்ணசாமி
நடிகர்கள் : அஞ்சலிதேவி, மைனவதி, முத்துலக்ஷ்மி, அங்கமுத்து டி. ஆர். ராமச்சந்திரன், கே. சாரங்கபாணி, மனோஹர், தங்கவேலு, வி. கே. ராமசாமி முதலியோர்

இல்லறஜோதி (தமிழ்)

தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
ஸ்டுடியோ : மாடர்ன் தியேட்டர்ஸ்
டைரக்ஷன் : ஜி. ஆர். ராவ்
நடிகர்கள் : பத்மினி, ஸ்ரீரஞ்சனி, சிவாஜி கணேசன், அசோகன், தங்கவேலு, கொட்டாப்புளி ஜெயராமன் முதலியோர்

விடுதலை (தமிழ்)

தயாரிப்பு : நியூ இரா புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : பிலிம் சென்டர்
டைரக்ஷன் : கே. ராம்னொத்
நடிகர்கள் : கிருஷ்ணகுமாரி, குமுதினி, விமலா, நாகய்யா, மனோஹர், மோகன், பீர் முகமது முதலியோர்

கூண்டுக்கிளி (தமிழ்)

தயாரிப்பு : ஆர். ஆர். பிச்சர்ஸ்
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : ராமண்ணா
நடிகர்கள் : பி. எஸ். சரோஜா, குசலகுமாரி, சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்திரன், சாரங்கபாணி முதலியோர்

கற்கோட்டை (தமிழ்)
ஜலதுர்க்கா (கன்னடம்)

தயாரிப்பு : கெம்பராஜ் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : கெம்பராஜ்
நடிகர்கள் : கிருஷ்ணகுமாரி, சந்தியா கெம்பராஜ், சாரங்கபாணி, பி. ஆர். பந்துலு முதலியோர்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

தயாரிப்பு : பத்மினி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : ப. நீலகண்டன்
நடிகர்கள் : பத்மினி, ராகினி, சிவாஜி கணேசன், டி. ஆர். ராமச்சந்திரன், பி. ஆர். பந்துலு முதலியோர்

மனோகரா (த, தெ) மனோஹர் (ஹிந்தி)

தயாரிப்பு : மனோகர் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : நெப்ட்யூன்
டைரக்ஷன் : பிரஸாத்
நடிகர்கள் : ராஜகுமாரி, கண்ணாம்பா, கிரிஜா, சிவாஜி கணேசன், எஸ். ஏ. நடராஜன், ஜாவர் சீதாராமன் முதலியோர்

பணம் படுத்தும் பாடு (தமிழ்) ஒத்தண்டே டப்பு (தெலுங்கு)

தயாரிப்பு : ரோஹிணி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : ரோஹிணி
டைரக்ஷன் : ஒய். ஆர். ஸ்வாமி
நடிகர்கள் : சௌகார் ஜானகி, ஜமுனா, என். டி. ராமராவ் முதலியோர்

பெண் (தமிழ்)

தயாரிப்பு : ஏவி. எம்.
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : எம். வி. ராமன்
நடிகர்கள் : வைஜயந்திமாலா, அஞ்சலி தேவி, நாகய்யா, ஜெமினி கணேசன், எஸ். பாலசந்தர், சஹஸ்ரநாமம் முதலியோர்

அந்தநாள் (தமிழ்)

தயாரிப்பு : ஏவி. எம்.
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : எஸ். பாலசந்தர்
நடிகர்கள் : பண்டரிபாய், மேனகா, சூர்யகலா, சிவாஜி கணேசன், ஜாவர் சீதாராமன், பி. டி. சம்பந்தம் முதலியோர்

சொர்க்கவாசல் (தமிழ்) பிரஜா ராஜ்யம் (தெலுங்கு)

தயாரிப்பு : பரிமளம் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : நெப்ட்யூன்
டைரக்ஷன் : ஏ. காசிலிங்கம்
நடிகர்கள் : அஞ்சலிதேவி, பத்மினி, கே. ஆர். ராமசாமி முதலியோர்

விளையாட்டு பொம்மை (தமிழ்)

தயாரிப்பு : ஸ்ரீ சுகுமார் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : ரோஹிணி
டைரக்ஷன் : டி. ஆர். ரகுநாத்
நடிகர்கள் : குமாரி கமலா, இ. வி. சரோஜா, மகாலிங்கம், வி. கே. ராமசாமி, பி. ஆர். பந்துலு, சாரங்கபாணி, தங்கவேலு முதலியோர்

கனவு (தமிழ்)

தயாரிப்பு : கே. ஆர். கே.–ரேவதி
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : பி. வி. கிருஷ்ணன்
நடிகர்கள் : லலிதா, வி. கே. ராமசாமி முதலியோர்

மாங்கல்யம் (தமிழ்)

தயாரிப்பு : எம். ஏ. வி. பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : சென்டிரல்
டைரக்ஷன் : கே. சோமு
நடிகர்கள் : பி. எஸ். சரோஜா, ராஜசுலோசனா, ஏ. பி. நாகராஜன், நம்பியார், ஏ. கருணாநிதி, ஏழுமலை முதலியோர்

புதுயுகம் (தமிழ்)

தயாரிப்பு : ஸ்ரீ சாயி கானம்ருதா
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : கோபு-ஜி. எஸ். பாகவதர்
நடிகர்கள் : கிருஷ்ணகுமாரி, விமலா, திரௌபதி, எஸ். ஏ. நடராஜன், நரசிம்ம பாரதி, முத்துகிருஷ்ணன் முதலியோர்

ரத்தபாசம் (தமிழ்)

தயாரிப்பு : ஔவை புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : நெப்ட்யூன்
டைரக்ஷன் : ஆர். எஸ். மணி
நடிகர்கள் : அஞ்சலிதேவி, வித்யாவதி, திரௌபதி, டி. கே. ஷண்முகம் டி. கே. பகவதி. பாலய்யா முதலியோர்

நல்லகாலம் (தமிழ்)

தயாரிப்பு : ஜெய்சக்தி பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : சிட்டடெல்
டைரக்ஷன் : கே. வேம்பு
நடிகர்கள் : பண்டரிபாய், எம். கே. ராதா, கிருஷ்ணன், மதுரம் முதலியோர்

தூக்கு தூக்கி

தயாரிப்பு : அருண பிலிம்ஸ்
ஸ்டூடியோ : பிலிம் செண்டர்
டைரக்ஷன் : ஆர். எம். கிருஷ்ண சாமி
நடிகர்கள் : லலிதா, பத்மினி, ராகினி, சிவாஜி கணேசன், பாலய்யா முதலியோர்.

இருளுக்குப்பின் (தமிழ்)

தயாரிப்பு : நீலா புரொடக்ஷன்ஸ்
ஸ்டூடியோ : மெர்ரிலாண்ட்
டைரக்ஷன் : ?
நடிகர்கள் : லலிதா, திக்குரிசி, பிரேம் நஸீர் முதலியோர்

துளிவிஷம் (தமிழ்)
ராஜகுரு (தெலுங்கு)

தயாரிப்பு : நரசு ஸ்டூடியோஸ்
ஸ்டூடியோ : நரசு
டைரக்ஷன் : ஏ. எஸ். ஏ. சாமி
நடிகர்கள் : கிருஷ்ணகுமாரி, பி. கே. சரஸ்வதி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி கே. ஆர். ராமசாமி, சிவாஜி கணேசன், ரங்கராவ் முதலியோர்

மலைக்கள்ளன் (தமிழ்)

தயாரிப்பு : பக்ஷிராஜா
ஸ்டூடியோ : பக்ஷிராஜா
டைரக்ஷன் : எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு
நடிகர்கள் : பானுமதி, எம். ஜி. ராமச்சந்திரன், டி.எஸ். துரைராஜ், எம். ஜி. சக்ரபாணி முதலியோர்.

சுகம் எங்கே? (தமிழ்)

தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
ஸ்டூடியோ : மாடர்ன் தியேட்டர்ஸ்
டைரக்ஷன் : கே. ராம்னாத்
நடிகர்கள் : சாவித்திரி, கே. ஆர். ராமசாமி, தங்கவேலு, டி.கே. ராமச்சந்திரன் முதலியோர்

அம்மையப்பன் (தமிழ்)

தயாரிப்பு : நேஷனல் புரொடக்ஷன்ஸ்
ஸ்டூடியோ : நியூடோன்
டைரக்ஷன் : பீம்சிங்
நடிகர்கள் : எஸ். வரலக்ஷ்மி, ஜி. சகுந்தலா, எஸ். எஸ். ராஜேந்திரன் முதலியோர்

வைரமாலை (தமிழ்)

தயாரிப்பு : வைத்யா பிலிம்ஸ்
ஸ்டூடியோ : வாஹினி
டைரக்ஷன் : என். ஜகந்நாத்
நடிகர்கள் : பத்மினி, ராகினி, மனோஹர், வாதிராஜ், தங்கவேலு, கே. ராமசாமி, மாலி முதலியோர்

குடும்பம் (தமிழ்)
மேனரீகம் (தெலுங்கு)

தயாரிப்பு : ஜம்பனு & நந்தி
ஸ்டூடியோ : வாஹினி
டைரக்ஷன் : ஜம்பனு
நடிகர்கள் : ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி, சந்தானலக்ஷ்மி, ஸ்ரீராம், தங்கவேலு, துரைராஜ், டி. கே. ராமச்சந்திரன் முதலியோர்

என் மகள் (தமிழ்)

தயாரிப்பு : அசோகா பிக்சர்ஸ்
ஸ்டூடியோ : ரேவதி
டைரக்ஷன் : கே. வி. ஆர். ஆசார்யா & எம். கே. ஆர். நம்பியார்
நடிகர்கள் : எஸ். வரலக்ஷ்மி, மைனுவதி, ரஞ்சன், எம். என். நம்பியார் டி. பாலசுப்ரமணியம் முதலியோர்

ரத்தக்கண்ணீர் (தமிழ்)

தயாரிப்பு : நேஷனல் பிக்சர்ஸ்
ஸ்டூடியோ : ரேவதி-நரசு
டைரக்ஷன் : கிருஷ்ணன்-பஞ்சு
நடிகர்கள் : ஸ்ரீரஞ்சனி, எம். என். ராஜம், குசலகுமாரி, எம்.ஆர். ராதா, எஸ். எஸ். ராஜேந்திரன் முதலியோர்

நண்பன் (தமிழ்)

தயாரிப்பு : எம். டி. வி. புரொடக்ஷன்ஸ்
ஸ்டூடியோ : ஸ்டார் கம்பைன்ஸ், சியாமளா, ரோஹிணி
டைரக்ஷன் : பி. எஸ். ஸ்ரீநிவாஸ ராவ்
நடிகர்கள் : பி. கே. சரஸ்வதி, வித்யாவதி, மனோஹர், நாகய்யா, பாலய்யா, தங்கவேலு, டி. கே. ராமச்சந்திரன் முதலியோர்

அவன் யார்? (தமிழ்)

தயாரிப்பு : நீலா புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : மெர்ரிலாண்ட்
டைரக்ஷன் : ?
நடிகர்கள் : பிரேம் நஸீர், குமாரி முதலியோர்

போன மச்சான் திரும்பி வந்தான் (தமிழ்)

தயாரிப்பு : மெர்குரி பிலிம்ஸ்
ஸ்டுடியோ : நியூடோன்
டைரக்ஷன் : ஸி. ஸ்ரீநிவாஸராவ்
நடிகர்கள் : குசலகுமாரி, லக்ஷ்மி காந்தம், ரத்னம், ஸ்ரீராம், தங்கவேலு, டி. கே. ராமச்சந்திரன் முதலியோர்

மதியும் மமதையும் (தமிழ்)

தயாரிப்பு : சந்திரமோகன் சலீம் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : சென்டிரல்
டைரக்ஷன் : ஜி. எம். பஷீர்
நடிகர்கள் : ராஜேஸ்வரி, விஜயகுமாரி, ஜி. எம். பஷீர் முதலியோர்

எதிர்பாராதது (தமிழ்)

தயாரிப்பு : சரவணபவா, யூனிட்டி
ஸ்டுடியோ : நெப்டியூன்
டைரக்ஷன் : ஸி. எச். நாராயண மூர்த்தி
நடிகர்கள் : பத்மினி. எஸ். வரலக்ஷ்மி, சிவாஜி கணேசன், நாகய்யா, சஹஸ்ரநாமம் முதலியோர்

சங்கம் (தெலுங்கு)

தயாரிப்பு : ஏவி. எம்.
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : எம். வி. ராமன்
நடிகர்கள் : அஞ்சலிதேவி, வைஜயந்திமாலா, நாகய்யா, என். டி. ராமராவ் முதலியோர்

ஜாதக பலம் (தெலுங்கு)

தயாரிப்பு : ஆர். என். ஆர். பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : ஆர். நாகேந்திரராவ்
நடிகர்கள் : சூர்யகலா, நாகேந்திரராவ், எஸ். வி. ரங்கராவ் முதலியோர்

அக்கி ராமுடு (தெலுங்கு)

தயாரிப்பு : பக்ஷிராஜா
ஸ்டுடியோ : பக்ஷிராஜா
டைரக்ஷன் : எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு
நடிகர்கள் : பானுமதி, என். டி. ராமராவ் முதலியோர்

அமரசந்தேசம் (தெலுங்கு)

தயாரிப்பு : ஸாஹினி புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : ஆதுர்த்தி
நடிகர்கள் : பத்மினி, ஸ்ரீரஞ்சனி, ஸி. எஸ். ஆர்., அமர்நாத், ரேலங்கி முதலியோர்

காளஹஸ்தி மகாத்யம் (தெலுங்கு)

தயாரிப்பு : குப்பி கர்நாடகா புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : எச். எல். என். சிம்ஹா
நடிகர்கள் : கே. மாலதி, ராஜசுலோசனா, ராஜ்குமார், லிங்கமூர்த்தி முதலியோர்

ராஜு பேதா (தெலுங்கு)

தயாரிப்பு : பி. ஏ. எஸ். புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : பி. ஏ. சுப்பாராவ்
நடிகர்கள் : லக்ஷ்மிராஜ்யம், எஸ். வி. ரங்கராவ், என். டி. ராமராவ், சுதாகர் முதலியோர்

இத்தருபெண்டாலு (தெ)

தயாரிப்பு : நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : நியூடோன்
டைரக்ஷன் : எப். நாகூர்
நடிகர்கள் : எம். வி. ராஜம்மா, ஜமுனா, என். டி. ராமராவ் முதலியோர்

அன்னதாதா (தெலுங்கு)

தயாரிப்பு : அஸ்வராஜ் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : வேதாந்தம் ராகவய்யா
நடிகர்கள் : அஞ்சலிதேவி, நாகேஸ்வரராவ், ரங்கராவ் முதலியோர்

தோடு தொங்கலு
(தெலுங்கு)

தயாரிப்பு : நேஷனல் ஆர்ட்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : யோகானந்த்
நடிகர்கள் : என். டி. ராமராவ் முதலியோர்

பெத்த மனுஷ்யுலு (தெலுங்கு)

தயாரிப்பு : வாஹினி
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : கே. வி. ரெட்டி
நடிகர்கள் : ஸ்ரீரஞ்சனி, ரங்கராவ் முதலியோர்

நிருபேதலு (தெலுங்கு)

தயாரிப்பு : கோகுல் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : பிரகாஷ்ராவ்
நடிகர்கள் : சுரபி பாலசரஸ்வதி, நாகேஸ்வரராவ் முதலியோர்

சக்ரபாணி (தெலுங்கு)

தயாரிப்பு : பரணி
ஸ்டுடியோ : பரணி
டைரக்ஷன் : ராமகிருஷ்ண
நடிகர்கள் : பானுமதி, நாகேஸ்வரராவ், ரேலங்கி முதலியோர்

விப்ரநாராயண (தெலுங்கு)

தயாரிப்பு : பரணி
ஸ்டுடியோ : பரணி
டைரக்ஷன் : ராமகிருஷ்ண
நடிகர்கள் : பானுமதி, நாகேஸ்வரராவ், ரேலங்கி முதலியோர்

பாலாநந்தம் (தெலுங்கு)

தயாரிப்பு : பிரகாஷ் பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : பிரகாஷ்
டைரக்ஷன் : ஏ. வி. சுப்பாராவ்
நடிகர்கள் : சுதாகர் முதலியோர்

அந்தா மனவாள்ளே
(தெலுங்கு)

தயாரிப்பு : ஸாரதி பில்ம்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : தாபி சாணக்யா
நடிகர்கள் : கிருஷ்ணகுமாரி, ஹேமலதா, ஸி. எஸ். ஆர்., ரங்கராவ், நரசிம்மராவ் முதலியோர்.

பக்க இண்டி அம்மாயி
(தெலுங்கு)

தயாரிப்பு : ஈஸ்ட் இந்தியா பில்ம்ஸ்
ஸ்டுடியோ : ஈஸ்ட் இந்தியா (கல்கத்தா)
டைரக்ஷன் : ஸி. புல்லய்யா
நடிகர்கள் : அஞ்சலிதேவி, ரேலங்கி முதலியோர்

ஜோதி (தெலுங்கு)

தயாரிப்பு : நவயுகா பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : ஸ்ரீதர்
நடிகர்கள் : ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி, காஷ்யப் முதலியோர்

பரிவர்த்தன (தெலுங்கு)

தயாரிப்பு : ஜனதா பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : டி. பிரகாஷ் ராவ்
நடிகர்கள் : சாவித்திரி, நாகேஸ்வரராவ், ராமராவ், துரைபாபு முதலியோர்

மாகோபி (தெலுங்கு)

தயாரிப்பு : விக்ரம் ஆர்ட் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : ரேவதி
டைரக்ஷன் : பி. எஸ். ரங்கா
நடிகர்கள் : வரலக்ஷ்மி, ஜமுனா, நாகய்யா, நரசிம்மராவ், ரேலங்கி, மாஸ்டர் மோகன் முதலியோர்

பல்லே படுசு (தெலுங்கு)

தயாரிப்பு : சியாமளா, யுனைடெட் டெக்னீஷியன்ஸ் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : சியாமளா
டைரக்ஷன் : போலோ சுப்பாராவ்
நடிகர்கள் : கிருஷ்ணகுமாரி, ராமசர்மா, முக்காமல, அமர்நாத், ஸி. எஸ். ஆர். முதலியோர்

பிரேமலேகலு (தெலுங்கு)

தயாரிப்பு : ஆர். கே. பில்ம்ஸ்
ஸ்டுடியோ : ஆர். கே. (பம்பாய்)
டைரக்ஷன் : ராஜா நவாதே
நடிகர்கள் : நர்கீஸ், விஜயலக்ஷ்மி, ராஜ்கபூர் முதலியோர்

அவன் வருன்னு (மலையாளம்)

தயாரிப்பு : எக்ஸெல் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : உதயா (ஆலப்புழை)
டைரக்ஷன் : எம். ஆர். எஸ். மணி
நடிகர்கள் : பி. எஸ். சரோஜா, பிரேம் நஸீர், திக்குரிசி, எஸ். பி. பிள்ளை முதலியோர்

சிநேகசீமா (மலையாளம்)

தயாரிப்பு : அசோசியேடட் புரொட்யூஸர்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : எஸ். எஸ். ராஜன்
நடிகர்கள் : பத்மினி, சத்யநேசன் முதலியோர்

சந்தேஹி (மலையாளம்)

தயாரிப்பு : நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : நியூடோன்
டைரக்ஷன் : எப். நாகூர்
நடிகர்கள் : சாந்தா, ரகுவீர் முதலியோர்

மனச்சாட்சி (மலையாளம்)

தயாரிப்பு : ஈஸ்வர் புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : செண்டிரல்
டைரக்ஷன் : ஜி. விஸ்வநாத்
நடிகர்கள் : ஓமனா, சுலோசனா முதலியோர்

புத்ரதர்மம் (மலையாளம்)

தயாரிப்பு : கே. அண்டு கே. புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : உதயா
டைரக்ஷன் : ?
நடிகர்கள் : ?

நீலக்குயில் (மலையாளம்)

தயாரிப்பு : சந்திரதாரா புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : வாஹினி
டைரக்ஷன் : பி. பாஸ்கரன்
நடிகர்கள் : குமாரி, சத்யநேசன், பாஸ்கரன் நாயர் முதலியோர்

பேடரகண்ணப்பா (கன்னடம்)

தயாரிப்பு : குப்பி கர்நாடகா புரொடக்ஷன்ஸ்
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : எச். எல். என். சின்ஹா
நடிகர்கள் : பண்டரிபாய், சந்தியா, ஜி. வி. அய்யர் முதலியோர்

நடசேகரா (கன்னடம்)

தயாரிப்பு : ஜெயராஜ் பில்ம்ஸ்
ஸ்டுடியோ : ஸ்டார் கம்பைன்ஸ்
டைரக்ஷன் : ஸி. வி. ராஜு
நடிகர்கள் : வித்யாவதி, கல்யாண் குமார் முதலியோர்

தேவகன்னிகா (கன்னடம்)

தயாரிப்பு : மாடர்ன் தியேட்டர்ஸ்
ஸ்டுடியோ : மாடர்ன்
டைரக்ஷன் : ஜி. ஆர். ராவ்
நடிகர்கள் : சௌகார் ஜானகி, லக்ஷ்மிதேவி, ராமாதேவி, இந்து சேகர் முதலியோர்

மாடித்துண்ணு மஹாராய (கன்னடம்)

தயாரிப்பு : மஹாத்மா பிக்சர்ஸ்
ஸ்டுடியோ : பில்ம்செண்டர்
டைரக்ஷன் : டி. சங்கர்சிங்
நடிகர்கள் : ஹரிணி, பிரதிமாதேவி, ரேவதி, ஹூன்ஸூர், கிருஷ்ண மூர்த்தி முதலியோர்

லட்கி (ஹிந்தி)

தயாரிப்பு : ஏவி. எம்.
ஸ்டுடியோ : ஏவி. எம்.
டைரக்ஷன் : எம். வி. ராமன்
நடிகர்கள் : வைஜயந்திமாலா, அஞ்சலிதேவி, பாரத்பூஷண், கிஷோர் குமார் முதலியோர்

பஹூத் தின் ஹூவே (ஹிந்தி)

தயாரிப்பு : ஜெமினி
ஸ்டுடியோ : ஜெமினி
டைரக்ஷன் : எஸ். எஸ். வாஸன்
நடிகர்கள் : மதுபாலா, லலிதாபவர், புஷ்பவல்லி, சூர்யபிரபா, சுவராஜ், ரத்தன்குமார், கைலாஸ், ஆகா, எம். கே. ராதா முதலியோர்

பார்வர்டு
நல்லதங்கை
படக்காட்சிகள்
MAYA..

வில்லன் நடிகர் ஏஸ். ஏ.
நடராஜன் மற்ற சில நடிகர்
களைப் போலத் தயாரிப்பிலீடு
பட விரும்பியதன் பலனுகத்
தோன்றியதுதான் பார்வர்ட்
ஆர்ட் பிக்சர்ஸ் ஸ்தாபனம்.
எஸ். ஏ. நடராஜனின் முயற்
சியில் தோன்றிய இந்த ஸ்தா
பனம் முதன் முதலாக நல்ல
தங்கை' என்ற சமூகப் படத்
தைத் தயாரிக்கத் திட்டமிட்டு
பெரும் பகுதியைப் படமாக்கி
விட்டது.



ஏ. பி. நாகராஜன் கதை–வசனம் எழுதியுள்ள இப்படத்தில் மாதுரிதேவி, ராஜசுலோசனு, எஸ். ஏ. நடராஜன், நம்பியார், ஏ. கருணுநிதி, விஎம். ஏழுமலை முதலிய நடிகர்கள் நடித்து வருகிருர்கள். பல நாளைக்குப் பின் மாதுரிதேவி இப்படத்தில் தோன்றி சக்கைப் போடு போடுகிருராம்.

கோவை சென்டிரல் ஸ்டுடியோவில் தயாராகிவரும் 'நல்ல தங்கை'யை, தயாரிப்பில் சம்பந்தபட்டவரும் கதா நாயகருமான எஸ். ஏ. நடராஜன் டைரக்ட் செய்து வருகிருர். கலைஞர்களுடன் டெக்னீஷியன்களும் ஒற்றுமையாக இருந்து வருவதால் இப்படம் நல்ல முறையில் உருவாகுமென்று நம்பலாம். ஜனவரி மாதத்திற்குள்ளேயே இப்படத்தை வெளியில் அனுப்பிவிடத் தயாரிப்பாளர்கள் தீர்மானித்திருக்கிருர்கள்.

"சினிமா ரஸிகர்களுக்கு எது பிடிக்கும், எதை ரஸிக்கிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்கு உதவுகிறது இப்பகுதி

— ஆசிரியர்.

*எதிர்பாராதது

'சிற்பி செதுக்காத பொற்சிலையே' என்று கொட்டும் மழையில் உட்கார்ந்து பாடுகிறான் சுந்தர். உணர்ச்சி வசப்பட்ட சுமதி ஓடுகிறாள். அவள் அண்ணன் மகிழுகிறார். நாமும் மகிழுகிறோம். ஆனால் அப்போதுதான் எதிர்பாராதது நடைபெறுகிறது. சுந்தரை அணைக்க வந்த சுமதியின் மென் கரங்கள் அவனது கன்னங்களைப் பதம் பார்த்து விடுகின்றன. நமது ஏமாற்றம் தாங்க முடியாது போய் விடுகிறது.

எஸ். சுப்பிரமணியம்,
காரைக்குடி.

*போன மச்சான் திரும்பி வந்தான்

தியாகுவை ஒழித்து சந்திராவை அடையத் தீர்மானிக்கும் மணி செய்யும் சதி அம்பலமாகி விடவே விரட்டப்படுகிறான். தியாகு, சந்திரா முதலியோர் படகில் செல்லும்போது மணி சுடுகிறான்; குறி தவறி அவனையே தாக்குகிறது. அவன் புஷ்கோட்டில் மாடு படம் இருப்பதைக்கண்டு மாடு ஒன்று துரத்திக் கொல்கிறது. தன் வினை தன்னைச் சுடும் என்பதை வெளிப்படுத்தும் காட்சி இது.

எம். ஜி. மோகனசுந்தரி,
புதுப்பேட்டை.

*நண்பன்

உண்மையை ஒப்புக்கொண்ட பாலையாவை 'உள்ளே தள்ளு' என்கிறார் இன்ஸ்பெக்டர். 'ஐயய்யோ! உண்மையைச் சொன்னா உள்ளே தள்ளுவாங்கன்னா உண்மையைச் சொல்லாமலே இருந்திருக்கலாமே' என்கிறார் தங்கவேலு. அரிய காட்சி இது.

கே. ஏ. என். ராகவன்,
பல்லாவரம்.

எதிர்பாராதது

படுக்கை யறையில் உட்கார்ந்திருக்கிறார் தயாபரர். சுமதி உள்ளே வந்து துக்கம் தாளாமல் அவர் காலில் விழுந்து விடுகிறாள். அவர் அங்கே தன் மகனின் புகைப்படத்தையும் அதன் பின்னால் அவன் அவளுக்கு எழுதியிருக்கும் காதல் மொழிகளையும் கண்டு மனம் பரிதவித்து 'முருகா!' என்று கூவியபடி ஓடி முருகனின் பாதங்களில் போய் விழுகிறார்.

பாலசுப்பிரமணியன்,
கொமாரபாளையம்.

நாகரீக மோகத்தில் கருத்தழிந்து அலைந்தபின், மாமன் வீடு திரும்புகிறாள் நளினி. மகனை வீட்டைவிட்டு ஓடச்செய்து விட்டுத் தன்னிடம் வந்த மருமகளை வீட்டை விட்டே வெளியேறச் சொல்லுகிறார் சுமதியின் தந்தை. ஆனால் தன்னை நாடிவரும் யாரையும் ஆதரிப்பதுதான் மனிதத் தன்மை என்பதை சுமதி வற்புறுத்தியும் அவர் கேளாததால் அவளே வீட்டைவிட்டு அண்ணியுடன் கிளம்பி விடுகிறாள். மனிதத் தன்மையைச் சுருங்கக்கூறி விளங்க வைக்கிறது இக்காட்சி.

வெ. கோபாலன்,
மங்கநல்லூர்.

கிழவனை தன் பெண்ணுக்கு வரனாகப் பார்த்த தரகனை அடிக்கப்போகிறார் சுமதியின் தந்தை. ஆனால் சுமதி அந்தத்திருமணத்திற்குச் சம்மதிக்கிறாள். தந்தையிடம் வாதாடி வெற்றி பெறுகிறாள். தன் வாழ்வு சூன்யமாகி விட்டாலும் தன் அண்ணன் வாழ்வாவது மலரட்டும் என்ற தியாக உணர்ச்சியுடன் சுமதி இத்திருமணத்திற்குச் சம்மதிக்கும்போது அவளது தியாக

*இக்குறியிட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் விதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

உணர்ச்சி கண்டு நாம் மனம்துடிக்கிறோம்.

சி. நமசிவாயம்,
பாளையங்கோட்டை.

உள்ளத்திலே ஒருவனுக்கு இடமளித்து விட்டு உடலை வேறொருவரிடம் அடைக்கலமாக்கப் போகிருள் சுமதி. தயாபரர் அவளை மகள் போலக் காப்பேன் என்றதும் ஓவெனக் கதறி காலில் விழுகிருள். அவளது உள்ளத்தைப் போல் அவர் உள்ளமும் சூன்யமாகி விடுகிறது.

சு. பரிமளா,
திருமழபாடி.

'முருகா! என்போன்ற பாவிகள் இருக்கும் வரை நீதி எப்படித் தழைக்க முடியும்?' என்று முருகனிடம் முறையிட்டுக் கதறுகிருர் தயாபரர். அவர் இளம் பெண்ணை மணந்த சபல புத்திக்கு வருந்திய தோடல்லாமல் தன் மகனின் காதலியை-மருமகளாக வேண்டிய மாதரசியை-மனைவியாக்கிக் கொண்டோமே என்பதற்காகவும் துடிக்கிருர். சபல புத்தியுள்ள கிழவர்களுக்கு இது ஒரு மகத்தான படிப்பினையைப் புகட்டுகிறது.

'கிரீன்லாம்ப்,'
தென்காசி.

கண்ணை யிழந்து விட்ட சுந்தர் இரவு திடீரென்று எழுந்து தன் ஆசைக் காதலி சுமதியைச் சந்திக்க வேண்டும் என்று தந்தையிடம் கூறுகிருன். மகனை தன் மனைவியிடமே அழைத்துச் செல்ல வேண்டுமே என்று துடிதுடிக்கிருர் தந்தை. ஆனுலும் அவனுக்காகத் தன் உயிரையேவும் துறக்கத் துணிந்த அவர் சுமதியின் வீட்டுக்கு அவனை அனுப்பி வைக்கிருர். அங்கே அவன் மழையில் நனைந்தபடி, தாங்கள் முன்பு பாடிய பாடலை மனமுருகப் பாடுகிருன். சுமதி அதில் மயங்கி அவனிடம் ஓடி வருகிருள். அவன் அவள் கைகளைப் பிடிக்கிருன். சுமதி நினைவு பெற்று அவனை நையப் புடைத்து விட்டு ஓடிப் போய் படுக்கையில் குப்புற விழுந்து கதறுகிருள். பெண்களின் மனம் சிறிது சலனமுற்ருலும் அவர்கள் மிகச் சிறந்த வைராக்கியசாலிகள் என்பதை இக்காட்சி விவரிக்கிறது.

எல். பாலசுப்ரமணியம்,
சென்னை-2.

சுமதி படுக்கை யறைக்குள் சென்று தயாபரரின் கால்களில் விழுகிருள். அவள் தன் குமாரனின் காதலி என்பதை, போட்டோவிலிருந்து அறிந்து புழுவாகத் துடிக்கிருர் அவர். மகனின் காதலிக்கு தான் மணாளனுகி விட்ட துன்பத்தை அவரால் பொறுக்கவே முடியவில்லை. சாந்தியைத் தேடி மணம் செய்து கொண்ட அவருக்கு அதன் மூலம் சாந்திகிட்டுவதில்லை. அவர் திருத்தலங்களுக்கு க்ஷேத்ராடனம் செய்யப் புறப்பட்டு விடுகிருர். இந்தக் காட்சி நம் உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது.

பிரப்ாகர்,
செங்கற்பட்டு.

இரவு தூக்கத்தில் எழுந்து உட்கார்ந்து கொண்ட சுந்தர், வயதானவர்கள் இளம் பெண்களை மணந்து அவர்கள் வாழ்வைப் பாழ்படுத்துவதைப்பற்றிக் கூறிக் கண்டபடி பேசி விடுகிருன். சுமதியின் கணவன் மாண்டாலொழிய தன் வாழ்வு மலராது என்று சுந்தர் சொல்லும்போது அவன் தந்தை தயாபரரின் உள்ளம் வெடித்துவிடும் போலிருக்கிறது. ஏற்கெனவே வாழ்வில் சாந்தி கிடைக்காமல் துடிதுடித்து நிற்கும் தயாபரர் மகனின் ஏச்சுப் பேச்சுக்களால் மேலும் புண்படுத்தப்படுவது கண்டு நம் மனம் அழுகிறது. அருமையான காட்சி இது.

எஸ். எஸ். ஜானகிராமன்,
செங்கற்பட்டு.

சுமதியைக்காண ஆவலோடு அவள் வீட்டுக்குப் போகிருன் சுந்தர். அத்துடன் நில்லாது காதல் மொழிகளை அள்ளி வீசுகிருன். 'நான் மணமானவள்' என்று அவள் கூறியதும் கண்ணையிழந்த அவன் மனம் துடிதுடிக்கிறது. அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் தான் தவ்றுதலாகப் பேசி விட்டதற்காக மன்னிப்பு கேட்கிருன். அவன் ஆசை நிராசையானது

கண்டு நாம் புழுவாகத் துடிக்கிறோம். உள்ளமுருக்கும் உயரிய காட்சி இது.

பி. ராமதுரை,
சென்னை–1.

கண்கட்டு அவிழ்க்கப்படுகிறது. சுமதியைக் காணலாம் என்ற மகிழ்ச்சியோடு அவள் வீட்டிற்கு ஓடுகிறான் சுந்தர். ஆனால் அவன் அங்கே காண்பது என்ன? அவள் அவனது தந்தையின் — கணவரின் — படத்தின் முன் வருத்தத்தோடு உட்கார்ந்திருக்கிறாள். அவன் மனம் துடிக்கிறது. அவள் கணவனைக் கேவலமாகப் பேசிய அவன், அந்த மனிதர் தன் தந்தையேதான் என்றறியும்போது தனக்காகத் தகப்பனார் செய்து வந்த தியாகங்களுக்காகத் துடிதுடித்துப் போய் அவரது பாதங்களில் விழுந்து கதறுகிறான். ஆனால் அவர் பிணமாகிக் கிடக்கிறார்.

அவன் நிலைகண்டு நம் உள்ளம் உடைந்து போகிறது. அதைவிட வாழ்வில் சாந்தியைத் தேடி அடைய முடியாது போய் சாவிலேயே அமைதி கண்டுவிட்ட அவரைக் கண்டு மனமுருகிப்போய் விடுகிறோம். உள்ள முருக்கும் இந்தக் காட்சி இப்படத்திலேயே மிகவும் சிறந்தது.

எம். இ. சடகோபன்,
காஞ்சிபுரம்.

ஆஷாவுக்கு அண்ணா சுந்தரின்மேல் உயிர். அவன் சிறிதுநாள் அங்கே தங்கினால் கண் பார்வை தெரிந்து விடும் என்று ஆஷாவின் தகப்பனார் கூறுகிறார். 'அண்ணாவுக்குப் பயித்தியம் பிடித்துச் சாக வேண்டுமென்று நீ நினைக்கிறாயா?' என்று கேட்கிறான் சுந்தர். 'அப்பா! அவரை அனுப்பி விடு அப்பா!' என்று கத்துகிறாள் சிறுமி ... சிறுமிகளின் உள்ளப் பண்பை விளக்கும் இக்காட்சி நம் மனதை நெகிழச் செய்கிறது.

எம். பி. ஸ்ரீனிவாஸன்,
சென்னை–1.

கண்கட்டு அவிழ்க்கப்படுகிறது சுந்தருக்கு. அவன் ஆவலோடு சுமதியின் வீடு நோக்கி ஓடிப்போகிறான். மகனுக்குக் கண் தெரிந்துவிடுமே! தெரிந்ததும் அவன் சுமதியின் மூலம் தன் உறவு முறையை அறிந்து கொண்டால்? தயாபரர் மனப் போராட்டத்திற்குப் பின் முடிவுக்கு வருகிறார். மகன் வாழ வேண்டுமானால் தான் சாகத்தான் வேண்டும். இந்தத் தீர்மானத்துடன் வீடு திரும்பும் தயாபரர்மீது நமக்கு அளவு கடந்த அனுதாபம் ஏற்படுகிறது. நாகய்யா மனப் போராட்டத்தை அற்புதமாகச் சித்தரித்திருக்கிறார்.

ஆர். ஆர். சாமி.
காஞ்சிபுரம்.

'உங்களை நம்பலாமா?' என்று கேட்கிறாள் சுமதி. அவள் தான் என்றும் வழுக்கி விழுந்தவளாகி விடக்கூடாது என்ற நேர்மையுள்ளம் கொண்ட தமிழ்ப்பெண். 'நல்லவர்கள் கடவுளை நம்புகிற வரையில் நீ என்னை நம்பலாம்' என்று கூறுகிறான் சுந்தர். கடவுள் நம்பிக்கையைப் பற்றிச் சுருங்கக் கூறிசத்தியத்தை நிலைநாட்டும் அந்த வார்த்தைகள் நம்மைப் பெரிதும் கவருகின்றன. சிறந்த காட்சி அதுவே.

என். கல்யாணி,
சென்னை–7.

கிழவனை மணக்கிறேன், என்று சொன்ன பெண்ணிடம் தந்தை கதறுகிறார். 'அப்பா! இனி எந்த இளைஞனையும் என்னால் காதலிக்க முடியாது. சேவைதான் செய்ய முடியும். அந்தச் சேவையை வயதான கிழவருக்குச் செய்வதில்தான் என் உள்ளம் சாந்தியடையும்' என்று பொருள்படக் கூறுகிறாள், சுமதி. அவள் ஒரு மாதரசி. அவள் கூறும் சொற்கள் அவளது உள்ளத்தைப் பிரதிபலிக்கச் செய்து நம் உள்ளத்தைப் பிழிந்தெடுத்து விடுகின்றன. சோகமயமான அந்தக் காட்சியில் உருகாதவர்கள் பாவம்.

கேபெஞ்பி,
சென்னை–14.

தான் கடன் வாங்கி வைத்திருந்த பணத்தைத் திருடியதாக நளினியைக் கண்டபடி பேசி விடுகிறான் கோபு அப்போது கம்பவுண்டர் கந்தசாமி அங்கே ஓடிவந்து குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற தானே அப்படிச் செய்ததாகக் கூறுகிறான். பலன் அவன் டிஸ்மிஸ் செய்யப்படுகிறான். அவன் எதுவுமே நிலையான

தல்ல என்று கூறி வெளியேறி பல காரம் விற்கிறன். தவருன வழியில் செய்யப்படாத எத்தொழிலும் சிறந்ததுதான் என்பதை விளக்கும் இக் காட்சி நம் பாராட்டுக் குரியதாகும்.

உப்பிலி,
கும்பகோணம்.

காதலன் மாண்டான்; கணவன் எங்கோ ஓடிவிட்டான். ஆனுல் அதனுலெல்லாம் கருத்தில் தூய்மை மாருமல் வாழும் பெண் தெய்வம் சுமதி தன் முன்னே நிற்கும் காதலனைக் கண்டு புழுவாகத் துடிக்கிருள். ஆனுல் அவள் மனம் சபலமடையவில்லை. காதலன் மீண்டது கண்டு மகிழ முடியாத நிலையில் அவள் மற்ருெருவரின் மனைவியாகி விட்டிருந்தாள். அவளது நிலை பரிதாபகரமானது.

வி. ஸி. கோவிந்தன்,
மதுரை.

நளினியிடம் வருகிருன் ஒரு கயவன். அவளது நாகரீகம் அவனைத் தடுமாறித் தவருன எண்ணம் கொள்ளச் செய்கிறது. அவன் காளியாக மாறுகிருள். நளினி நாகப்பாம்பாக மாறிச் சீறும்போது பெண்மை வெல்க என்று நம்மையுமறியாமல் கூவுகிருேம். நளினி நாகரீகமோகம் கொண்டவளே தவிர நாசமடையும் காமப்பிசாசல்ல என்பதை எடுத்துக் காட்டும் அக்காட்சி அடாத செயலில் ஈடுபடுவோருக்கு எச்சரிக்கை செய்கிறது.

பி. வி. நாயகம்,
திருச்சி.

சுந்தருக்குப் பார்வை மீளுகிறது; ஓடுகிருன் அங்கே அவன் தாயாகக் காட்சி யளிக்கிருள் சுமதி. 'ஐயோ தந்தையின் மனைவியைக் காதலித்து விட்டேனே' என்று கதறுகிருன். 'கண்ணிழந்தான் பெற்றிழந்தான் போல' என்பதற்கு உதாரணம் இதுதான். மகன் வாழ்வுக்காக தன்னுடைய வாழ்வையே முடித்துக்கொண்டு விட்ட தந்தையைக் கண்டு கதறுகிருன். அவன் அணைக்க வேண்டிய அன்புருவமே அவனை அணைத்து ஆறுதல் கூறும் அன்னையாகிவிடும் காட்சியிலே நாம் நம் மனதைப் பறிகொடுத்து உணர்ச்சி மிகுதியில் துடிதுடிக்கிருேம்.

ந. ராமசாமி,
மதுரை.

போன மச்சான் திரும்பி வந்தான்

தியாகு சந்திராவிடம் மற்றவர்கள் எப்படி நினைத்தாலும் தாங்கள் இருவரும் மனச்சாட்சிக்கு விரோதமின்றி நேர்மையாக நடந்து கொண்டால் போதும் என்று கூறிவிட்டு 'வெளியில் படுத்துக்கொள்ளுவதாகவும் உட்பக்கம் கதவைத் தாளிட்டுக் கொள்ளும் படியும்' கூறுகிருன். 'தரையிலேயா படுக்கப்போறீங்க?' என்று சந்திரா கூறுகிருள். தூய்மையான காதலைப் பிரதிபலிக்கும் அக்காட்சி 'போன மச்சா'னிலே சிறந்ததாகும்.

ஆர். எஸ். கண்ணன்,
சேப்பாக்கம்.

அலமேலு காரில் போகிருள் கணவன் குப்புசாமியுடன். காரின் 'ஸ்டியரிங்' பிய்த்துக்கொண்டு விடுகிறது. அப்படியே கன்னுபின்னு என்று விட்டுக்கொண்டு போகிருள். அவள் கணவன் குப்புசாமி ஸ்டியரிங்கைத் துரத்தி ஓடிபிடித்து வருகிருன். அபத்தமானுலும் ஹாஸ்யரஸத்தில் நம்மை மூழ்கடிக்கும் இக்காட்சியிலே அந்த நிமிஷம் மனதைப் பறிகொடுத்துக் கஷ்டங்களை மறக்கத்தான் செய்கிருேம்!

கே. பாலசுப்பிரமணியன்,
ஜம்பை.

இருட்டிலே ஒரு உருவம் மெல்ல ஒரு பெட்டியை எடுக்கிறது. அதைத் தடுக்கிறது ஒரு வளையலணிந்த கரம். அது திருடனைப் பிடித்துவிட்டது என்று நாம் நினைக்கும்போது, வெற்றிலை போடக்கூடாது என்று படித்த மனைவி கூறியதைக் கேட்டுத் திருட்டுத் தனமாகப் போடமுயலும் சாம்பு வெற்றிலை பெட்டியை எடுக்கிருர். தமாஷான காட்சி இது.

ஓ. ப. நாதன்,
சென்னை—7.

கேள்வி பதில்!

> நமது பதில்களைப் படித்து விட்டு நீங்கள் சிரிப்பதுடன் விஷயங்களையும் தெரிந்து கொண்டீர்களானால் ரொம்பவும் சந்தோஷம்.
>
> — ஆசிரியர்

எஸ். எல். தேவன், அசிக்காடு

மிக்க அனுபவமுள்ள நீங்கள் சென்ஸார் போர்டில் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்தால், சினிமா ரஸிகர்களின் மனோபாவத்திற்கேற்றவாறு என்ன செய்வீர்கள்?

தடை செய்து விடுவேன்! தற்போதைய படங்களில் பெரும்பாலானவற்றை நமது ரஸிகர்கள்தான் விரும்புவதில்லையே!

படத்தொழிலில் உங்களுடைய முதல் விரோதி யார்?

என்னைத்தான் படத்தொழிலிலுள்ளோர் அனைவரும் நண்பனாகக் கருதுகிறார்களே!

அரசியல் மேடைக்கும் கலை மேடைக்கும் என்ன வித்தியாசம்?

அங்கே சட்டமாக்கப்படுவது இங்கே வசனமாக மாறிவிடுகிறது!

எஸ். கே. சுந்தரம், மயூரம்

ரத்தக்கண்ணீர் படத்தில் குஷ்டம் பிடித்த பின்பும் மோகனை காந்தா தன் வீட்டில் வைத்துக் காப்பாற்றுகிறாள். இத்தகைய கருணையை ஒரு பகிரங்க தாசியிடம் எதிர்பார்க்க முடியுமா?

நிஜவாழ்க்கையைச் சித்தரிப்பதல்லவே நம் படங்கள்!

படவுலகில் இதுவரை வசனத்தை வசனமாக இயற்கையாகப் பேசியவர் யார்?

நடிப்புக்காகத்தானே 'அப்படியும்' அவர் பேசியிருக்க வேண்டும்!

இன்றைய தினம் வெளிவரும் தமிழ்ப் படங்களுக்கு ஜீவநாடியாக இருப்பது எது?

தழுவல் கதையும், திருட்டு மெட்டும்!

காதலுக்கு கண் இல்லை என்கிறார்கள். ஆனால் காதல் கண்களால் பேசும என்கிறார்கள்; எப்படி?

இதிலிருந்த காதலுக்கு கண் இல்லை என்பது தெரியவில்லையா? கண்ணை வாயென்று நினைத்து அல்லவோ அது பேசுகிறது!

இன்று உலகம் அதிகம் போற்றுவது யாரை – விஞ்ஞானியையா, கலைஞனையா, கவிஞனையா?

சமாதானப் பிரியர்களை!

வாழ்க்கையில் தனிமை எதைப் போன்றது?

திரியில்லாத தீபத்தைப் போன்றது!

பணத்தை உடையவர் பண்பாடு இல்லாமல் இருப்பதேன்?

பணத்துடன் பழகும் அளவுக்கு, மக்களுடன் பழக அவர்களுக்கு நேரம் கிடைக்காததால்தான்!

டி. ராமநாதன், ஆவட்டி

'ரத்தபாசம், ஸ்ரீதரின் விலாசம் என்ன?

8, மூசா சேட் தெரு, தி. நகர்– சென்னை – 17 என்பது ஸ்ரீதரின் விலாசமாகும்.

எம். ராதாகிருஷ்ணன், பம்பாய்

உங்களுக்கும் படத்தில் ந்டிக்க ஆசையா?

ஏன், நீங்கள் ஏதேனும் படம் எடுக்கப் போகிறீர்களா?

'கேள்வி–பதில்' பகுதிக்கு தயவு செய்து இன்னும் அதிக பக்கங்கள் சேர்க்க முடியாதா?

தயவுசெய்து இப்படிக் கேட்காதீர்கள்!

'உலகம்' படத்திற்கு கூப்பன் போட்டிமூலம் ரஸிகர்களை அழைத்த திரு மூனுஸ் தம்பதிகள் தற்போது ஏதேனும் படம் பிடிக்கிறார்களா?

ஏன், இந்த 'உலக' அனுபவம் அவர்களுக்குப் போதாதா?

அதிரைவீரன், இலங்கை

காலஞ்சென்ற திரு பி. யு. சின்னப்பா சொர்க்கவாசலில் நின்றால் நான் போகும்போது பார்க்க முடியுமா ?

உமக்கு சொர்க்கம்தான் கிடைக்கும் என்று எப்படித் திர்மானமாகச் சொல்ல முடியும்?

மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை யாருடையது ?

மணக்கப்போகும் மங்கையினுடையதுதான்?

சில சினிமா நடிக, நடிகைகள் எழுதும் கட்டுரைகள் அவர்களது சொந்த கற்பனையா, இரவலா?

இந்த விஷயத்தில் அவர்கள் 'நடிப்பதில்லை'!

வீ. ரெங்கசாமீ, அக்கரபத்தன

எஸ். எஸ். ராஜேந்திரனின் வாழ்க்கைச் சித்திரம் 'பேசும் பட'த்தில் வெளியாகி விட்டதா ?

இல்லை!

'ஜேயீ', இலங்கை

கதைகளில் வரும் வசனங்கள நடிக, நடிகைகளால் மனப்பாடம் செயயப்பட வேண்டுமா ?

அவரவர்களுடைய ஞாபக சத்தியைப் பொறுத்த விஷயம இது!

எவவளவோ சினிமா பத்திரிகைகள் வந்த போதிலும், 'பேசும் பட'மே என்னைக் கவர்ந்துள்ளது. இதற்குக் காரணம் என்ன ?

'பேசும் படம்' சிறந்த பொழுது போக்காக இருப்பதால்.

எஸ்.என். சுப்ரமண்யம், கண்டி

தற்போது எம். ஜி. ராமச்சந்திரன் எந்தெந்தப் படஙகளில் நடித்து வருகிறார் ?

ஆர். ஆர். பிக்சர்ஸ் 'குலேபகாவலி'யில் நடித்து வருகிறார்.

இதுவரை பத்மினியும் எம். ஜி. ராமச்சந்திரனும் எந்தப் படத்திலும் 'ஜோடி' சேர்ந்து நடிக்கவில்லையே, ஏன் ?

இந்தக் கேள்வியை நம் பட முதலாளிகளுக்கு ஏலம் போடுங்கள் !

ஆ. சச்சானந்தன், திருமலை

டைரக்டர் கெம்பராஜ் விலாசம் என்ன ?

மௌபரீஸ் ரோடு, ஆழ்வார் பேட்டை, சென்னை–18 என்று விலாசம் எழுதிப் போடுங்கள்.

ப. ராமகிருஷ்ணன், பெர்ன்ஹில்

பெண்களுக்கு அழகை அளிக்க ஆண்டவன் மறந்து விட்டால் என்ன நேரிடும் ?

ஆண்களுக்கு கண்கள் வைக்கவும் மறந்துவிடும்படிச் செய்துவிடும்!

காதலிக்கக் கூடாது என்ற கடுமையான சட்டம் நாடெங்கும் தோன்றினால்?

கண்களிடையே பெரும் போராட்டம் ஏற்படும்!

பட்டிக்காட்டு பாவைக்கும், நகரத்து நங்கைக்கும் உள்ள வித்தியாசம் யாது?

பெண்மை!

உலகத்தில் நீதி அழிந்தால்?

உலகமும் அத்துடன் அழிந்துவிடும்.

பி. பாலன், சென்னை–14

'ரத்தக் கண்ணீ'ரில் நடித்து சம்பாதித்த பணத்தை எம். ஆர். ராதா குஷ்டரோக நிவாரண நிதிக்குக் கொடுக்கப் போவதாக வதந்தி வருகிறதே, நிஜந்தானா?

வதந்தி இன்னும் என் காதருகே வரவில்லையே!

ரா. வெங்கடாசலபதி, இலங்கை

திரை உலகில் நடிப்பில் நிகரில்லா மன்னன் யார்?

'அசோகர்' வேஷம் போட்டவர் தாகய்யா! நம் இந்தியாவை ஆண்ட அரசர்களுள் அவர்தானே சிறந்தவர்!

மாணவர்களின் மனதை மயக்கும் மாணவிகளை என்ன செய்ய வேண்டும்?

'பழிக்குப்பழி' வாங்க வேண்டும்!

நடிகைகளை நக்ஷத்திரங்கள் என்று கூறுவதேன்?

சித்திரத்தில் சித்தரிக்கும் நக்ஷத்திரங்களுக்கு ஐந்து முனைகள்தான்

உண்டு. நம் நக்ஷத்திரங்களின் வருமானம் ஐந்து இலக்கத்தில் இருப்பதால் இப்பெயர் வந்திருக்கலாம்!

லாஸர், பெங்களூர்

'காஞ்சனு' என்ற படம் எந்த ஊரில், எந்த ஸ்டூடியோவில் பிடிக்கப்பட்டது? அதன் சொந்தக்காரர் யார்?

டைரக்டர் எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு, கோவையிலுள்ள தனது சொந்த ஸ்டூடியோவான 'பக்ஷிராஜா'வில் அதைப் படமாக்கினர்!

தங்கராசன், கொழும்பு

சினிமா நடிகைகளில் பெரும்பாலோர் திருமணம் செய்து கொள்வதில்லையே, ஏன்?

படங்களில் திருமணக் காட்சிகளில் நடித்து அனுபவம் வாய்ந்த அவர்கள் நிஜவாழ்க்கையிலும் அவற்றை அனுபவிக்க விரும்பாமல் தப்பிக்க இருக்கலாம்!

எஸ். ஜெயராமன், கொழும்பு

வைரமாலையில் நடிக்கும் வாதிராஜுக்கு முப்பது வயது என்பது உண்மையா?

உண்மையையும் சில சமயம் உலகம் ஏற்க மறுக்கிறது, பார்த்தீர்களா!

கற்பனைச்சிற்பி, கோவை

கதை எழுதுவது கடினமா? வசனம் எழுதுவது கடினமா?

இரண்டுமில்லை. அதை சினிமாவாக எடுக்கச் செய்வதுதான் மிக்க கடினம்!

எம். எஸ். கே. கருப்பய்யா, இலங்கை

ஒரு பெண்ணை காதலிப்பதற்கு ஒரு ஆண் முதலில் என்ன செய்ய வேண்டும்?

அந்த வயதை அடைய வேண்டும்!

கோபாலகிருஷ்ணன், சிவகெங்கை

சிறந்த வியாபாரம் எது?

'கையைக் கடிக்காத' வியாபாரம்!

பொதுவுடமை பரவாமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

பணம் ஒரே இடத்தில் சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!

கடவுளை நிந்தனை செய்தால் என்ன கிடைக்கும்?

செலவின்றி உமது பெயர் விரைவில் பிரபலமாகி விடும்!

மாதவன், பாலக்காடு

திரிசங்கு சொர்க்கம் என்கிறீர்களே, அப்படி என்றால் என்ன?

'நேர்மையான விமர்சனங்களை வெளியிட்டால் படமுதலாளிகள் வருத்தப்படுவார்கள்; பொய்யான விமர்சனமெழுதினால் ரஸிகர்கள் நிந்தனை செய்வார்கள்'—ஆக இத்தகைய இக்கட்டில் மாட்டிக் கொண்டு விழிப்பதற்குத்தான் திரிசங்கு சொர்க்கம் என்று பெயர்!

நமக்கு முன் இருந்தும் பார்க்க முடியாதது எது?

எதிர்காலம்!

கமலநாதன், திண்டுக்கல்

குழந்தை – இது எதைக் குறிக்கிறது?

ஆசைத் தம்பதிகளின் நினைவுச் சின்னத்தை!

அழகிய ஒரு பெண்ணை, அழகற்ற ஆணுடன் பார்க்கும் நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

அந்த ஆண்மகனின் அதிருஷ்டத்தை எண்ணி வியப்பேன்!

சங்கரன், திருவண்ணாமலை

ஒரு படத்திலிருந்து அதிக லாபம் அடைவது யார்?

சர்க்கார்!

படத்தில் காதல் காட்சிகளில் தோன்றும் நடிக-நடிகைகள் உண்மையில் காதலிப்பார்களா?

சிலர் சிலரை சிலகாலத்திற்கு!

'குடும்பம்' போன்ற நல்ல படங்களுக்கு ரஸிகர்கள் எப்படி ஆதரவு காட்டலாம்?

தனியாகப் போகாமல் 'குடும்ப'த்தோடு போகலாம்!

'பித்தன்,' சிவகாசி

நடிகை நக்ஷத்திரமாவது எப்போது?

வீதிகளில் வர்ணச் சுவரொட்டிகளில் முதல் தடவையாக அவள் முகம் காணும்போது!

நடிகைக்கு காதல் எப்படிப்பட்டது?

மற்றொரு படத்தின் வசன ஒத்திகை!

வரதன், புதுக்கோட்டை

வேலை நிறுத்தத்துக்கு பின்னணியாக இருப்பது எது?

வாடும் வயிறு!

வாழ்க்கை ஒரு போராட்டமா, அல்லது பகற்கனவா?

வெற்றி என்னும் பகற்கனவுக்காக நடத்தப்படும் ஒரு போராட்டம்தான்!

காலம் என்பது என்ன?

சாகா வரம் பெற்றது!

கமலினி, விருதை

பெண்கள் நடனமாடச் சிறந்த இடம் எது?

ஆண்களின் இதயம்!

ஒரே பெண் இருவரை நேசிக்க முடியாதா?

ஏன் முடியாது? அவர்கள் கணவனுகவும், தந்தையாகவும் இருந்தால்!

என் தகப்பனுருக்கு சினிமா என்ருலே பிடிக்காது. நான் 'பேசும் படம்' படிப்பதைக் கூட அவர் வெறுக்கிருர். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

'பேசும் படம்' சினிமா விசிறிகளுக்கென வெளியாகும் பத்திரிகை. உங்கள் தந்தை போன்ற 'பேசும் பட' விரோதிகளுக்கல்ல!

சந்தானம், ஹைதராபாத்

சென்னை சைனுபஜார் எதற்குப் பெயர் பெற்றது?

பிக்பாக்கெட்டுக்கு!

சுந்தரம், திருவனந்தபுரம்

ஒரு படத்தின் வெற்றிக்கு ஒலிப்பதிவாளர் எவ்வளவு தூரத்துக்குப் பொறுப்பு வாய்ந்தவர்?

குயிலின் குரலை மயிலாக்காமலிருக்கும் வகையிலும், வீரனின் குரலை கோழையின் குரலாக மாற்ருமலிக்கும் தன்மை வரையிலும்!

கதை தற்கொலை செய்து கொள்வது எப்போது?

காகிதத்திலிருந்து 'செலுலாய்ட்' உருவம் எடுக்கும்போது!

பாண்டியன், சேலம்

நல்ல மனைவியைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

வாழ்க்கையின் முதல் சோதனையே அதில்தானே ஆரம்பமாகிறது!

டேவிட், உதகமண்டலம்

நம் திரைப்படக் காதலர்கள் எப்பாடு பட்டும் கடைசியில் ஒன்று சேர்ந்து விடுகிருர்கள். ஆனால், நிஜ வாழ்கையில் பெரும்பாலும் அப்படி நடப்பதில்லையே?

'திரைப்படக் காதலர்கள்' என்று உமது வினவிலேயேதான் விடையையும் சொல்லி விட்டீர்களே! எனக்கு சந்தர்ப்பமளிக்கவில்லையே!

காதலின் 'கிளை மாக்ஸ்' எது?

இருட்டு!

காதலர்கள் பெருமபாலும் மலர் வனத்தில் சந்திப்பதேன்?

மணம் தேட இருக்கலாம்!

இர்ஸாமிர், மட்டக்களப்பு

நான் ஒரு தணிக்கை அதிகாரியாக இருந்தால் எல்லா படங்களையும் இலவசமாகப் பார்த்து விடுவேன். ஹும், எனக்கு அச்சந்தர்ப்பம் வருமா?

உங்கள் 'விருப்பம்' எனது அனுதாபத்தைப் பெறுகிறது!

சில நடிகர்கள் சோக பாகத்தையே தொடர்ந்து ஏற்று நடிப்பதேன்?

வருமானவரி அதிகாரிகளின் அனுதாபத்தைப் பெறுவதற்காக இருக்கலாம்!

போலோநாத், திருப்பதி

கம்யூனிஸ்டு நாடுகளில் எதைக் காண முடியாது?

ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையை என்று சொல்கிருர்கள்; கூடவே 'உண்மையையும் அங்கு காண முடியாது' என்று பின்குறிப்பும் தருகிருர்கள்!

உங்கள் பைநிறைய பணம் இருந்தால் என்ன செய்வீர்கள்?

செலவழிப்பேன் தாராளமாக! ஆனால் அம்மாதிரியான சந்தர்ப்பங்கள் எனக்கு அடிக்கடி கிடைப்பதில்லை!

மூர்த்தி, கடலூர்

பெண்களின் புத்திசாலித்தனத்தை எதைக்கொண்டு அளக்கலாம்?

செலவிலும், சொற்களிலும் அவர்கள் காட்டும் சிக்கனத்திலிருந்து!

மீரான், கண்டி

வைஜயந்திமாலா தற்போது ஏதேனும் தமிழ்ப் படத்தில் நடித்து வருகிறாரா?

'மனைவியின் மகன்' படத்தில் நடித்து வருகிறார்.

எம். எஸ். எம். அன்வர், மருதானை

காதலிக்கு முதல் தெய்வம் காதலனா, கடவுளா? ஏன்?

காதலன்தான்! அவள் கேட்கும் வரத்தில் ஓரளவுக்காவது அவன் பூர்த்தி செய்கிறானே!

ராஜ், கரூர்

வாழ்க்கையை சுகமாக நடத்த அழகான பெண் தேவையா? அறிவுள்ள பெண் தேவையா? எபபடி?

அறிவுள்ள பெண்! ஏனெனில் பணத்தின் மதிப்பை அவளால் தெரிந்து கொள்ள முடியுமல்லவா?

ஸி. ஆர். கே. சாமி, விழுப்புரம்

'ரத்தக்கண்ணீர்' படத்தில் தன் தாயார் புடவைகட்டிக் கொண்டிருந்ததால் அவளை அறவே வெறுக்கும் மோகன், அதேமாதிரி புடவையை அணிந்திருக்கும் தாசி காந்தாவின் காலடியில் விழுந்து காலம் கழித்ததன் காரணமென்ன?

தான் விரும்பும் மங்கையிடம் சில குறைபாடுகளைக் கண்டாலும் ஆண்மகன் பொருட்படுத்த மாட்டான். இது உலக இயல்பு.

மு. ஹமீப் ரஹ்மான், மாயூரம்

'குடும்பம்' படம் தீபாவளியன்று தான் வெளியிடப்பட்டது என்று நான் கூறுகிறேன். என் நண்பர் முன்பே வெளியிடப்பட்டு விட்டது என்று சொல்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

அவர் '1955 தீபாவளி'யைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்!

க. சாந்தா, சிராப்பள்ளி

ஜெமினி வாஸன் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

சொந்தப் படங்களின் தயாரிப்பில் கவனம் செலுத்தி வருவதோடு, படவுலகம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு முடிவு காணவும் முயன்று வருகிறார்.

நடிகர்கள் சொந்தத்தில் படம் பிடிப்பது எதைப் போன்றது?

புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொள்வதைப் போன்றது!

அறிவின் திறன் எப்போது வெளிபபடும்?

செயலின் முடிவில்!

மதுரம், லலிதா, சென்னை-6

பின்னணிப் பாடகர் சௌந்தரராஜனின் விலாசம் தரமுடியுமா?

59, மந்தைவெளி தெரு, மயிலாப்பூர், சென்னை-4, என்ற விலாசத்தில் சௌந்தரராஜன் இருக்கிறார்.

கட்லோடி, கொச்சி

'ரத்தக் கண்ணீர்' ஆசிரியரின் மறுமணக் கொள்கை, கணவன் உயிருடன் இருககும்போதே, அவன் தனது மனைவிக்கு இன்பம் தர இயலாதிருப்பின், மனைவி மறுமணம் செய்து கொள்ளலாம் என்பதென எண்ணுகிறேன். தங்கள் அபிப்பிராயம்?

'ரத்தக் கண்ணீர்' ஆசிரியரின் எண்ணத்தை ஊர்ஜிதம் செய்வதில் அபிப்பிராயம் கேட்கிறீர்களா, அல்லது எனது சொந்த அபிப்பிராயத்தைக் கேட்கிறீர்களா?

தபால் பெட்டி

> இந்தப் பகுதியில் வெளிவரும் கடிதங்களில் காணப்படும் கருத்துக்களுக்கு நாம் பொறுப்பாளிகளல்ல.
>
> ஆசிரியர்.

மாணவர்களுக்கான படம்

இன்றைய படமுதலாளிகள் கேவலம் பண வருமானத்தை மட்டும் கணக்கிட்டு அதற்கேற்றவாறு படங்களைத் தயாரிக்கிறார்கள். மாணவர்களின் முன்னேற்றம், நல்லொழுக்கம் இவற்றைக் கவனிப்பதேயில்லை. நடிகைகள் மேலங்கியில்லாமலும் இருந்தாலும் அங்கங்கள் தெரியும்படியும் தோன்றி நடிக்கிறார்கள். அந்தக் கோலத்தோடு ஆபாசமான வசனம் பேசி, ஆபாஸமான பாடல்களையும் பாடுகிறார்கள். மாணவர் குலம் இதனால் தவறான பாதையில் விரைவில் திரும்பிவிட இடமேற்பட்டிருக்கிறது. சினிமா பார்ப்பவர்களில் சுமார் ஐம்பது சத விகிதத்தினர் மாணவ மாணவியர்தான். அவர்கள் நலனுக்கான படங்களைத் தயாரிக்க முன்வர வேண்டும் படமுதலாளிகள்.

எம். ஐ. ஹனிபா,
கொழும்பு-14.

●

கலையும் காட்சியும்

சினிமா ஒரு கலை. யாவருக்கும் அது பொதுச் சொத்து. அதிலே குறிப்பிட்ட கட்சி என்று மார் தட்டி, அந்தப் பிரிவினை மனப்பான்மையை ஏற்படுத்தி விடுகிறார்கள். முதலாளிகளும் வருமானத்தை எதிர்பார்த்து இந்தக் குறுகிய பாதையில் நடக்க ஆரம்பித்து தடுக்கி விழுந்து விடுகிறார்கள். இந்த முறையிலே அனலும் கனலும் தெறிக்காமல் கதையமைப்பும் கருத்தமைந்த வசனமும், புண்படுத்தாத ஹாஸ்யச் சுவையும் பொருந்திய படங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. சகஜமான வழியில் சாதாரண முறையில் தயாராகும் படங்கள் வெற்றி தருமேயல்லாது, கட்சியைக் குறிக்கோளாகக் கொண்டவையல்ல. சம்பந்தப்பட்ட யாவரும் உணர வேண்டும், கலை வேறு; கட்சி வேறு என்பதை.

வி. சிவராம்.
திருவண்ணாமலை.

●

ஆசிரியர் தருமம்

திரைப்படக் கலைக்கு ச்சேவை செய்வதாகக் கூறிக் கொண்டு ஏராளமான பத்திரிகைகள் கிளம்பியிருக்கின்றன. கிளம்பியும் வருகின்றன. இவற்றில் சில கலைக்காகச் செய்யும் தொண்டு வேடிக்கையானது! ஆசிரியர் தருமத்தை அறியாதவர்கள்தான் இவற்றின் ஆசிரியர்களாக அமர்ந்திருக்கிறார்கள் போலும். பத்திரிகையின் கொள்கை, சேவை இவைகளை விளக்கிவிட்டு, அதே இதழில் கலையைப் பற்றி அதிகம் குறிப்பிடாமல் மற்ற பத்திரிகைகளையும் ஆசிரியர்களையும் பற்றி விமர்சிக்க ஆரம்பித்து விடுகிறார்கள் இந்த ஆசிரியர்கள். இவர்கள் மற்ற பத்திரிகைகளைப் பற்றி விமர்சனம் செய்கிறார்களே தவிர, இவர்களது கலைப்பணி(!) அவர்களுடையதை விட எந்த விதத்திலும் நேர்மையானதும் சிரத்தையுடையதுமாய் இருப்பதில்லை! முழுப்பக்க விளம்பரம் கிடைத்தால் இந்த ஆசிரியர் விமர்சனம் எழுதாத பெருந்தகையாளராகி விடுகிறார்! ஆசிரியர்கள் கலைப்பணியை மட்டும் குறிக்கோளாகக் கொண்டால் — மக்களது பிரதிநிதிகளாக இருந்தால் — மட்டுமே மக்களிடையே பத்திரிகைகளும் ஆசிரியர்களும் வாழ முடியும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

எம். கே. சொர்ணப்பா,
மதுரை,

●

செய்திப் படங்கள்

செய்திப் படங்கள் திரையிடுவதை கட்டாயப்படுத்த முடியாது என்ற தீர்ப்பின் மேல் தியேட்டர் முதலாளி

கள் இத்தனை நாள் இல்லாத ஒற்றுமையோடு திரையிடுவதை நிறுத்தி விட்டார்கள். படித்தவர்களும் படிக்காதவர்களும் உள்நாட்டு, வெளி நாட்டு நடப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளும் தருணத்தை இழந்து விட்டார்கள். சர்க்காரின் செய்திப் படங்களை திரையிட்டாக வேண்டும் என்று சட்டத்தை திருத்தியமைத்து விட்டது அரசாங்கம். இப்போது நிலைமைரொம்பவும் மட்டமாகி விட்டது. தற்போது இந்திய அரசாங்கம் இப்போதுதான் ஓரளவு திரைப்படத் தொழிலில் அக்கறை கொண்டுள்ளது என்று நினைக்கும் தறுவாயில் இப்படிக் குட்டைக் குழப்பியது வருந்தத்தக்கது. இதனால் மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இதை அரசாங்கமும் தியேட்டர் முதலாளிகளும், பட உலகினரும் அறிய வேண்டும்.

கே. எஸ். விரபாகு,
மதுரை.

தூய்மைக்கு முதலிடம்...

பல படங்களில் சில காட்சிகளின் சூழ்நிலையைச் சரியாகப் பிரதிபலிப்பதே இல்லை. இதிலே கடவுள் முன் நின்றோ, உட்கார்ந்தோ பூஜை செய்யும் காட்சிகள் மிகவும் அலக்ஷியமாகக் கருதப்படுவது போல் தோன்றுகிறது! திருவிழாக்களுக்குப் போய் தெருவில் நின்று தரிசிக்கும்போது மட்டும் யாரும் ஆடைகளின் அமைப்பைப் பற்றிக் கவலைப்பட முடியாது. ஆனால் வீட்டிலே பூஜையறையில் ஒரு பெண் உட்கார்ந்து பக்தியுடன் பாடும்போது எப்படியிருக்க வேண்டும்? உண்மை பக்தியுள்ள பெண் எப்படியிருப்பாள்? ஈர உடையுடன் (படத்தில் இப்படியிருக்க வேண்டுமென்று சொன்னால் ஆபாஸமாகக் காட்டி விடுவார்கள்!) தலை வாராமல், புஷ்பத்தை மட்டும் கூந்தலுடன் அள்ளிச் செருகி, நெற்றியில் பொட்டோ, விபூதியோ இட்டுக் கொண்டு பூஜை செய்வாள். லக்ஷ்மிகரமாக இருக்கும். நமக்கும் பக்தி ஏற்படும். படங்களில் கதாநாயகி கதாநாயகனுடன் கொஞ்சும்போது ஒற்றைப் பின்னலுடன் காட்சியளிப்பவள் பூஜைக் காட்சியில் இரட்டைப் பின்னலுடனோ, அஜந்தாக் கொண்டையுடனோ, ஆபாஸமான தோற்றத்துடனோ காட்சியளிக்கிறாள். அந்தச் சூழ்நிலை தூய்மையையோ பக்தியையோ பிரதிபலிப்பதில்லை- இதை சம்பந்தப்பட்டோர் கவனிக்க வேண்டும்.

எஸ். சுந்தரி,
சென்னை-17

நல்ல சுகாதாரம்!

சென்னையின் ஹிருதய ஸ்தானமான மவுண்ட்ரோடில் இருக்கும் ஒரு தியேட்டர் மிகவும் மட்டமாக இருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல் சகல வசதிகளுடன் கூடியதொரு தியேட்டர் இருக்கும்போது இதை மட்டும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏனோ கவனிக்கவில்லை? நடுத்தர வகுப்பினர் செல்லக்கூடிய பத்தணா—அதற்குக் குறைந்த வகுப்பிற்குப் போகக்கூடிய நபர்கள் சித்ரவதைக்குள்ளாகிறார்கள். தியேட்டரின் எண்ணிக்கைக்கு அதிகமான டிக்கட்டுகள் கொடுக்கப்படுவதால் உள்ளே உட்காரும் இடம் நிறைந்து, மற்றவர்கள் நிற்க நேரிடுகிறது. அப்படி நிற்பவர்கள் மற்றவர்களின் கோபத்திற்கும் அனுதாபத்திற்கும் ஆளாக நேரிடுகிறது. பெஞ்சுகளிடையே போதுமான அளவுக்கு இடைவெளி கிடையாது. கொஞ்சம் பருத்த ஆசாமிகள் இடையே செல்ல முடியாது. இந்த நிலையிலே படத்தை இந்த வகுப்புக்காரர்கள் எப்படி ரசிப்பார்கள்?

தன் கஷ்டங்களை மறந்து மூன்று மணி நேரமாவது பொழுதை போக்க வரும் இந்த வகுப்பினரின் நிலை பரிதாபமாக இருக்கிறது. இந்தத் தியேட்டருக்கு லைசென்ஸ் கொடுத்த அதிகாரிகள் பொதுமக்களின் — முக்கியமாகக்கீழ் வகுப்பு ரஸிகர்களின் நிலையைப் பற்றிக் கவலைப்பட்டிருப்பதாகவே தெரியவில்லை. இவ்வளவு பெரிய சென்னை நகரில் இவ்வளவு மட்டமான தியேட்டர் இருப்பது வருந்தத்தக்கது. அதிகாரிகள் இனி மேலாவது ரசிகர்களின் நிலையறிந்து தியேட்டர் விஷயமாக நடவடிக்கை எடுப்பார்களா?

வி. சாரநாதன்,
சென்னை-5.

'பேசும் படம்' டைரி

குறிப்புகள்:
த-தமிழ்
தெ-தெலுங்கு
ம-மலையாளம்
க-கன்னடம்
ஹி-ஹிந்தி
சி-சிங்களம்

எங்கெங்கே என்னென்ன படங்கள் தயாராகின்றன என்பதை இந்த டைரி காட்டும். முழு விவரங்கள் தெரியாத இடங்களில் கேள்விக் குறி காணப்படும்.

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
ஜெமினி				
இன்ஸானியாத் (ஜெமினி)	[ஹி]	கே. ஜே. மகாதேவன்	?	படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகும்
கட்டபொம்மன் ,,	[த]	கொத்தமங்கலம் சுப்பு	?	ஆக்கவேலைகள் நடைபெற்று வருகின்றன
வள்ளியின் செல்வன் யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸ்	[த]	கொத்தமங்கலம் சுப்பு	லலிதா, வனஜா, சுந்தரிபாய், ஜெமினி கணேசன், சஹஸ்ரநாமம், டி.எஸ். துரைராஜ், எஸ்.வி. சுப்பையா முதலியோர்	ஜனவரி வெளியீடு

வாஹினி

மிஸியம்மா (விஜயா) [த]	பிரஸாத்	சாவித்திரி, ஜமுனா, ஜெமினி கணேசன், சாரங்கபாணி, நம்பியார், ஏ. கருணாநிதி முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
,, ,, [தெ]	,,	சாவித்திரி, ஜமுனா. என். டி. ராமராவ், நாகேஸ்வரராவ், ரங்கராவ் முதலியோர்	,,
பங்காரு பாப்பா [தெ] (வாஹினி)	பி. என். ரெட்டி	கிருஷ்ணகுமாரி, ஜமுனா, வித்தியாவதி, ஜக்கய்யா, ராமசர்மா, எஸ். வி. ரங்கராவ்	,,
கணவனே கண்கண்ட தெய்வம் [த] (நாராயணன் கம்பெனி)	டி. ஆர். ரகுநாத்	அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன், நாகய்யா, நம்பியார், கே. ராமசாமி முதலியோர்	துரித முன்னேற்றம்
தொங்க ராமுடு [தெ] (அன்னபூர்ணா)	கே. வி. ரெட்டி	சாவித்திரி, ஜமுனா, நாகேஸ்வரராவ், ரேலங்கி, ஜக்கய்யா முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
சிநேகசீமா (அசோசியேடட் புரொட்யூஸர்ஸ்) [ம]	எஸ். எஸ். ராஜன்	பத்மினி, சத்யன்	தயாரிப்பிலிருந்து வருகிறது
சதாசுலங் [சி] (பிலிம் சிலோன்)	டி. சோமசேகரன்	ப்ளோரிடா-பிரேம் ஜெயந்த் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
மகாகவி காளிதாஸ் [தெ] (லலிதகலா பிலிம்ஸ்)	சாஸ்திரி	ஹொன்னப்ப பாகவதர் முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
சசிரேகா பரிணயம் [த, தெ] (விஜயா)	கே. வி. ரெட்டி	?	ஆக்கவேலைகள் நடைபெற்று வருகின்றன
கவர்னர்ஸ் கப் [த, தெ] (ஜெயந்தி)	ஏ. டி. கிருஷ்ணசாமி	பண்டரிபாய், மைனுவதி, எம். கே. ராதா, மனோஹர், சாரங்கபாணி, தங்கவேலு, கிருஷ்ணன் – மதுரம் முதலியோர்	படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகும்

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
கடவுள் (ஷோபா பிலிம்ஸ்)	[த]	கமல்கோஷ்	?	பூஜை போடப்பட்டுள்ளது.
தெய்வமு ,,	[தெ]	,,	?	,,
நம் குழந்தை (வின்ஸர்)	[த]	கே. எஸ். கோபால கிருஷ்ணன்	எஸ். வரலக்ஷ்மி, ஏ. பி. குமாரி லக்ஷ்மி, நாகய்யா, மனோஹர், ஏ. பி. நாகராஜன் முதலியோர்.	முடிவடையும் தருவாயிலிருக்கிறது.
மங்கையர் திலகம் (வைத்யா பில்ம்ஸ்)	[த]	பிரஸாத்	?	படப்பிடிப்பு ஆரம்பமாகி விட்டது

ஏவி. எம்.

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
செல்லப்பிள்ளை (ஏவி. எம்)	[த]	எம். வி. ராமன்	கண்ணாம்பா, சாவித்திரி, பண்டரி பாய், கே. ஆர். ராமசாமி, பாலய்யா, தங்கவேலு முதலியோர்	துரித முன்னேற்றம்
வதின ,,	[தெ]	,,	கண்ணாம்பா, சாவித்திரி, நாகேஸ்வரராவ், ரேலங்கி முதலியோர்	,,
பராசக்தி (நேஷனல் பிக்சர்ஸ்)	[தெ]	கிருஷ்ணன்-பஞ்சு	ஸ்ரீரஞ்சனி, சிவாஜி கணேசன் முதலியோர்	தயாரிப்பிலிருந்து வருகிறது
? (ஏவி. எம்.)	[ஹி]	ஸிம்ஹா	சாஹு மோடக் முதலியோர்	படப்பிடிப்பு நடைபெறுகிறது
? (ஏவி. எம்.)	[தெ]	ஸியெச். நாராயண மூர்த்தி	?	ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன

ரேவதி

கள்வனின் காதலி (ரேவதி)	[த]	வி. எஸ். ராகவன்	குசலகுமாரி, கே. ஆர். செல்லம், சாரங்கபாணி	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
நள்ளிரவில் நடந்தது (ரேவதி)	[த]	கே. வேம்பு	எம். என். ராஜம், டி. ஆர். ராமச்சந்திரன், தங்கவேலு, டி. கே. பாலசந்தர், என். என். கண்ணப்பா முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.
மனைவியின் மகன் (ஜம்பு)	[த]	எம். வி. ராமன்	வைஜயந்திமாலா, ராஜம்மா, கண்ணப்பா, சஹஸ்ரநாமம்...	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
லாஜ் (ஜம்பு)	[ஹி]	,,	வைஜயந்திமாலா. கரன் திவான் கிஷோர் முதலியோர்	,,
அர்த்தாங்கி (ராகினி பிலிம்ஸ்)	[தெ]	பி. புல்லய்யா	சாவித்திரி, நாகேஸ்வரராவ் முதலியோர்	பாதிக்கு மேல் வளர்ந்திருக்கிறது
ரேசுகா (பிரதிபா)	[தெ]	,,	அஞ்சலிதேவி, என். டி. ராமராவ்	படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெறுகிறது.
முதல் தேதி (பத்மினி பிக்சர்ஸ்)	[த]	ப. நீலகண்டன்	அஞ்சலிதேவி, சிவாஜி கணேசன், கிருஷ்ணன்-மதுரம் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
,, ,,	[க]	,,	எம். வி. ராஜம்மா, பி. ஆர். பந்துலு, முதலியோர்	,,
கன்யா சுல்கம் (விநோதா)	[தெ]	பி. புல்லய்யா	சாவித்திரி, என். டி. ராமராவ்	பாதிக்குமேல் வளர்ந்திருக்கிறது
தோழன் (ஏ.டி.எம்.)	[த]	பி. வி. கிருஷ்ணன்	நரசிம்மபாரதி, மனோஹர், மாதுரி தேவி, விமலா முதலியோர்	துரித முன்னேற்றம்
பால சன்யாசம் (ஜோயா-ரேவதி)	[தெ]	பி. சுப்பாராவ்	ஜி. வரலக்ஷ்மி, கிரிஜா, சுரபி பால சரஸ்வதி, ரேலங்கி, ஜக்கய்யா முதலியோர்	,,

படப்பெயர் (தயாரிப்போர்)	டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
ஸ்ரீ ஜகந்நாத மகாத்யம் [தெ] (யூனியன் பிக்சர்ஸ்)	?	?	ஓரியாவிலிருந்து தெலுங்கில் 'டப்' செய்யப்படுகிறது
கோமதியின் காதலன் [த] (டி. ஆர். ஆர். புரொடக்ஷன்ஸ்)	ப. நீலகண்டன்	சாவித்திரி, டி. ஆர். ராமச்சந்திரன், சாரங்கபாணி, தங்கவேலு முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
புரொடக்ஷன்-1 [த] (மகேஸ்வரி பிக்சர்ஸ்)	டி. ஜானகிராம்	எம். வி. ராஜம்மா, எம். கே. ராதா முதலியோர்	படப்பிடிப்பு நடைபெறுகிறது

நெப்டியூன்

படப்பெயர் (தயாரிப்போர்)	டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
? (ஜுபிடர்) [தெ]	தீக்ஷித்	அஞ்சலி தேவி, ராஜசுலோசனா, ஜமுனா, என். டி. ராமராவ், நாகேந்திர ராவ் முதலியோர்	தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெறுகிறது
நயா ஆத்மி ,, [ஹி]	,,	அஞ்சலிதேவி, கோப் முதலியோர்	,,
வெறும் பேச்சல்ல [த] (பிரின்ஸிபல் பிக்சர்ஸ்)	ஜோஸப் பள்ளிபாட்	பத்மினி, எஸ். வரலக்ஷ்மி, பாலய்யா, சுதர்சன் முதலியோர்	துரித முன்னேற்றம்
அனார்கலி [தெ] (அஞ்சலி பிக்சர்ஸ்)	வேதாந்தம் ராகவய்யா	அஞ்சலி தேவி, கன்னாம்பா, நாகய்யா, நாகேஸ்வரராவ், ரங்கராவ் முதலியோர்	பிப்ரவரி வெளியீடு
? [சி] (சாந்தி கலா நிகேதன்)	சாந்திகுமார்	சிங்கள நடிகர்கள்	தொடர்ந்து சுடப்படுகிறது
மாமன் மகள் [த] (மணி புரொடக்ஷன்ஸ்)	ஆர். எஸ். மணி	?	படப்பிடிப்பு விரைவில் ஆரம்பிக்கப்படும்
சுராங்கிணி [சி] (சிலோன் தியேட்டர்ஸ்)	கே. வேம்பு	எட்டி ஜூனியர், சாந்தி குணதுங்கா முதலியோர்	ஜனவரி வெளியீடு

பிலிம் சென்டர்

புரொடக்ஷன் நெ. 1 (பிலிம் சென்டர்)	[த]	கே. வேம்பு	?	ஆக்க வேலைகள் நடைபெற்று வருகின்றன
மேனகா (கஸ்தூரி பிலிம்ஸ்)	[த]	வி. ஸி. சுப்பராமன்	லலிதா, ராகினி, கே. ஆர். ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன் முதலியோர்	ஜனவரி வெளியீடு
புரொடக்ஷன்–1 (திரிவேணி பிக்சர்ஸ்)	[த]	என். கிருஷ்ணசாமி	மாதுரிதேவி, குமுதினி, சரளா, மனோஹர், சஹஸ்ரநாமம், கே. ராமசாமி முதலியோர்	கால் பாகம் பூர்த்தியாகியிருக்கிறது
நடிக மணி (ஜெயராஜ் புரொடக்ஷன்ஸ்)	[த]	ஸி. வி. ராஜு	வித்யாவதி, கல்யாண் குமார் கணபதி பட் முதலியோர்	துரித முன்னேற்றம்
பக்த மல்லிகார்ஜுனு (ஜெயராஜ்)	[க]	ஸி. வி. ராஜு	பண்டரிபாய், அமர்நாத்	படப்பிடிப்பு நடந்து வருகிறது
கந்தர்வ கன்யா (மகாத்மா பிக்சர்ஸ்)	[க]	சங்கர் சிங்	ஹரிணி, ரேவதி முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
நல்லவன் ஸன் ரைஸ் புரொடக்ஷன்ஸ்	[த]	திருவேங்கடம்	பீ. கே. சரஸ்வதி, ராஜசுலோசனா, மனோஹர், நம்பியார் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது

ரோஹிணி

கிரகலக்ஷ்மி (ரோஹிணி)	[த]	எச். எம். ரெட்டி	அஞ்சலிதேவி, மீனாக்ஷி, எம். கே. ராதா முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
ஏழையின் ஆஸ்தி (ரோஹிணி)	[த]	டி. எல். ராமசந்தர்	சௌகார் ஜானகி, சந்திரகுமாரி, ராஜஸுலா முதலியோர்	திரையிடத் தயார்
லெகஸி (ரோஹிணி)	[தெ]	டி. எல். ராமசந்தர்	சௌகார் ஜானகி, சந்திரகுமாரி, ராஜஸுலா முதலியோர்	திரையிடத் தயார்
சாந்த சக்குபாய் (பாண்டுரங்கா பிக்சர்ஸ்)	[க]	கிருஷ்ணன்–பஞ்சு	பண்டரிபாய், மைனாவதி முதலியோர்	துரித முன்னேற்றம்

89682 சென்னை 600 008
3211.N4:P N55-155

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி

ஸ்டார் கம்பைன்ஸ்

ஜெய் அலக் நிரஞ்சன் (ஸ்டார் கம்பைன்ஸ்)	[க]	பட்டாபி ராமராவ்	லக்ஷ்மி, பாலகிருஷ்ண முதலியோர்	வளர்ந்து வருகிறது
பாசவலே (சௌந்தர்யா பிக்சர்ஸ்)	[த]	பாஸ்கர்	கிருஷ்ணகுமாரி, டி.ஆர். ராதாராணி, சாரங்கபாணி முதலியோர்	பாதியில் நிற்கிறது
பிரேம ஜாலமு ,,	[தெ]	,,	,,	,,

சியாமளா

நம் குழந்தை (விண்ட்ஸர்)	[த]	கே. எஸ். கோபால கிருஷ்ணன்	எஸ். வரலக்ஷ்மி, குமாரிலக்ஷ்மி, மனோஹர், ஏ. பி. நாகராஜன், நாகய்யா முதலியோர்	சில காட்சிகள் படமாக்கப்படுகின்றன
படித்த பெண் (சியாமளா)	[த]	எம். திருவேங்கடம்	பி. கே. சரஸ்வதி, என். என். கண்ணப்பா. எம். என். நம்பியார்	இரண்டு 'ஸெட்'டுகள் முடிந்திருக்கின்றன.
அறிஞன்		?	?	மீண்டும் ஆரம்பிக்கப்படும்
சகோதரி (சியாமளா)	[த]	ஆர். பிரகாஷ்	கண்ணம்பா, விஸ்வநாதன் முதலியோர்	பாதியில் நிற்கிறது
,, ,,	[தெ]	,,	,,	,,

வீனஸ் (மீர்ஜாபூர்) ஸ்டூடியோ

தோழன் (ஏ. டி. எம். புரொடக்ஷன்ஸ்)	[த]	பி. வி. கிருஷ்ணன்	மாதுரிதேவி, விமலா, மனோஹர், நரசிம்ம பாரதி முதலியோர்	தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெறுகிறது.

பிரகாஷ்

மேலு கொலுபு (ஆனந்தா புரொடக்ஷன்ஸ்)	[தெ]	பிரகாஷ்ராவ்	ஜி. வரலக்ஷ்மி, ஸ்ரீராம், ஜமுனா, நம்பியார் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
மறுமலர்ச்சி ,,	[த]	,,	,,	,,
அந்தே காவலி (பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்)	[தெ]	,,	ஜி. வரலக்ஷ்மி, ஸ்ரீராம்	பாதி வளர்ந்திருக்கிறது.
குலேபகாவலி (ஆர். ஆர். பிக்சர்ஸ்)	[த]	ராமண்ணா	ஜி. வரலக்ஷ்மி, எம். ஜி. ராமசந்தர் முதலியோர்	தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெறுகிறது
பூம்புகார் (சிவகாமி பிக்சர்ஸ்)	[த]	ராமண்ணா	?	ஆரம்ப பூஜை நடைபெற்றிருக்கிறது
சாயா (பிரமோதரா & பில்ம்ஸ்)	[தெ]	ஜோஷி	ஜி. வரலக்ஷ்மி, ஜக்கய்யா முதலியோர்	இருபது சத வீதம் வளர்ந்திருக்கிறது

பரணி

காவேரி (கிருஷ்ணா பிக்சர்ஸ்)	[த]	யோகானந்த்	லலிதா, பத்மினி, ராகினி, சிவாஜி கணேசன் முதலியோர்	ஜனவரி வெளியீடு
விஜய கௌரி (கிருஷ்ணா பிக்சர்ஸ்)	[தெ]	,,	லலிதா, பத்மினி, ராகினி, என். டி. ராமராவ் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
விப்ரநாராயணா (பரணி)	[த]	என். ராமகிருஷ்ணா	பானுமதி முதலியோர்	ஜனவரியில் துவக்கப்படும்

நரசு

புரொடக்ஷன்-2 (நரசு)	[த]	கே. வேம்பு	ஜி. வரலக்ஷ்மி, எம். கே. ராதா, துரைசாமி, டி. பாலசுப்ரமண்யம் மாஸ்டர் பாஜி முதலியோர்	துரிதமாகத் தயாராகிறது

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
புரொடக்ஷன்-10 (ஸாரதி பில்ம்ஸ்)	[தெ]	சாணக்யா	சௌகார் ஜானகி, நாகேஸ்வரராவ் முதலியோர்	துரித முன்னேற்றம்
கணவனே கண் கண்ட தெய்வம் (நாராயணன் கம்பெனி)	[த]	டி. ஆர். ரகுநாத்	அஞ்சலிதேவி, நாகய்யா, ஜெமினி கணேசன் முதலியோர்	தினசரி படப்பிடிப்பு நடைபெறுகிறது
கன்யாசுல்கம்(விநோதா புரொடக்ஷன்ஸ்)	[தெ]	பி. புல்லய்யா	சாவித்திரி, என். டி. ராமராவ், ஸி. எஸ். ஆர். முதலியோர்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது
சதாசுலங் (பில்ம் சிலோன்)	[சி]	சோமசேகர்	ப்ளோரிடா, பிரேம் ஜயந்த் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
லாஜ் (ஜம்பு புரொடக்ஷன்ஸ்)	[ஹி]	எம். வி. ராமன்	வைஜயந்திமாலா, கரன்திவான் முதலியோர்	துரித முன்னேற்றம்

சிட்டடெல்

மதபேதயா (பி. ஏ. டபிள்யூ. புரொடக்ஷன்ஸ்)	[சி]	பி. ஏ. டபிள்யூ. ஜெயமனே	ருக்மிணிதேவி, எட்டிஜெயமனே முதலியோர்	முக்கால் பாகம் முடிந்திருக்கிறது
புரொடக்ஷன்-1 (ஜெயமனே ஸினி டோன்ஸ்)	[சி]	?	ருக்மிணிதேவி, எட்டிஜெயமனே முதலியோர்	விரைவில் ஆரம்பமாகவிருக்கிறது
புரொடக்ஷன்-1 (ஜெயஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ்)	[த]	முருகேஷ்	பி.கே. சரஸ்வதி, மனோஹர், டி. எஸ். பாலய்யா முதலியோர்	மூன்றிலொரு பகுதி வளர்ந்திருக்கிறது
திருநாள் (மனோசக்தி பில்ம்ஸ்)	[த]	பாண்டி சுப்புதாஸன்	காந்தன் முதலியோர்	படப்பிடிப்பு நடந்து வருகிறது

நியூடோன்

எல்லாம் இன்ப மயம் (பி. என். டி. பிலிம்ஸ்)	[த]	ஜித்தன் பானர்ஜி	ராஜசுலோசனா, ராகினி, டி. ஆர். ராமச்சந்திரன், டி. கே. ராமச்சந்திரன் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
உலகம் பலவிதம் (நேஷனல் புரொடக்ஷன்ஸ்)	[த]	முருகேஷ்	லலிதா, லக்ஷ்மிபிரபா, எம். சரோஜா, சிவாஜி கணேசன், டி.கே. ராமச்சந்திரன் முதலியோர்	திரையிடத் தயார்
ராஜா ராணி (நேஷனல் புரொடக்ஷன்ஸ்)	[த]	பீம்சிங்	பத்மினி, சிவாஜி கணேசன்	அவ்வப்போது படப்பிடிப்பு நடைபெறுகிறது.
புது வாழ்வு (சர்வோதயா பிக்சர்ஸ்)	[த]	பாகவதர்	மாதுரிதேவி, லலிதா, எம். கே. தியாகராஜ பாகவதர், கிருஷ்ணன்-மதுரம் முதயோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது.
ஆவதும் பெண்ணாலே (விக்டரி பிக்சர்ஸ்)	[த]	டி. பி. சுந்தரம் & எம். ஆர். விட்டல்	குமாரி ருக்மிணி, வி. நாகய்யா முதலியோர்	படப்பிடிப்பு நடந்து வருகிறது
நாடகமே உலகம் (பராசக்தி பிக்சர்ஸ்)		எஸ். டி. எஸ். யோகியார்	எஸ், வரலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர்	மார்ச் ரிலீஸ்
? (உமா புரொடக்ஷன்ஸ்	[த]	?	?	ஆக்க வேலை நடைபெற்று வருகிறது
செந்தாமரை (மதராஸ் பிக்சர்ஸ்)		பீம்சிங்	லலிதா-பத்மினி, கே. ஆர். ராமசாமி, சிவாஜி கணேசன் முதலியோர்	துரித முன்னேற்றம்
குடும்ப விளக்கு (நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸ்)	[த]	எப். நாகூர்	ராஜம்மா, ஜமுனா, நரசிம்ம பாரதி, கிருஷ்ணன்-மதுரம் முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது

செண்டிரல்

பெண்ணரசி (எம். ஏ. வி. பிக்சர்ஸ்)	[த]	கே. சோமு	கண்ணாம்பா, ராஜசுலோசனா, சூர்யகலா, ஏ. பி. நாகராஜன், நம்பியார் முதலியோர்	பாதிக்குமேல் வளர்ந்துவிட்டது

படப்பெயர் (தயாரிப்போர்)		டைரக்டர்	பிரதம நடிகர்கள்	அபிவிருத்தி
டவுன் பஸ் (எம். ஏ. வி.)	[த]	,,	பி. எஸ். சரோஜா, என். என். கண்ணப்பா முதலியோர்	சில ஆயிரம் அடிகள் வளர்ந்திருக்கிறது
முல்லைவனம் (அரவிந்த் பிக்சர்ஸ்)	[த]	வி. கிருஷ்ணன்	குமாரி ருக்மிணி, ஸ்ரீராம், வீரப்பா, எஸ். ஏ. நடராஜன் முதலியோர்	முக்கால் பாகம் வளர்ந்திருக்கிறது
நல்ல தங்கை (பார்வேர்ட் ஆர்ட்)	[த]	எஸ். ஏ. நடராஜன்	மாதுரிதேவி, ராஜசுலோசனா, பாலய்யா, நம்பியார், எஸ். ஏ. நடராஜன், ஏ. கருணாநிதி முதலியோர்	ஜனவரி வெளியீடு
புரொடக்ஷன்-A (ஸ்ரீ யூனிடி)	[த]	சந்தர்	கிரிஜா, கிருஷ்ணபாய், லக்ஷ்மி, பி. எஸ். கோவிந்தன், மாலி முதலியோர்	படப்பிடிப்பு நடந்து வருகிறது
புரொடக்ஷன்-1 (ஸ்ரீமதி பிக்சர்ஸ்)	[த]	ஜி. ஆர். ராவ்	மாதுரிதேவி, டி. ஆர். ராமச்சந்திரன் ஏ. பி. நாகராஜன் முதலியோர்	தொடர்ந்து படப்பிடிப்பு நடந்து வருகிறது

மாடர்ன் தியேட்டர்ஸ்

கதாநாயகி (மாடர்ன்)	[த]	கே. ராம்னாத்	பத்மினி, எம். என். ராஜம், டி. ஆர். ராமச்சந்திரன், டி. கே. ராமச்சந்திரன், தங்கவேலு முதலியோர்	ஜனவரி வெளியீடு
மகேஸ்வரி ,,	[த]	ஏ. எஸ். ஏ. சாமி	அஞ்சலிதேவி, எம். என் ராஜம், ஜெமினி கணேசன் முதலியோர்	ஆக்க வேலைகள் நடைபெறுகின்றன

பக்ஷிராஜா

ஆஜாத் (பக்ஷிராஜா]	[ஹி]	எஸ். எம். எஸ். நாயுடு	மீனகுமாரி, அசலா சச்தேவ், திலீப் குமார், ஓம் பிரகாஷ் முதலியோர்	பிப்ரவரியில் திரையிடப்படும்
மரகதம் ,,	[த]	ஸ்ரீராமுலு நாயுடு		அறிவிக்கப்பட்டிருக்கிறது.
,, ,,	[தெ]	,,		

நவஜோதி (மைசூர்)

வாடாமலர் (மல்லிகா புரொடக்ஷன்ஸ்)	[த, தெ]	சி. எஸ். எம். நாயுடு	?	சில ஆயிரம் அடிகள் வளர்ந்திருக்கிறது

மெர்ரிலாண்ட்

நியூஸ் பேப்பர் பாய் (ஆதர்ஸ கலா மந்திர்)	[ம]	பி. ஆர். தாஸ்	ஓமனு, பங்கஜம், கோமளம் வீரராகவன் நாயர் முதலியோர்	பிப்ரவரி ரிலீஸ்
புரொடக்ஷன்-3 (நீலா புரொடக்ஷன்ஸ்)	[தெ]	மித்ரதாஸ்	பிரேம் நஸீர், குமாரி, நானுகுட்டன், பங்கஜவல்லி, சேதுலக்ஷ்மி முதலியோர்	ஜனவரி வெளியீடு
பாக்யோதயம் (கைலாஸ் பிக்சர்ஸ்)	[ம]	வேலப்பன் நாயர்	பங்கஜவல்லி, சுலோசனு, திக்குரிசி முதலியோர்	,,
இருளில் நின்னு (மூவிரேஸ்)	[ம]	சங்கரன் நாயர்	குமாரி தங்கம். பிரேம் நஸீர், முத்தய்யா, முதுகுளம் முதலியோர்	சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டது

பிரிமியர் (மைசூர்)

ஸ்ரீ ரத்ன (லோகேஸ்வரி பிக்சர்ஸ்)	[க]	கே. சுப்ரமண்யம்	வித்யாவதி, சந்தியா கௌசிக், அஸ்வதநாராயண், கிருஷ்ணன் மதுரம் முதலியோர்	பாதிக்குமேல் வளந்திருக்கிறது

பம்பாய் படங்கள்

வன்ரதம் (ஸன்னி-தௌஷத்)	[த]	ஸன்னி	நிம்மி, சூர்யகுமாரி, முதலியோர்	முடிவடையும் தறுவாயிலிருக்கிறது
மொகல்-கி-ஆஜம் (ஸ்டர்லிங் பில்ம் கார்ப்பொரேஷன்)	[க]	கே. ஆஸிப்	மதுபாலா, திலீப்குமார், பிருதிவிராஜ்	படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது

ஈஸ்டர்ன்ஸ் ஆர்ட் 'நல்ல
பிள்ளை'யில் இரு காட்சிகள்

எதிர்பாராதது

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவும் ஏமாற்றமும்

கோபு கடன் தொல்லை காரணமாக வீட்டை விட்டே ஓடிவிடுகிருன். நளினி மனம் புழுங்கித் துடிக்கிருள். சுந்தர் மேல் படிப்புக்காக அமெரிக்கா போகிருன். அவன் பிரிவில் ஏமாற்ற மடைந்த சுமதிக்கும் மனதில் வருத் தமே ஏற்படுகிறது. "சுமதி! இதன் மூலம் நான் எப்போதும் உண்மை அன்போடு உன் அருகிலேயே இருப் பேன். பிரிவு நம் காதலை வளர்க்கட் டும்" என்று தன் போட்டோவின் பின்னுல் எழுதிக் கொடுத்து விட்டுச் செல்கிருன் சுந்தர்.

காட்சி 6

பேரிடியும் மன உடைப்பும்

சுந்தர் சென்ற விமானம் வட இந்தி யாவில் காட்டில் விழுந்து நொறுங்கி விடுகிறது. அதில் பிரயாணம் செய்த வர்கள் யாவரும் மரணமடைந்ததாகச் செய்தி வருகிறது. அதைப் பத்திரிகை யில் படித்த சுமதி, தயாபரர் இரு வரது குடும்பமும் துக்கத்தால் துடிக் கிறது. சுமதி படுத்து விம்மித் துடிக் கும் போது, மனதை கல்லாக்கிக் கொண்ட அவள் தந்தை தேற்று கிருர்.

கிழ : *சுமதி! இப்படி ஒண்ணுமே சாப்பிடாமே அழுதுகிட்டே யிருந்தா எப்படியம்மா? அவங்கவங்க தலை விதிப்படித்தான் நடக்கும். அதுக்கு யார் வருத்தப்பட்டு என்ன பிரயோ சனம்? நான் சொல்றதைக் கேளம்மா.*

சும : *துக்கத்தை அடக்கிஞ என் நெஞ்சுதாம்ப்பா வலிக்கும். அழுது தீர்த்தாலொழிய என் மனம் ஆறுத லடையாது அப்பா. என் எதிர்கால வாழ்வைப் பற்றி எவ்வளவோ எண் ணங்கள் எண்ணியிருந்தேன். அவ் வளவும் அழிஞ்சு போச்சப்பா. இப் படி நடக்கும்னு நான் கனவிலே கூட நினைக்கல்லேப்பா.*

கிழ : *அதுக்கு என்னம்மா செய் யறது? நம்பளோடெ கொஞ்ச காலம் பழகினதுக்கே நம்மாலே தாங்க முடி யல்லியே, உயிருக்குயிரா நேசித்த ஒரே மகன் போனதை நினைச்சி, அவ னுடைய அப்பா என்னமா துடிக் கிருரோ?*

தயாபரர் தன் வீடு, நிலமெல்லாம் விற்றுவிட்டு முருகன் சிலையுடன் வெளிக் கிளம்பி திருச்சி வந்தடை கிருர்.

காட்சி 7

அன்புருவான ஆஷா

மற்றவர்கள் எதிர்பார்த்தபடி சுந் தர் மரணமடையவில்லை. காட்டிலே வசிக்கும் வேடர் குலத்தவர்கள் அவ னைக் காப்பாற்றுகிருர்கள். ஆனுல் அவன் இழந்த பார்வையை மீட்க அவர்களால் முடியவில்லை. ஆஷா வேடர் தலைவனின் மகள். அன்பே உருவான அச்சிறுமியின் பணிவிடை யினுல் சுந்தரின் மனம் ஓரளவு சாந்தி காணுகிறது.

விருந்தோம்பல்

கோபு வீட்டை விட்டு ஓடிவிட்ட தால் நளினியும் கந்தசாமியும் சுமதியி டம் வருகின்றனர். சுமதி அன்போடு வரவேற்கிருள்.

சும : *அண்ணி! எப்ப வந்திங்க அண்ணி? சௌக்கியமா? அண்ணு எங்கே? ... என்ன அண்ணி?... கந்த சாமி, நீயாவது சொல்லேன்.*

நளி : *சுமதி! என்னை மன்னிப் பாயா? நல்ல குடும்பத்திலே நானெரு புல்லுருவியா வந்து சேர்ந் துட்டேன்.*

சும : *ஐயோ, அப்படிச் சொல்லா திங்க அண்ணி! வாங்க, உட்காருங்க.*

நளி : *சுமதி! நானும் உன் அண் ணுவும் ஆரம்பத்தில் ஆனந்தமாக வாழ்ந்தோம். நாகரிகம் எங்களை நாசமாக்கிட்டுது. அவர் சகவாச தோஷத்திஞலே சூதாடினுர், நான் சுயநலக்காரியானேன். கண்ணை மூடிக்கிட்டு கடன் வாங்கினுர். கட னைத் திருப்பிக் கொடுக்கற நிர்ப்பந் தம் ஏற்பட்ட போது ரெண்டு பேரும் திடுக்கிட்டோம். ஆனு கடனைக் கட்ட வழியில்லே. இந்த அவமானம் தாங்க மாட்டாமே என்னை அனுதையா*

விட்டுட்டு அவர் தலைமறைவா போயிட்டாரு.

சும : ஹா...!

அப்போது அதைக் கேட்டபடி வருகிறார் சுமதியின் தந்தை.

கிழ : வெட்கம் கெட்டவளே!

நளி : மாமா...

கிழ : மான மிருந்தா இந்த வாசற்படியை மிதித்திருக்கக் கூடாதே நீ!

சும : அப்பா...

கிழ : நல்லா இருந்த என் மகனை நாசமாக்கின சண்டாளி! நாகரீகம்னு சொல்லிகிட்டு நாடோடியா திரிஞ்ச நீ ஒரு பெண்ணா? புருஷனை சபலத்திற்கு ஆளாக்கி, அவனைச் சந்தி சிரிக்க வைச்சுட்டு அபலைன்னு சொல்லிகிட்டு இங்கே வேறே வந்திருக்கியா, சதிகாரி! நீ கால் வைக்கிற இடம் எதுவுமே உருப்படாது போ வெளியே!

சும : என்னப்பா இது?

கிழ : பேசாதேயம்மா...பெண்மையை மறந்து திரிந்த இவளுக்கு இங்கே இடம் கிடையாது.

சும : அப்பா...அனுபவத்தில் பெரியவரான உங்களுக்கு நான் என்ன சொல்வது? வேதாந்தம் பேசுகிறீர்கள். மற்றவர் வேதனையை உங்களால் உணர முடியவில்லை. அண்ணிக்கு இந்த வீட்டிலே இடம் இல்லையென்றால் வேறு எங்கேயப்பா போவது?

கிழ : சுமதி...!

சும : அப்பா! அண்ணி ஆயிரம் தவறுகள் செய்திருந்தாலும் ஆதரவு நாடி நம்மிடம் வந்திருக்கும்போது மனிதத் தன்மையோடு நடக்க வேண்டியதுதானேப்பா முறை? அடைக்கலம் கிடைக்காமல் அவர்கள் அனாதையாகத் தெருவில் நின்றால் அதனால் ஏற்படும் பலா பலன்கள் நம்மையும்தானேப்பா பாதிக்கும்? அண்ணிக்கு அவமானம் ஏற்பட்டால் அது நமக்கு ஏற்பட்டது போலத் தானேப்பா?

கிழ : சுமதி...! நீ சொல்றதை...

சும : கேட்க மாட்டீங்களா அப்பா! அவர்களும் பெண், நானும் பெண். அந்த இதயத்தில் ஏற்படும் ஏமாற்றமும் வேதனையும் எனக்குமுண்டு. அண்ணிக்கு இந்த வீட்டில் இடமில்லையென்றால், நானாவது அவர்களுக்குத் துணையாகப் போகிறேனப்பா.

நளி : சுமதி...!

சும : வாங்கண்ணி போகலாம்.

கிழ : சுமதி...சுமதி...உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது. எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும். மகளே, நீ போகாதே. அவள் இங்கேயே இருக்கட்டும். உன் விருப்பத்துக்குக் குறுக்கே இனி நான் நிற்கவே மாட்டேன். இது சத்தியம்.

சும : (அவர் காலைப்பிடித்து) அப்பா! அப்பா! ஆயிரம் ஜன்மங்களிலேயும் நான் உங்களுக்கு மகளாகப் பிறக்க வேண்டுமப்பா—அண்ணி, வாங்க. கந்தசாமி! நீயும் இங்கே தான் இருக்கணும்.

கந் : சரி...

வாக்குறுதியும் வம்பும்

நளினி தோட்டத்தில் தண்ணீர் மொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறாள். சுமதி வந்து தடுக்கிறாள்.

சும : என்ன அண்ணி! இது? நாள் பூரா ஓயாமெ வேலை செய்தா உடம்பு என்னத்துக்காகும்?

நளி : ஏதாவது வேலை செய்துகிட்டேயிருந்தாத்தான் என் வேதனையை மறக்க முடியுது சுமதி!

சும : அண்ணி! நடந்துபோனதை நினைச்சு நீங்க இப்படி உருகிப் போயிகிட்டேயிருந்தா என் அண்ணனுக்கு நான்தானே அண்ணி ஒரு நாளைக்குப் பதில் சொல்லியாகணும்?

நளி : சுமதி! மறுபடியும் அவரை நான் பார்க்க முடியுமா? அந்த பாக்கியம் எனக்குக் கிடைக்குமா?

சும : ஏன் கிடைக்காது? நம்ப காலம் இப்படியே இருக்காது அண்ணி. என்னிக்காவது ஒரு நாள் கண்டிப்பா அண்ண வருவார்னு எனக்குத் தோணுது.

நளி : ஒரு நாள்...! அவர் பட்ட கடன் தீர்ந்தாலொழிய அந்த நாள் என் வாழ்க்கையில் வருமா சுமதி?

சும : கவலைப்படாதிங்க அண்ணி! உங்களுக்காகவும் என் அண்ணனுக்காகவும் என்னாலே ஏதாவது நல்லது செய்ய முடியுமானா அதுக்காக என் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்யத் தயாராயிருக்கேன் அண்ணி.

நளி : சுமதி! தெய்வம் கோயில்களில் மட்டும் இல்லை. உன்னைப் போல இருக்கிறவங்க உள்ளத்திலே தாம்மா இருக்கு.

அதே சமயம், தயாபரர் மனதைக் கலக்கி அவரை மணத்திற்குச் சம்மதிக்கச் செய்த தரகன் சந்தானம் சுமதியைப் பெண் கேட்க வருகிறான். கிழவனுக்குப் பெண் கேட்கும் அவனை கந்தசாமி அடிக்கப் போகிறார். அப்போது சுமதியும் நளினியும் அங்கு பிரவேசிக்கின்றனர். அவள் தான் அண்ணிக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வம்பில் மாட்டிக்கொள்ளத் தீர்மானிக்கிறாள். அவள் கிழவனை மணக்கச் சம்மதித்ததைக் கண்டு தந்தை திடுக்கிடுகிறார்.

கிழ : என்னம்மா இது, என்னைச் சோதிக்கிறியா? எதுக்காக இந்த விபரீதமான முடிவு? உங்கப்பாவாலே உன்னைக் காப்பாத்த முடியாதுன்னு நினைச்சுட்டியா? சொல்லும்மா...நான் பணத்ததாசை பிடிச்சவங்கறது உன் எண்ணமா? இதோ பாரும்மா, என் உடம்பு தேயற வரையிலே உழைச்சு உன்னைக் காப்பாத்தறேம்மா.

சும : அப்பா, மன்னிக்கணும். கல்யாணம் என் சொந்த விஷயம்னு நீங்களே சொல்லியிருக்கிங்க. மானசிகமா ஒருத்தரைக் காதலிச்சேன். அவர் மறைந்து விட்டார். அவரோட என் காதலும் மண்ணாகி விட்டது. வேறு எந்த வாலிபனையும் நான் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் என்னால் அவனைக் காதலிக்க முடியாது. அவருக்குச் சேவைதான் செய்ய முடியும். அந்த சேவை அனாதையான ஒரு வயோதிகருக்குச் செய்யறதிலே தானப்பா நான் ஆத்மதிருப்தி அடைய முடியும். என் முடிவை யாரும் மாத்த வேண்டாம். என் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்கமாட்டேன்னு சத்தியம் செய்திங்களேப்பா, அதை மறந்துட்டிங்களாப்பா?

கிழ : சுமதி...சுமதி...உன் இஷ்டம்போல் செய். நான் தடுக்க மாட்டேன். நான் தடுக்கவே மாட்டேன்.

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
மேலகோபுர வீதி :: மதுரை.

காட்சி 8

மணமும் மரணமும்

தயாபரர் சுமதியை மனைவியாக்கிக் கொண்டதும் அவள் தந்தை மரணமடைந்து விடுகிறார். அவள் துடிக்கிறாள். அவளைத் தேற்றுகிறாள் நளினி. அவள் செய்தது தவறு என்பதையும் எடுத்துக் கூறுகிறாள்.

நளி : *நீ செய்தது தவறு சுமதி; மாற்றமுடியாத தவறு. கெட்டழிந்த உன் குடும்பத்திற்காக உன் பருவத்தைப் பலியிட்டு விட்டாயேம்மா, நீ ஏன் இப்படிச் செய்தாய்? என் கணவனின் கடனை அடைப்பதற்காக உன் எதிர்காலத்தையே நாசமாக்கிக் கொண்டாயே. உன் அழகையும் ஆனந்தத்தையும் தியாகத் தீயிலிட்டு சாம்பலாக்கி விட்டாயேம்மா...*

சும : *அண்ணி! ஏன் விம்மித் துடிக்கிறீர்கள்? காதலில் தோல்வியடைந்த நான் என் கடமையில் வெற்றிபெற்று விட்டேன். ஆசையோடு அணைத்து வளர்த்த என் அண்ணனின் கண்களில் வழியும் கண்ணீரைத் துடைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதிலே நான் திருப்தி காண்கிறேன். அண்ணி!*

கந்தசாமி சென்று கடன்களை அடைத்துவிட்டு கோபுவைக் கூட்டி வருகிறான்.

தவறும் பிராயச்சித்தமும்

நளினி சுமதியை படுக்கையறைக்கு அனுப்புகிறாள்...... அழுதபடி உள்ளே போகிறாள் சுமதி. தயாபரர் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறார். அவள் விம்முவதைக் கண்டு ஆறுதல் கூறுகிறார். அவள் 'அப்பா' என்று கூவி அவர் கால்களில் விழுந்து விடுகிறாள். அவர் குழப்பமடைந்து தனியே செல்லும் போது சுந்தரின் போட்டோவைக் கண்டு திடுக்கிட்டு எடுத்துப் படிக்கிறார். அதன் மூலம் தன் மகன் சுந்தரே சுமதியின் காதலன் என்பதையறிந்து மனம் குமுறித் துடித்து முருகனிடம் ஓடுகிறார்.

தயா : *பிரபூ... பிரபூ... ஏன் என்னை வெறியனாகப் படைத்தாய்? ஏன் என்னைக் கயவனாக்கி விட்டாய்? ஒரு பெண்ணின் வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக்கி விட்ட எனக்குத் தண்டனையே கிடையாதா? என் குழந்தையையே மனைவி யாக்கிக் கொண்டேனே, எப்படி பிரபு இந்த உலகத்தில் தருமம் தழைக்க முடியும்? என்னைப்போல நிலை கெட்ட மனிதர்கள் இருக்கும்வரை, எப்படி பிரபூ நீதி செழிக்க முடியும்? ஐயோ, இந்த அநீதியைக் கண்டால் என் செல்வனின் ஆத்மா அலறித் துடிக்குமே. எங்கே பிரபூ எனக்குச் சாந்தி...? எங்கே... எங்கே சொல்லுங்கள்?*

தயாபரர் ஒரு முடிவுக்கு வந்து சுமதிக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறார். காலையில் சுமதியை எழுப்பிய நளினி கடிதத்தைக் கண்டு படிக்கிறாள்.

'என் செல்வச் சிறுமியே! நான் உனக்குத் துரோகம் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடு. உனக்கு மணமானதைக் கனவாக்கிக் கொள். நீ கல்யாணமாகாத கன்னி. உனக்குச் சர்வ சுதந்திரமும் அளிக்கிறேன். என் சொத்து முழுவதையும் உனக்கு எழுதி வைத்திருக்கிறேன். உன் விருப்பம் போல் அதை உபயோகப்படுத்திக் கொள். என்னை மறந்து விடு. அமைதிக்காக அலைகிறேன். என்னைத் தேட வேண்டாம்.

—தயாபரர்'

நளி : *சுமதி! உன்னை அனாதையாக்கிட்டுப் போயிட்டாரே. சுமதி... சுமதி...!*

கோபுவும் கந்தசாமியும் அப்போது அங்கு வருகிறார்கள்.

கோபு : *சுமதி.. சுமதி... சுமதீ...! எனக்காக உன் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டாய். சகோதரியின் மேல் ஒரு துளி பாசத்தையும் வைக்காத இந்தச் சண்டாளனுக்காகத்தானே உன் சந்தோஷத்தையெல்லாம் சாகடித்துக் கொண்டாய்? நன்றி மறந்த இந்த நயவஞ்சகனின் நல்வாழ்க்கைக்கு ஒரு கிழவனைப் பிடித்த மாசற்ற கரங்களா இவை... சுமதி... சுமதி... நான் பாவியம்மா..... நான் பாவி ..*

அவள் கைகளால் தன் தலையில் அடித்துக் கொள்கிறான்.

சும: ஐயோ அண்ணு ... உன் தங்கை உயிரோடு வாழ்வது உனக்குப் பிடிக்கவில்லையா?

கோபு: வாழ்வா? அதைத்தான் அடியோடு அழித்து விட்டேனே. உன் வாடிய வதனத்திலே இனி எப்போதம்மா வனப்பைக் காணப் போகிறேன்?.. நளினி! நீயும் ஒரு பெண்தானே? உனக்கிருக்கும் ஆசைகள்தானே என் தங்கைக்கும் இந்த வயதிலே இருக்கும்? இந்த அக்கிரமத்தை நீயாவது தடுத்திருக்கக் கூடாதா? எல்லோரும் சேர்ந்து என் பத்தரை மாற்றுத் தங்கத்தைப் பலி கொடுத்து விட்டீர்களே ... பலி கொடுத்து விட்டீர்களே ... எங்கேயம்மா உன் கணவர்? அவரையே கேட்கிறேன், இந்த அநீதி அடுக்குமா என்று? எங்கே அவர்...?

கடிதத்தை நளினி கோபுவிடம் கொடுக்கிருள்.

கோபு: சுமதி...

சும: அண்ணு! என்னல் அதிகமாகப் பேச முடியாது. எப்போ நான் ஒருவரை மணந்தேனே அவரே என் தெய்வம். என் இதயக் கோயிலிலே அவருடைய நினைவிலேயே நான் நிம்மதியாக வாழ்கிறேன். கவலைப்படாதே அண்ணு...

கோபு: சுமதி! நீ எப்படியோ உன் மனதை மாற்றிக் கொண்டாய்! நான் இனி என்னம்மா சொல்லப் போகிறேன்...?

காட்சி 9

அப்பனும் மகனும்

சுந்தர் வேடுவர் தலைவனிடமும் ஆஷாவிடமும் விடைபெற்று பிச்சையெடுத்தபடி ஊர் திரும்பத் தீர்மானித்து பண்டரிபுரம் வருகிருன். ஆண்டவனைத் தரிசனம் செய்து

பாலகிருஷ்ணன் - காசிரத்தினம்மாள்



திரு. M. P. சங்கரலிங்க நாடாரின் குமாரரும் பிரபல வர்த்தகருமான சிர. பாலகிருஷ்ணனுக்கும், திரு. M. P. ஷண்முக நாடார் குமாரத்தி சௌ. காசிரத்தினம்மாளுக்கும் நவம்பர் மாதம் 28-ம் தேதியன்று சென்னையில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு நமது ஆசிகள்.

அமைதி தேட விழைந்த தயாபரரும் அதே பண்டரிபுரம் வருகிருர். சுவாமி தரிசனம் ஆனதும் அங்கிருந்த ஏழை களுக்குப் பிச்சையிட்டு விட்டுத் திரும் புகிருர்.

சுந் : ஐயா...கண்ணு தெரியாத குருடனய்யா.

மகன் குரல் போலிருக்கவே திரும் பிய தயாபரர் மகனைக் கண்டு திடுக் கிட்டுத் தழுவுகிருர்.

தயா : சுந்தர்...சுந்தர்...!

சுந் : அப்பா...அப்பா ...!

தயா : என் செல்வமே, என் கண் மணி ! இது கனவில்லையேப்பா? சுந் தர், சுந்தர்....பாண்டுரங்கா....பாண் டுரங்கா ! நான் செய்த பாவத்துக்கு என்னை இப்படியா தண்டிக்க வேண் டும்? என் மகனை இப்படியா நான் பார்க்க வேண்டும்? சுந்தர் ! அந்தப் பாவிங்க விமான விபத்தில் நீ செத்து விட்டதாகப் பத்திரிகையிலே எழுதி யிருந்தாங்களேப்பா. செல்வமே,இது எப்படி நேர்ந்தது ?

சுந் : அப்பா ! நான் சாகவில்லை யப்பா. .விமான விபத்தில் சிக்கிய என்னைக் காட்டு மனிதர்கள் காப் பாற்றினுர்கள். காலனின் அணைப் பிலிருந்து விடுதலை அடைந்தேன் ; கண்களை இழந்து விட்டேன். உங் களைச் சந்திக்க வேண்டுமென்ற ஆர் வத்தோடு புறப்பட்டேன். ஆனுல் எதையும் சாதிக்க முடியாத நான், யாருக்கும் பாரமாக இருப்பதை விரும்பவில்லை. ஆகையினுலே தானப்பா என் மனதை மாற்றிக் கொண்டு பிச்சை எடுத்தாவது என் காலத்தைக் கழித்து விடலாமென்ற நோக்கத்தோடு இங்கு வந்தேன்.

தயா : ஹா...சுந்தர்...பெற்ற மன தின் பாசத்தை உணராமல் பேசுகிரு யேடா கண்ணே. நான் உயிரோடிருக் கும் போது நீ இப்படி யெல்லாம் பேசக்கூடாதப்பா...வா என் செல் வமே !

தன் விடுதிக்கு அழைத்துச் செல் கிருர். பரஸ்பரம் மனம் விட்டுப் பேசு கிருர்கள்.

தயா : மகனே ! உயிருக்குயிராக இருந்த நீயும் இறந்து விட்டதாகச் செய்தி வந்த பிறகு எனக்கு மதுரை யில வசிக்கப் பிரியமில்லை. வீடு வாசல் எல்லாவற்றையும் விற்றுவிட்டு செய்த பாவத்தைத் தொலைக்க யாத் திரை கிளம்பி விட்டேன். ஆண்டவன் புண்ணியத்தினுல் உன்னைப் பார்த் தேன் ; கபோதியாகப் பிச்சை எடுப் பதைப் பார்த்தேன்.

சுந் : அப்பா ! இனி நாம் எங்கே போவது ?

தயா : அதைப் பற்றித்தான் சுந்தர் யோசிக்கிறேன்!

சுந் : அப்பா! சென்னைக்கு போகலாமா ?

தயா : அங்கே எதுக்கு சுந்தர் ? எங்கேயாவது ஒரு புண்ணிய க்ஷேத்தி ரத்துக்குப் போய் நம் காலத்தைக் கழித்து விடலாமே!

சுந் : இல்லை அப்பா! சென்னைக் குப் போகலாம். அப்பா! இத்தனை நாட்கள் உங்களிடம் ஒரு முக்கிய விஷயத்தை மறைத்து வைத்தேன். அதற்காக நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் எவ்வளவு அன் போடு வரவேற்றீர்களோ அதைப் போல ஆசையோடு வரவேற்க அங்கே ஒரு பெண் காத்திருக்கா ளப்பா. அவள் பெயர் சுமதி! அவளும் நானும் இளமையின் வாயிலில் சந்தித் தோம். இதயம் கலந்தோம். ஒருவருக் காக மற்றவர் வாழ்வதாகச் சத்தியங் கள் செய்து கொண்டோம். இன்றும் அவள் எனக்காகக் காத்திருப்பா ளப்பா. இன்னும் எத்தனை வருடங் கள் வேண்டுமானுலும் காத்திருப் பாள். அப்பா! அங்கே என்னை அழைத்துப் போகிறீர்களா ?

தயா . இந்த நிலையில் அவள் உன்னை ஏற்றுக் கொள்வாளா சுந்தர்?

சுந் : அப்பா! என் சுமதியைப் பார்த்தால் நீங்கள் இப்படிச் சொல்ல மாட்டீர்கள். அவள் இதயத்தில் எனக்குமட்டும்தான் இடம் உண்டு. எனக்குப் பொன் வேண்டாம்; பொருள் வேண்டாம்; புகழ் வேண் டாம்; உலக இன்பங்கள் எதுவுமே வேண்டாம். உங்கள் ஆதரவும் சுமதி யின் அன்பும் தானப்பா எனக்குத் தேவை. அங்கே என்னை அழைத்துப்

போங்கள். அங்கே என்னை அழைத்துப் போங்கள்.

மனத்துடிப்பு மிகுதியால் தயாபரருக்கு நெஞ்சடைக்கிறது. அவர் மௌனம் சுந்தரைக் கலக்குகிறது.

சுந் : அப்பா! ஏனப்பா தயங்குகிறீர்கள்? அங்கே என்னை அழைத்துப்போக மாட்டீர்களா?

தயா : அழைத்துப் போகிறேன்.

சுந் : அப்பா...!

தயா : மகனே!

அணைத்துக் கொள்ளுகிறார்.

காட்சி 10

சந்திப்பும் ஏமாற்றமும்

ஊர் திரும்பியதும் சுந்தரின் விருப்ப்படி அவனை ஒரு ரிக்ஷாவிலேற்றி சுமதியின் வீட்டிற்கு அனுப்புகிறார் தயாபரர். அவனை நளினி விசாரிக்கிறாள்.

நளி : யார் நீங்க? யாரைப் பார்க்கணும்?

சுந் : நான் யாரையும் பார்க்க முடியாதம்மா! சுமதிகூட கொஞ்சம் பேசணும்.

அவனை மாடிப்படியிலிருந்து கவனித்த சுமதி திடுக்கிடுகிறாள். உலகமே சுழல்வது போலிருக்கிறது அவளுக்கு.

நளி : இப்போ அவங்களோடெ பேசமுடியாது.

மனமுடைந்த சுந்தர் திரும்புகிறான். சுமதி கீழே இறங்கி ஓடி வருகிறாள்.

சும : சுந்தர்...!

சுந் : சுமதி..!

சும : சுந்தர்...!

சுந் : சுமதி..!

சுந் : சுந்தர்! உங்களுக்கு... ...எங்கேயோ விமான விபத்துலே செத்துப் போயிட்டதா பேப்பர்லே படிச்சேனே...?

சுந் : ஆமாம் சுமதி! விபத்திலே சிக்கியது உண்மைதான். ஆனால் உயிர்போகல்லே, கண்போயிட்டுது.

சும : வாங்க!

கையைப் பிடித்து ஹாலுக்கு அழைத்துச் செல்கிருள். நளினி இதைக் கவனித்துவிட்டுப் போய்விடுகிருள்.

சுந் : நான் என் கண்களை இழந்த போது இந்த உலகம் சூனியமாகி விட்டதை உணர்ந்தேன். எழில் பெற்ற இயற்கையன்னை என் பார்வையிலிருந்து மறைந்து விட்டாளே என்று கதறினேன். எதிர் காலத்தில் வாழ அருகதையற்று விட்டேனே என்று அலறினேன். ஆனால், உன் அன்புக் கரங்கள் நீட்டி என்னை ஆவலோடு வரவேற்று, அத்தனையும் மறக்கச் செய்து விட்டாய். சுமதி! ஆசையோடு வந்திருக்கிறேன். காலம் மாறி விட்டது. அன்று நீ சொன்னுயே, உன் கருத்திலே கொண்ட காதல் மாருது என்று, அந்த உறுதியோடு வந்திருக்கிறேன், சுமதி ! கவிதைகளைப் படித்துக் காட்டு, உன் பக்கத்திலேயே இருந்து உன் உதவியினுல் உலகத்தைப் பார்க்கிறேன்.

சும : (உதடுகள் துடிக்க) மன்னிக்கணும். நான் மணமானவள்.

சுந் : (திடுக்கிட்டு) நீ மாற்ருனின் மனைவியா ! உணர்ச்சிப் பெருக்கிலே ஏதேதோ பேசி விட்டேன். என்னை மன்னித்துக் கொள். இன்றுதான் நான் உண்மையிலேயே குருடனுகி விட்டேன். என் இதயத்தில் ஒளி வீசிக் கொண்டிருந்த அந்த அகல் விளக்கும் அணைந்து விட்டது. நான் வருகிறேன். நீ சகல சௌபாக்கியங்களோடு சந்தோஷமாக இரு. நான் போகிறேன் !

கிளம்பி நடக்கிருன்.

சும : கொஞ்சம் உட்காருங்கள். என்னேடு சிறிது நேரம் பேசிவிட்டுப் போங்கள்

சுந் : உன்னேடு நான் என்ன பேசப் போகிறேன்? அப்படிப் பேசினுல் உன்னைப்பற்றி உன் கணவர் என்ன நினைப்பார்? உலகம் தூற்றுமே, நம் மாசற்ற உறவைக் கண்டு. சே...சே...என்னல் உன் பெயருக்குக் களங்கம் ஏற்பட வேண்டாம்.

சும : என் கணவர் இப்போது என்னேடு இல்லை.

சுந் : ஹா...உன்னேடு இல்லையா?

சும : ஆமாம். உங்களுக்காக ஆயிரம் வருடங்களானுலும் காத்திருக்க நான் தயாராயிருந்தேன். ஆனல் நீங்கள் மரணமடைந்த செய்தியைக் கேட்டதும் என் மனம் உடைந்து விட்டது. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் என் வாழ்க்கையை மாற்றியமைத்து விட்டன. நான் ஒரு வயோதிகருக்கு வாழ்க்கைப் பட்டேன். அவர் காதலுக்குகந்த மனைவியாக அல்ல; அவருக்கு ஊழியம் செய்யும் வெறும் வேலைக்காரியாக. ஆனல் தன் தவறை உணர்ந்த அவர் என்னை மணந்த மறுநாளே அவர் சொத்துக்கு என்னை வாரிசாக்கி விட்டு எங்கேயோ போய் விட்டார். என் திருமண நாளன்றே என் தந்தையும் மனம் தாளாது மாண்டு விட்டார்.

சுந் : சுமதி...சுமதி! என்னுல் தாங்க முடியவில்லையே. நாம் இருவரும் பூத்துக் குலுங்க வேண்டிய பருவத்திலே உதிர்ந்த சருகாகி விட்டோமே. நீ இல்லாமல் நான் எப்படி வாழ்வேன் சுமதி?

சும : நானில்லாமல் எங்கே போய் விட்டேன்? உங்கள் அருகிலேயே எப்போதும் இருப்பேன்.

சுந் : உண்மையாகவா சுமதி? எங்கே உனது கைகள் !

அவள் கைகளைப் பிடிக்கத் தன் கைகளை நீட்டுகிருன்.

சும : சுந்தர் ! நான் மணமானவள் என்பதை மறந்து விட்டீர்களா?

சுந் : சுமதி...!

சும : நீங்கள் என் நண்பர். நமக்குள்ளே இருக்க வேண்டிய உறவு அவ்வளவுதான். தூய்மையான எண்ணத்தோடு இங்கு வாருங்கள். உங்களுக்காக என்றும் இந்த வாசல் திறந்திருக்கும். என்னேடு தினமும் பேசுங்கள். அமைதி தேடி அலையும் எனக்கு நீங்களாவது சிறிது அமைதி தாருங்கள்.

சுந் : சுமதி நம்மைப் பற்றி மற்றவர்கள் தவருக நினைத்தால்...?

சும : மனச்சாட்சிக்குப் பயந்து வாழும் மனிதர்கள் மற்றவர்களுக்குப் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

சுந் : உன் ஒப்பற்ற உள்ளத்தை உணர்ந்து கொண்டேன் சுமதி. அப்பா காத்துக்கிட்டிருப்பார். நான் நாளைக்கு வருகிறேன் . ஆனாலும்சுமதி என் வாழ்வின் வழிகாட்டியாக இப்போது நீதான் இருக்கிறாய்.

வீடு திரும்பும் சுந்தர் தந்தையிடம் கதறுகிறான்.

சுந் : வாழ்வா ? இனி ஏதப்பா வாழ்வு ? சீர்திருத்தம் பேசும் இந்தச் சமுதாயம் அந்தச் சிங்காரப் பைங்கிளியின் சிறகுகளை வளர விடாமல் வெட்டி விட்டதே. புனித தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்ய வேண்டிய என் புத்தம் புது மலரைப் புழுதியிலே எறிந்து விட்டதே அப்பா. என் எண்ணங்கள், கனவுகளெல்லாம் சிதறிப் போய் விட்டனவே அப்பா. அழகான என் ஓவியத்தை நாசமாக்கி விட்டார்களே. கற்பனையின் சிகரமாய் அமைந்த என் சிலையை சுக்கல் நூறாக உடைத்தெறிந்து விட்டார்களே !

தயா : (தன் மார்பைப் பிடித்துக் கொண்டு) சாந்தமாக இரு சுந்தர். மனிதன் எதையும் இழக்கலாம். ஆனால் மன உறுதியை மட்டும் இழக்கக்கூடாதப்பா. உன் முகம் பொலிவாக இருந்தால்தானே நான் சந்தோஷமாக இருக்க முடியும் ? சுந்தர், வா, சிறிது நேரம் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு.

கட்டிலில் படுத்தவன் திடீரென்று எழுந்து பேசுகிறான்.

சுந் : அப்பா... ..

தயா : என்ன சுந்தர் ?

சுந் : என் சுமதி இனி என்னுடையவளாகமாட்டாளா ?......,சொல்லுங்களப்பா. சொலலமாட்டீர்களா? உங்கள் மகன் இப்படி வெறி பிடித்து அலைகிறானே என்று அவமானமாக இருக்கிறதா ? பிறர் மனைவியின் மீது ஆசைப்பட்டு அழிந்து போகிறானே என்று வெட்கப் படுகிறீர்களா? உங்கள் மகன் நல்லவனப்பா, உங்கள் மகன் நல்லவன்.

தயா : மகனே ! உன் நெஞ்சக் குமுறல்களை யெல்லாம் இப்படி வார்த்தைகளிலே வடித்தெடுத்தால் என்ன பலன் ? சிறிது நேரம் அமைதியாகத் தூங்கப்பா......

பம்பாய் எம்பஸி தியேட்டரில் 'ஔவையார்' விசேஷக் காட்சியின் போது பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய் படம் பார்த்துவிட்டு வருகிறார். ஜெமினியின் இப்படம் பொங்கல் தினத்தன்று தமிழ் நாடெங்கும் மீண்டும் வெளிவரவிருக்கிறது.

படுத்த சுந்தர் மீண்டும் எழுந்திருக்கிறுன்.

சுந்: அப்பா...

தயா: ஏன்?

சுந்: வயதாகி விட்ட மனிதர்களுக்கு இதயமே கிடையாதா அப்பா?

தயா: (திடுக்கிட்டு) ஏன் சுந்தர்?

சுந்: பருவத்துடிப்பிலே நிற்கும் என் சுமதியை மனைவியாக்கிக் கொண்ட பாதகன் ஒரு கிழவனுமே அப்பா. நடுங்கும் தன் கரங்களினுல் அந்தக் கயவன் என் காதலியின் கழுத்தில் மாலே சூட்டும்போது, இந்தச் சமூகம் அட்சதை தூவி ஆசிர்வதித்ததாமே! பரமனின் பாதங்களைத் தேட வேண்டிய வயதிலே உலகமறியாத ஒரு பெண்ணின் இளமையை நாடினுன், அந்த நயவஞ்சகன். அந்தப் பாவியைச் சித்திரவதை செய்து சாக அடித்தால்கூட என் நெஞ்சத்தின் குமுறல் அடங்காதப்பா.

தயா: மகனே! அந்தப் பொறுப்பை நீ என்னிடம் விட்டுவிடு. உன் ஆசைக் காதலியின் வாழ்வை நாசமாக்கிய அந்தப் பாதகனை நானே தேடிப் பிடித்து உன் எதிரிலேயே சிறுகச் சிறுகச் சாகடிக்கிறேன். நீ மட்டும் வீணுக உடம்பை அலட்டிக் கொள்ளாதேப்பா.

சுந்: உயிரே துடிக்கும்போது உடம்பைப்பற்றிக் கவலே ஏது? அப்பா! அவள் இன்னும் என்னைக் காதலிக்கிருள். என்மேல் உயிராயிருக்கிருள். ஆனுல் அப்பா, அவள் உள்ளத்தில் எனக்கொரு இடத்தைத் தந்தாளே தவிர, வேறு எந்தவித உரிமையையும் தர மறுத்து விட்டாள். ஏனப்பா அப்படி?

தயா: அவளிடம் பெண்மை இருக்கிறது.

சுந்: இந்த அற்புதமான பெண்மையை அவளே மணந்தவன் ஏனப்பா அறியாமல் போய்விட்டான்?

தயா: ..தூங்கப் போகிருயா இல்லேயா சுந்தர்?

சுந்: தூங்குகிறேனப்பா. தூங்குகிறேன். அவள் என்னை தினமும் வரச் சொன்னுள். நான் போகட்டுமா?

தயா: தாராளமா...

படுத்துக் கொள்ளுகிருன் சுந்தர்.

காட்சி 11

சலனமும் வைராக்கியமும்

சுமதியின் மனதை அறிய முயலுகிருள் நளினி. ஆனுல் அவளால் எந்த முடிவுக்கும் வரமுடியவில்லே. சுந்தர் மறுதினம் வந்து மனம்விட்டுப் பேசுகிருன். சுமதியின் உபசாரம் அவனை ரொம்பவும் மகிழச்செய்கிறது.

சுந்: சுமதி! சென்னையில் நான் உங்க வீட்டில் தங்கியிருக்கும்போது எத்தனை தடவை இந்தமாதிரி என்னை உபசரித்திருப்பாய்? உனக்கு நினைவு இருக்கிறதா?...அப்போது எத்தனை மனக்கோட்டைகள்கட்டியிருப்போம். திறந்த வானத்தில் பறந்து திரியும் வானம் பாடிகளைப்போல் பழகினேமே, எல்லாவற்றையும் நீ மறந்துவிட்டாயா? பார்ப்பதிலே இன்பம். பேசுவதிலே இன்பம்...பழகுவதிலே இன்பம். (சுமதி அழுவதைக்கேட்டு) சுமதி, அழுகிருயா? ஏன் அழவேண்டும்? யோசித்துப்பார். நீயும் பெண் தானே! உலக இன்பங்கள் தானே. காதல் சோலேயில் களிப்போடு திரிய வேண்டிய பருவத்திலே பாலேவனத்தில் அலேகிருயே சுமதி!...உன்னை மணந்த அந்த இதய மற்றவனே உன்னை விட்டு எங்கேயோ போய் விட்டான். நானும் நீயும் வாழத் துடிக்கிறேம். நாம் இருவரும் கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழ்ந்தால் என்ன?...சுகமாக வாழ்ந்தால் என்ன?

சும: (எழுந்து ஆத்திரத்துடன்) போதும் பேசியது! பெணகள் உணர்ச்சி வசப்பட்டவர்கள் என்ற தைரியத்திலே நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள். இனி என்னுல் பொறுக்க முடியாது. நீங்கள் இந்த இடத்தை விட்டுப் போய் விடுங்கள்.

சுந்: சுமதி...நான் பேசியது தவரு?

சும: மன்னிக்க முடியாத தவறு. உள்ளத்தில் ஏற்பட்ட வெறியிலே என் நிலேமையை யறியாது ஏதேதோ பேசுகிறீர்கள். நான் அன்னியன் மனைவி என்பது அடியோடு மறந்து

மனிதத் தன்மையை இழந்து விட்டீர்கள். மாங்கல்யத்திற்கு மதிப்புக் கொடுக்கும் ஒரு தமிழ்ப் பெண் நான். அதன் சக்தியிலே தூய்மையாக வாழ்கிறேன். இதைப் புரிந்து கொள்ளும் அறிவு உங்களுக்கு இல்லையென்றால் அதற்காக வெட்கப் படவேண்டும்.

சுந் : மன்னித்து விடு சுமதி, மன்னித்து விடு. பாழும் உணர்ச்சி என் மனச்சாட்சியை மாசு படுத்தி விட்டது.

சும : இனியும் நம் உறவு நீடித்தால் அந்தப் பாழும் உணர்ச்சி நம்மை மிருகங்களாக்கி விடும். கணவனின் பாதங்களே அடைக்கலம் என்று வாழும் உத்தமிகளுக்கு என்னால் தலை குனிவு ஏற்பட்டுவிடும். இனி என்னை சந்திக்க வேண்டாம். போய் விடுங்கள். இனி இங்கு வராதீர்கள். போய் விடுங்கள்.

சுந்தர் தட்டுத்தடுமாறிப் போனதும் சுமதி சோபாவில் விழுந்து முகத்தை மூடிக் கொண்டு அழுகிறாள். வீடு திரும்பிய சுந்தர் கட்டிலில் படுத்து அழுகிறான்.

தயா : அழு சுந்தரம், நன்றாக அழு. என் மகனாய்ப் பிறந்ததற்கு நீ அழுது அழுதுதான் சாகவேண்டும்.

சுந் : அப்படிச் சொல்லாதீர்களப்பா, அப்படிச் சொல்லாதீர்கள். இந்தக் கைகளின் அணைப்பில் தான் எனக்கு இன்னும் வைத்தியம் பிடிக்காமல் இருக்கிறது. இல்லாவிட்டால் தெருத் தெருவாக நாயைப் போல் அலைந்து திரிந்திருப்பேன். கல்லடி பட்டுக் கண்ணீர் சிந்தி உருத் தெரியாமல் அழிந்து போயிருப்பேன்,

தயா : மகனே ! உன்னிடம் பிச்சை கேட்கிறேன்.

சுந் : அப்பா. .

தயா : ஆமாம்...நீ இனிமேல் இப்படி அழக்கூடாதப்பா. நான் இப்போதே போய் அந்தப் பெண்ணின் கால்களிலே விழுந்து கெஞ்சியாவது உன்னை ஏற்றுக் கொள்ளும்படிச் செய்கிறேன்.

சுந் : வேண்டாமப்பா. நீங்கள் அங்கே போக வேண்டாம். அவள் கணவன் உயிரோடிருக்கும் வரையில் அவள் மனதை யாராலும மாற்ற முடியாது.

தயாபரரின் மனம் துணுக்குற்று முகம் மாறுகிறது. சுந்தர் தொடங்குகிறான்.

சுந் : என்னால் இனிமேல் யாருக்கும் துன்பம் இருக்காது. நான் அவளை மறந்துவிடப்போகிறேன்.

அவன் படுத்துக் கொண்டதும் மனமொடிந்த தயாபரர் வீட்டைவிட்டு ஓடத் துணிகிறார். ஆனால் புத்திர பாசம் விடவில்லை.

காட்சி 12

தவறும் தண்டனையும்

தயாபரர் தான் இறந்து விட்டதாக வேறொருவர் மூலம் செய்தி அனுப்பவே சுமதி விதவைக்கோலம் பூணுகிருள்.

அன்று ஒரு நாள் சுமதியைப்பற்றி கோபுவிடம் கூறுகிருள் தளினி. அவன் சுமதியின் நடவடிக்கைகளைக் கவனிக்கும்படிக் கூறிப்போகிருன். இரவு சுந்தர் மனப்போராட்டம் தாளாது சுமதியின் வீட்டுக்குக் கொட்டும் மழையிலே போகிருன். அங்கே அவளுக்குப் பிரியமான "சிற்பி செதுக்காத" என்ற பிரேமகீதத்தைப் பாடுகிருன். சுமதி தாங்க முடியாமல் ஓடி வருகிருள். கோபு இதை மாடியிலிருந்து கவனிக்கிருன்.

சுந் : சுமதி!

சும : சுந்...தர்..!

சுந் : சுமதி! உன்னைச் சந்தித்து உனக்குச் சங்கடத்தை உண்டாக்க வேண்டாமென்று இத்தனை நாட்கள் என் மனதைக் கட்டுப் படுத்தி இங்கு வராமலிருந்தேன். ஆனல், உன்னுடன் பேசாவிட்டால் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும்போலிருக்கிறது. ஆகையினல் உன்னுடைய கட்டளையை மீறி இங்கு வந்து விட்டேன். என்னை மன்னிப்பாயா?

சும : மாசற்ற உங்கள் அன்பிற்கும் மன்னிப்பா? மழையில் நனைகிறீர்களே!

சுந் : உம்...வேதனையால் வெந்துருகும் என் உள்ளத்திற்கு உடம்பிலே படும் இந்த மழையை உணரும் சக்தி ஏது சுமதி?

சும : என்னைப் பார்ப்பதற்கா இந்த இரவில் வந்தீர்கள்?

சுந் : இல்லை சுமதி, இல்லை. உன்னைப் பார்ப்பதற்காக நான் இங்கே ஏன் வரவேண்டும்? எந்த நேரத்திலும் மானசிகமாக நான் உன் உருவத்தைத் தவிர, வேறு எதையுமே பார்ப்பதில்லை சுமதி. உன்னுடன் பேச வந்திருக்கிறேன்.

சும : உள்ளே போகலாமா?

சுந் : எனக்கு அனுமதி உண்டா?

சும : அன்று ஆத்திரத்தில் பேசி விட்டேன்.

சுந் : இன்று அதை மாற்றிக் கொள்ளுகிருயா...?

சும : ஆமாம்.

சுந் : கதவுகள் திறந்திருக்கின்றனவா?

சும : ஒன்றும் புரியவில்லையே! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

சுந் : உன் இதயக் கனவுகளைப் பற்றிச் சொல்லுகிறேன். உன் மனக் கோவிலில் எனக்கு இடம் கிடைக்குமா என்று கேட்கிறேன். அன்பு மலர்களால் நீ செய்யும் பூஜைக்கும் நான் அருகதை யுடையவன்தானு என்றுஅறியவிரும்புகிறேன் (கையைப் பிடித்து) சுமதி! இப்படி உட்காரு... சுமதி! இந்தக் கொதிக்கும் கரங்களின் ஸ்பரிசத்திலே உன் உணர்ச்சியின் வேகத்தை அறிகிறேன். அழகிய மலர் புழுதியில் புரண்டு நாசமாகி விடக்கூடாது. புயலில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த உள்ளங்கள் இரண்டும் இன்று ஒன்று சேரட்டும். அலைகடலிலே அசைந்தாடும் படகுகள் ;இரண்டும் ஒன்ருக ஒரே திசையை நோக்கிப் பிரயாணம் செய்யட்டும். நாம் இருவரும் இனி இநத மேடையைச் சாஸ்வதமாக்கிக் கொண்டு ஆயிரம் வருடங்களானலும் இணைபிரியாமல் வாழ்வோம், சுமதி! சுமதி!! நீ என்னுடையவள்...என்னுடையவள்...

உணர்ச்சியால் ஒரு சிறிது சலனப்பட்ட சுமதியின் மனம் சாந்த மடைகிறது. பெண்மை தலை தூக்கியதும் அவள் காளியாகிருள். கொழுந்து விட்டெரியும் அவள் கோபத்தின் ஜ்வாலை சுந்தரை கண்மூடித்தனமாக அடித்தபின்பே அடங்குகிறது.

காட்சி 13

கண் தெரிந்தது! ஆனல்...

கோபுவின் உதவியுடன் சுந்தர் வீடு திரும்புகிருன். அவன் கோலத்தைக் கண்டு துடிக்கிருர் தயாபரர்.

தயா : ஆ.. சுந்தரா! என் மகனுக்கு என்ன நேர்ந்து விட்டது?

தயாபரரை தனிமையில் அழைத்துச் சென்ற கோபு விஷயமறிந்துஅவனது

கண்களுக்குப் பார்வையைத் திரும்பப் பெற்றுத் தருகிருன். சுமதியை காணக்கிளம்பும் சுந்தரை அனுப்பி விட்டு வீட்டுக்குத் தள்ளாடியபடி திரும்புகிருர் தயாபரர். அவரது உடல் தள்ளாடினுலும் உள்ளம் உறுதி பெற்றிருக்கிறது

இது யார் சுமதி ..?

சுந்தரும் கோபுவும் சுமதியின் அறைக்கு ஓடுகின்றனர். அங்கே தயாபரர் படம்! ஹா...அவளை அணைத்துக்கொள்ள வந்தவன் அவள் அணைப்பிலே வளர வேண்டியவனு? பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது சுந்தருக்கு.

சுந் : இது யார் சுமதி? ... இது யாரு? .. சுமதி ... யார் ... யார்? யார் சுமதி? சொல் சுமதி...இது யாரு?

சும : (கண்களில் நீர் மல்க) என் கணவர்!

சுந் : கணவர்...! என் அப்பா உன் கணவர் ..அப்பா...உன் கணவர்...அப்பா...நான் பாவி...சண்டாளன் ... அப்பா ... அப்பா ...அப்பா... அப்பா...(ஓடுகிருன்)

சாவிலே சாந்தி

தயாபரர் சாய்வு நாற்காலியில் பிணமாகக் கிடக்கிருர். வாழ்விலே கிட்டாத சாந்தி அவருக்குச் சாவிலே தான் கிடைத்தது. மகனுக்காக உயிரைத் தியாகம் செய்த அந்தப் புனிதரின் கால்களில் வந்து விழுகிருன், விவரமறியாத அபாக்கியவான் சுந்தர்.

சுந் : அப்பா ... அப்பா ...! நான் பாவி...பழிகாரன், தருமத்தைக் கொன்று விட்டேன். நீதியை அழித்து விட்டேன். உங்கள் மனைவியைக் காதலித்த சண்டாளனுகி விட்டேன். என்னைத் தெய்வம் மன்னிக்காது. ஆனுல் உங்கள் உயர்ந்த மனம் என்னை மன்னித்தால் போதுமப்பா. ஐயோ, நினைத்தாலும் நெஞ்சம் வெடித்து விடும் போலிருக்கிறதே. மகனின் ஆசையை நிறைவேற்ற இவ்வளவு பயங்கரமான தியாகத்தை இதுவரையில் யாருமே செய்ததில்லையப்பா. என் மிருக வெறியை நினைத்தால் என் நெஞ்சம் குமுறுகிறதே. அப்பா! உங்கள் அன்புக் கரங்களினுல் அணைத்து என்னை 'மன்னித்தேன்' என்று ஒரு வார்த்தை சொல்லுங்களப்பா...... பேசமாட்டீர்களா ..என்னுடன் பேசமாட்டீர்களா அப்பா...(தலை சாய்வதைக் கண்டு) ஹா... அப்பா...போய் விட்டீர்களா? அப்பா... அப்பா...

எதிர்பாராதது...!

சுமதி, கோபு, நளினி ஆகியோர் ஓடிவருகின்றனர். சுமதி தயாபரரின் உடலைக் கண்டதும் 'ஆ'வென்று அலறி நளினியின் மார்பில் முகம் புதைக்கிருள். கோபு தயாபரரின் கடிதத்தை எடுத்துப் படிக்கிருன்.

'சுமதி !'

நான் மரணத்தின் வாசலிலே நின்று கொண்டு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். 'வயோதிக வயதிலே ஒரு இளம் பெண்ணின் வாழ்வைப் பாழ் செய்கிருேமே' என்ற உணர்வுகூட இல்லாமல் உன்னை மணம் செய்து கொண்டேன். ஆனுல், நீ என் சொந்த புதல்வனின் காதலி என்பதை உணர்ந்த போதுதான் என் உள்ளம் தடுமாறியது. நெஞ்சம் துடித்தது. நேர்மையற்ற செயலைச் செய்து விட்டேனே என்று அலறினேன். செய்த குற்றத்திற்குப் பிராயச் சித்தம் தேடி ஊர் ஊராக அலைந்தேன். தெய்வங்களின் எதிரே கதறினேன். எந்தக் கற்சிலையும் எனக்கு ஆறுதலளிக்கவில்லை. சாந்தியைத் தேடி அலைந்த நான் என் செல்வனைத்தான் கண்டேன், குருடனுக. அந்த அபாக்கியவான் விரும்பிய பொருளை அளிப்பதாகச் சத்தியம் செய்தேன். அவன் ஆவலை நிறைவேற்ற என்னுல் முடிந்த வரையில் பாடுபட்டேன். முடியவில்லை. சுமதி...என்னை மன்னித்து நடந்ததை மறந்துவிடு.

—தயாபரர்.'

கோபு : சுமதி! அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டுமானுல்.....

சும : நான் வாழத்தானே அண்ணு வேண்டும்? ஆம்...நானும் வாழத்தான் ஆசைப்படுகிறேன். கற்புக் கரசிகள் பிறந்த கன்னித் தமிழ் நாட்டின் சின்னஞ் சிறிய பெண்களின் இதயத்திலே வாழ ஆசைப்படுகிறேன். கைப்பிடித்த கணவனை கண்

கண்ட தெய்வம் என்று போற்றும் கண்ணகியின் பரம்பரைக்கு களங்கம் உண்டாக்காமல் வாழ ஆசைப்படுகிறேன். நியாயமும் நேர்மையும் நிறைந்த நெஞ்சங்களிலே நீடூழி வாழ ஆசைப்படுகிறேன். தாய்க் குலத்தின் பெருமையை தாழ்த்தாமல் இருக்க நானும் ஒரு தாயாக வாழ ஆசைப்படுகிறேன். அண்ணா, நானும் ஒரு தாயாக வாழ ஆசைப்படுகிறேன்.

சுந் : (சுமதியிடம்) அம்மா. .அம்...மா ! அழியாத புகழை அடைந்து விட்டாயம்மா. வள்ளுவன் வகுத்த நெறிக்கு வழிகாட்டியாக அமைந்து விட்டாயம்மா. மாதர் குல மாணிக்கமாய்...மனித சமுதாயத்தின் இதய வானத்திலே புதியதோர் தாரகையாய் பெருவாழ்வு வாழ்ந்தாய்...என் மனதிலே மண்டிக்கிடந்த மாசைத் துடைத்து என்னை மனிதனாக்கி விட்டாய். இன்னமுதூட்டி இன்பத் தாலாட்டிய என் சொந்த தாயைவிட நீ எனக்குச் சிறந்த தாயாகி விட்டாய். எதிர்ப்பட்ட இன்னல்களை எடுத்தெறிந்து மின்னலெனத் தோன்றி மறையும் ஆசைக்கு அடிமையாகாமல் உணர்ச்சியோடும் உள்ளத்தோடும் போராடி வெற்றி பெற்ற நீ பூஜைக்குரிய புனித தெய்வமாகி விட்டாய்... பெண் தெய்வமாகி விட்டாய்.

சுந்தர் அவள் காலிலே விழுகிறான். சுமதியும் சிலையாகிறாள். சுந்தர் மீண்டும் அமெரிக்கா செல்கிறான்.

காட்சி 14

முடிவுரை

சுமதியின் காதல் மாண்டது; கணவன் மாண்டான்; தந்தை மாண்டார், அவள் ஆசைகள் எல்லாமே மாண்டன. ஆனால் ஆண்டவன் அவளுக்கு மகனைக் கொடுத்தார். தான் பெறாத பிள்ளைக்கு தாயாவதன் மூலமாவது அந்த அபாக்கியவதிக்குச் சாந்திதர ஆண்டவன் அருள் பாலித்தார் போலும். சுமதி நேர்மையின் பிம்பம்-சத்தியத்தின் இருப்பிடம். அவள் மாதர்குலமாணிக்கம். பெண் தெய்வம். அந்தப்பெண் தெய்வம் பாரதப் பெண்களுக்கு வழிகாட்டுமாக! ★

'நவாப்'பின்

குமார விஜயம்

ஸ்ரீகுமரகுரு, சரவணபவன், கார்த்திகேயன், ஆறுமுகன், தகப்பன்சாமி, வள்ளிமணாளன் முதலிய ஏராளமான பட்டப் பெயர்களைத் தாங்கியுள்ள ஸ்ரீ சுப்ரமண்யருக்கு அப்பெயர்கள் எப்படி ஏற்பட்டன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், நவாப் ராஜாமாணிக்கம் கம்பெனியார் சென்னை ஒற்றைவாடையில் நடத்திக் கொண்டிருக்கும் 'குமார விஜயம்' என்ற அற்புதமான நாடகத்தைப் பார்க்க வேண்டும்.

சினிமாப் படத்திலே கூடக் காண முடியாத பல ஒளி ஜாலங்களையும் தந்திரக் காட்சிகளையும் வெகு தத்ரூபமாகக் காட்டுகிறார்கள் மேடையிலே. சரவணப் பொய்கை, கையிலை, பிரம்மலோகம் முதலிய காட்சி ஜோடனைகள் மெய் சிலிர்க்க வைக்கின்றன. ஒரு சின்னஞ்சிறு குழந்தை பால முருகனாக வந்து ஜாஜ்வல்யமான ஆடையணிகளுடன் கார்த்திகைப் பெண்களுக்கு நடுவிலே நர்த்தனமாடும் போது நமது உள்ளங்களும் குதூகலிக்கின்றன. தெய்வ பக்தியை ஊட்டும் இந்த நாடகத்தை யாவரும் அவசியம் பார்க்க வேண்டும்.



1, 2. குமார விஜயம் நாடகக் காட்சிகள். 3. நிதி மந்திரி பாராட்டுகிருர்.





89682

பின்னணிக் குயில்

பி. லீலா

வாஹினியின் 'குணசுந்தரி கதா' என்ற படம் திரையிடப் பட்டது. அந்தப் படத்தில் 'ஓ மாதா' என்ற அருமையான பாடலைப் பாடிய ஆந்திரச் சகோதரி யார் என்பதை யறிய முயன்றவர்கள் ஆச்சர்யப்பட்டார்கள்! ஏனென்றால் அதைப் பாடியவர் ஆந்திர பாடகி அல்ல, மலையாள மங்கை என்பதுதான்! ஆமாம், பிரபல பின்னணி பாடகியாக இன்று விளங்கும் லீலாவுக்கு மகத்தான புகழ் கொடுத்தது 'குணசுந்தரி கதா' தெலுங்குப் படம்தான். அன்று முதல் இன்று வரை அவர் ஈடிணையற்ற பாடகியாக ஓய்வு ஒழிவின்றி உழைத்து வருகிறார்.

சாரண இயக்கத்தில் ஒரு பெரிய புள்ளியாக இருந்த லக்ஷிய ஆசிரியர் ஈ. கே. கே. மேனனை அறியாதவர்கள் கொச்சியில் இருக்கவே முடியாது. சித்தூரைச் சேர்ந்த அவருக்கும் மனைவி மீனாக்ஷிகுட்டியம்மாளுவுக்கும் மூன்றாவது குமாரியாக 1931-ம் வருஷம் பிறந்தவர்தான் லீலா. அவரது பெற்றோர்கள் சங்கீதத்தில் மிகுந்த பற்றுடையவர்கள். லக்ஷண சங்கீதம் என்றால் அவர்களை சபையின் முன் வரிசையில் பார்க்கலாம். அந்த வழி வந்த லீலாவுக்கும் சங்கீதத்தில் ஆர்வமிருந்ததில் வியப்பில்லை. தகுந்த வயதில் லீலா பள்ளிக்குச் சென்றார். ஆனால் அவருக்கு அதைவிட இசையில்தான் அதிகப் பிரியம் இருந்தது. மணி பாகவதரிடம் சிக்ஷை பெற்றார். பள்ளிக்கூடத்தில் சங்கீதப் போட்டிகளில் அவர் பதக்கங்கள் பரிசு பெற்றார். குமாரியின் சங்கீத ஆர்வத்தைக் கண்ட தகப்பனார் சென்னை வந்து அவரைச் சங்கீதத்தில் ஈடுபடுத்தத் தீர்மானித்தார்.

மூன்றாம் பாரத்துடன் படிப்பை நிறுத்திவிட்டு 1944-ல் சென்னை வந்தார் லீலா. மறுவருஷமே அதாவது 1945-ல் அவர் சென்னை சங்கீத வித்வத் சபையில் ராகம்-தானம்-பல்லவி போட்டியில் வெற்றி பெற்று பரிசாக பதக்கம் பெற்றார். அதே வருஷம் தான் அவரது முதல் சங்கீதக் கச்சேரியும் சென்னையில் நடைபெற்றது. ஆந்திர மஹிலசபாவில் முதன் முதலாக பி. லீலா கச்சேரி செய்தபோது அதற்கு விஜயம் செய்திருந்த துர்க பாய் தேஷ்முக் அவரது திறமை வெகுவாகப் பாராட்டி கோப்பை பரிசாக அளித்தார். அப்போது லீ வுக்குப் பின்னணியில் பாடவேண் என்ற தனி ஆசைகிடையாது. நாடக சங்கீதத்தில் தேர்ச்சியும் பு ழும் பெற்று விளங்க வேண்டுமென் தான் ஆசைப்பட்டார். சென்னை வ ததுமே சங்கீத சிக்ஷையை ஆரம்பி துக் கொண்டார்.

முதன் முறையாக லீலா பட உ கில் பின்னணி பாடகியாகப் புகுந்தது 'கங்கணம்' படத்தின் மூலம்தான். பிறகு முபாரக் 'பில்ஹணா'விலும் 'பக்தகபீர்' கன்னட படத்திலும் பாடினார். அடுத்து வந்த படம்தான் குணசுந்தரி கதா.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பாஷைகளில் சுமார் முன்னூறு படங்களுக்கு மேல் லீலா பாடியிருக்கிறார். கர்நாடக சங்கீத பின்னணி பாடல்களில் லீலாவுக்குத் தனிப் புகழ் உண்டு. லீலா சென்னை வந்தபின் காலஞ்சென்ற ஸி. ஆர். சுப்பராமனிடம் சுமார் இரண்டு வருஷங்கள் சிக்ஷைபெற்றார். தற்போது வி. தக்ஷிணாமூர்த்தியிடம் சிக்ஷை பெற்று வருகிறார். படங்களில் பின்னணி பாடும் ஏராளமான சந்தர்ப்பங்களுக்கிடையே அவர் கர்நாடக சங்கீதத்தை வளர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

லீலா ரேடியோ பாடகியும்கூட. ரேடியோவில் இசை, மலையாள நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் கலந்து கொண்டிருக்கிறார். இசை தட்டுகளுக்கும் பாடி யிருக்கிறார்.

தற்போதுலீலா மிஸ்ஸியம்மா (தமிழ், தெலுங்கு), எல்லாம் இன்ப மயம், கிரஹலக்ஷ்மி, உலகம் பலவிதம், கதா நாயகி, குடும்ப விளக்கு, சினேகசீமா (மலையாளம்), சக்குபாய் (கன்னடம்) ரேசுகா (தெலுங்கு), கோகுல் பிக்சர் ஸாரின் படம் ஆகியவற்றில் பாடியிருக்கிறார்.

லீலாவுக்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருக்கிறார்கள். லீலா குடும்பத்தாருடன் சென்னையிலேயே நிரந்தரமாகத் தங்கியிருக்கிறார். கடவுள் பக்தி மிகுந்த அவருக்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் பூரணமாக அனுக்ரஹித்திருக்கிறார்.

"பரணிகுமார்"

டிசம்பர் வெளியீடு

ஸ்ரீ சுந்தர் பிக்சர்ஸ்

வீரசுந்தரி

(தமிழ் ஸ்டண்டு படம்)

K.B.J.சுந்தராம்பாள்...K.B.ஜானகிரும்...ஸ்டண்டு சோமு பார்டி
சாயிராம்..தமாரி ராஜம் *மற்றும் பலர்.*

பூரண விநியோகஸ்தர்கள் :

தாஜ்மஹால் பிக்சர்ஸ்

வரதாமுத்தியப்பன் தெரு, மதரூஸ்-1.

அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்கள்
P.A.R.
P.A. ராஜு செட்டியார்
& பிரதர்
கோயமுத்தூர்
தந்தி: "ராஜா"
போன்: 268